படைப்பு

ஊற்று: 2 | நதி: 5 | செப்டம்பர் 2019 | திங்களிதழ்

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## "நான் என்றென்றும் கவிஞனாகவும் கவிதை உபாசகனாகவும் இருக்க வாய்க்கும்படி வாழ்வை இறைஞ்சுகிறேன்"

■ படைப்பாளர் யூமா வாசுகியுடனான நேர்காணல்



இணையத்தில் ஓர் இலக்கியப்புரட்சி
– கவிஜி



'தச்சன் வீட்டு யானை பொம்மை' பரிசளித்த பேரானந்தம்
– முகில்நிலா_தமிழ்



"கவிதை எழுதத் தெரியாதவர்களே ஹைக்கூ எழுத வருகிறார்கள்"
– நா.விச்வநாதன்

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 2 | நதி : 5 | செப்டம்பர் 2019

நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**

தலைமை நிருபர்:
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக்**

ஓவியக் கலைஞர்கள்:
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே, படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** - பக். 04
- **“நான் என்றென்றும் கவிஞனாகவும் கவிதை உபாசகனாகவும் இருக்க வாய்க்கும்படி வாழ்வை இறைஞ்சுகிறேன்”**
  - படைப்பாளர் யூமா வாசுகியுடனான நேர்காணல் - பக். 05
- **இணையத்தில் ஓர் இலக்கியப் புரட்சி**
  - கவிஜி - பக். 16
- **நிறைவேறிய காதல் கனவு**
  - அகதா - பக். 30
- **சி.மணி**
  - முகம்மது பாட்சா - பக். 31
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் - பக். 35
- **‘தச்சன் வீட்டு யானை பொம்மை’ பரிசளித்த பேரானந்தம்**
  - முகில்நிலா_தமிழ் - பக். 37
- **நீர்ச் சிக்கனக் கையேடு**
  - கோ.லீலா - பக். 41
- **“கவிதை எழுதத் தெரியாதவர்களே ஹைக்கூ எழுத வருகிறார்கள்”**
  - நா. விச்வநாதன் - பக். 42
- **ஆதித்தாய் ஈன்ற கவிதைகள்**
  - சலீம் கான் - பக். 48
- **ஷான் மரிய குஸ்டாவ் லே க்லேசியோ**
  - தா. ஜோ. ஜூலியஸ் - பக். 49
- **காட்சிப்பிழையில் கண்டெடுத்த கவிதைகள்**
  - பிருந்தாசாரதி - பக். 60

- **கவிதை எனது காதலி**
  – மூ. சிவனேஸ்வரன் – பக். 61
- **காலத்தின் கல்வெட்டாய்க் கவிதைகள்..**
  – ஜின்னா அஸ்மி – பக். 63


## சிறுகதைகள்


- **நின்னைச் சரணடைந்தேன்**
  – அண்டனூர் சுரா – பக். 23
- **நட்ட கல்லும் பேசுமோ?**
  – பிரேமபிரபா – பக். 55


## கவிதைகள்


- **கதிர் அவன்** – பக். 15
- **படைப்புலகம்** – பக். 28
- **மொழிபெயர்ப்புக் கவிதை**
  – தங்கேஸ் – பக். 34
- **தமிழ் மரம்**
  – இளைய இன்குலாப் – பக். 40
- **நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 12**
  – ஜின்னா அஸ்மி – பக். 47
- **ஊர்மிளை**
  – அழ.ரஜினிகாந்தன் – பக். 52
- **பழநிபாரதி** – பக். 59
- **கார்த்திகேயன் மாகா** – பக். 62






# தலையங்கம்

வணக்கம்.

படைப்பு தகவு பதினேழாம் மின்னிதழ் உங்கள் கண்முன் விரிந்துபரந்திருக்கிறது. படைப்பு மூன்றாமாண்டு விழா எழுத்துலகில் குறிப்பிடத்தகுந்ததொரு விழாவாக நடந்தேறியிருக்கிறது. ஒவ்வொரு படைப்பாளரிடத்தும் ஒரு உலகம் அவருக்காய் இயங்குகிறது. எனில் அத்தனைப் படைப்பாளர்கள் ஓரிடத்தில் படைப்புகளுக்காய்க் குழுமி உரையாடிய அந்நிகழ்வின் கனத்தை எண்ணிப்பாருங்கள்.. நிலத்தினும் பெரிது.

விழாவின் முக்கிய நிகழ்வு நூல் வெளியீடு. தன் நூலுக்கான அரங்கேற்றம் என்பது ஆதிகாலம் தொட்டுப் படைப்பாளனின் கனவு.

தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் பாயிரத்திலேயே அந்நூலை அரங்கேற்றிய குறிப்பு கிடைக்கிறது. நிலந்தரு திருவின் பாண்டியன் அவையில் அதங்கோட்டாசான் முன்னிலையில் நூல் அரங்கேற்றப்பட்டிருக்கிறது. நூலுக்குப் பாயிரம் எழுதியவர் தொல்காப்பியரின் உடன் கல்வி கற்ற பனம்பாரனார்.

பாயிரம் என்பது அணிந்துரை. பாயிரம் யார் எழுத வேண்டும் எப்படி எழுத வேண்டும் என்ற வரையறைகளெல்லாம்கூட தமிழ் இலக்கண மரபிலே உண்டு. நன்னூல் இதனைத் தெளிவாய் வரையறுக்கும்.

அணிந்துரையாகிய சிறப்புப் பாயிரத்தை நூலாசிரியர் செய்யக்கூடாது. ஏனெனில் அது நூல் குறித்த சிறந்த கருத்துக்களை எடுத்தியம்பும்போது புகழுரையாக அமைந்துவிடலாம். 'தோன்றாத் தோற்றித் துறைபல முடிப்பினும் தான்தற் புகழ்தல் தகுதியின்றே' என்கிறது நன்னூல். நூல் எழுதியவரின் ஆசிரியர், உடன்கற்றவர், மாணாக்கர், தகுந்த உரையைச் செய்தவர் ஆகியோரில் ஒருவர் பாயிரம் உரைக்கலாம். ஒரு நூலுக்கு எவ்வாறு பெயர் வைக்கப்படும் என்று கூட நன்னூல் வரையறுத்துரைக்கிறது. எந்த நூலை அடிப்படையாகக் கொண்டு நம் நூல் எழுகிறதோ அந்த நூற்பெயரைக் கொண்டே வைக்கலாம்.. வில்லிபாரதம் போன்று. மேலும், நூலாசிரியர் பெயர், நூல் அளவு, அதிகமாகச் சொல்லப்பட்ட பொருள், உட்கருத்து, எழுதக் காரணமானவர், நூல் தன்மை போன்றவற்றாலும் ஒரு நூலுக்குப் பெயர் இடப்படும். காரணமின்றிக்கூட, பெயர் வைக்கப்படும். ஒரு நூல் எவ்வாறு எழும் என்றுகூட மரபிலக்கண வரையறை உண்டு. கருத்துக்களைத் தொகுத்தோ அல்லது விரித்தோ எழுதப்படும். சில சமயங்களில் தொகுத்தும் விரித்தும் எழுதப்படும். பிற மொழி நூல் கருத்துக்களை மொழிபெயர்த்தும் நூல் படைக்கப்படும். பஞ்சிலிருந்து நூற்கப்படும் நூல் போலச் சொற்களிலிருந்து உருவாவது நூல்.

இவையெல்லாம் மரபின் முகங்கள். எழுதுவது நவீனக் கவிதைகளாக இருந்தாலும் காரணத்துடன் நூற்பெயர் உண்டு, மரபு கூறும் நூலுக்குரிய அழகு, உத்திகள் உண்டு. மரபினின்று வழா மைய இழையைக் கைப்பற்றி நவீனத்தைக் கடக்கும் யுக்தி வாய்த்துவிடும் கவிஞனின் படைப்பு நிலைத்துநிற்கிறது.

படைப்பு விழாவில் பன்முகத் தன்மையுடனான நூல்கள் அரங்கேற்றப்பட்டன. நல்லதோர் அவையில் அறிவோர் முன்னிலையில் தகுதியாளர் அணிந்துரையோடு சான்றோர் கரங்களினால் வெளியீடு கண்டிருக்கும் அத்தனை நூல்களும் அறிவுப்பரப்பில் நல் அடையாளம் காணத் தகவு வாழ்த்துகிறது.


'ரத்த உறவு' நாவல் மூலம் நம் கவனம் கொண்டவர் எழுத்தாளர் யூமாவாசுகி. எழுத்தின் பல பரிமாணங்களிலும் களம் கண்டவர். சிறார் இலக்கியம் மீது சிறப்பான கவனம் கொண்டவர். 'கஸாக்குகளின் இதிகாசம்' நூலை மொழிபெயர்த்தமைக்காகச் சாகித்ய அகாதமி விருது பெற்றவர். அவரது நேர்காணல் இவ்விதழில் இடம்பெற்றுள்ளது. அனைவரும் அறியப்பட வேண்டிய ஆளுமையான நா.விச்வநாதனுடனான சந்திப்புடன் படைப்பு பதிப்பக நூல்கள் குறித்த அறிமுகங்களும் உள்ளன.

இன்னும் சிறுகதைகள், கட்டுரைகள், தொடர்கள், அனுபவங்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

**– ஆசிரியர்**

• கார்த்திக் திலகன்



# “நான் என்றென்றும் கவிஞனாகவும் கவிதை உபாசகனாகவும் இருக்க வாய்க்கும்படி வாழ்வை இறைஞ்சுகிறேன்”

## - படைப்பாளர் யூமா வாசுகியுடனான நேர்காணல்

**உலகத்தரம் கொண்ட தமிழ் எழுத்தாளர்கள் சிலரில் குறிப்பிடத்தகுந்தவர் யூமா வாசுகி. அவருடன் உரையாடிய தருணங்கள்..**

**‘கவிதை என்பது ஒரு வாக்குமூலம்’ என்கிறார் குட்டிரேவதி. ‘கவிதை என்பது இடையறாத நடனம்’ என்கிறார் மனுஷ்யபுத்திரன். ‘பேப்பர் வெண்மை மைக்கருப்பு இவை மூலம் கட்டவிழ்த்துவிடப்படும் நிழல்கள்தான் கவிதை’ என்கிறார் நகுலன். உங்களைப் பொறுத்தவரை கவிதை என்பது என்ன?**

வாழ்வின் அதிநுண்மைகளைத் தரிசிக்கவும், கொண்டாடவும், கூடுபாய்ந்து கூடுபாய்ந்து முடிவற்ற பயணத்தில் சலனமற்ற பெரும் ஸ்தம்பிதத்தில் ஆட்படவும், ஆன்ம உயிர்த்திருத்தலுக்கும் ஆதாரமாக இருப்பது கவிதை. ஆமாம், ஆன்ம உயிர்த்திருத்தலுக்கு ஆதாரமாக இருப்பது கவிதை! ஆகக் கடைசியில் சாரமாய் எஞ்சும் செறிவொளிர்வு. அதன் பிரவாகத்தினூடே கரை ஒற்றியும் ஒதுங்கியும் செல்லும் மெல்லலைகளை அணைகையிலேயே உள்ளின் வெளி அகண்டு அங்கே புலனாகாச்

சுடர் உதிக்கிறது. அதன் நிறமாலைக் கண்ணிகளில் அலைவதற்கு என்றும் வாய்க்க வேண்டும் என்றுதான் இந்த வாழ்விடம் அதிகபட்சமாக யாசிக்கிறேன். அம்புக்குறியின் அகண்ட பாகம் எல்லையற்று விரிந்து எல்லாம் உட்கொண்டு அதன் கூர்முனை அன்பெனக் குவிகிறது...

'தடம்' செப்டம்பர் இதழில் மலையாளக் கவிஞர், சமீபத்தில் அமரரான ஆற்றூர் ரவிவர்மா குறித்து நான் எழுதியதொரு கட்டுரையில் மேற்கோள் காட்டிய சில வரிகள் இவை. இதன் முடிவுப் பகுதி மிகவும் முக்கியத்துவம் கொண்டது: 'கவிதை எழுத வேண்டும் என்றோ, கவிஞராக அறியப்பட வேண்டும் என்றோ எந்தக் கட்டாயமும் ஆற்றூருக்கு இல்லை. அதே நேரத்தில், அவரது கவிதை கைவிட்டுப் போகாதிருப்பதில் அதன் கலையும் மொழியின் ஒழுங்கும் இழப்பாகாதிருப் பதில் கவனம் கொண்டிருந்தார். கவிதை எழுதவில்லை என்றாலும், பிரசுரிக்கவில்லை என்றாலும் எப்போதும் மனதில் கவிதை இருக்க வேண்டும் எனும் நிர்ப்பந்தம் கொண்டவர்.'

முன்பு எப்போதோ ஒரு நேர்காணலில் சொன்னதுதான் இது: 'அம்புக்குறியின் அகண்ட பாகம் எல்லையற்று விரிந்து எல்லாம் உட்கொண்டு அதன் கூர்முனை அன்பெனக் குவிகிறது'.

**எந்த ஒரு தன்னிச்சையான செயல்பாட்டிற்குப் பின்னாலும் ஒரு கலை இருக்கும். எந்த ஒரு கலைக்குப் பின்னாலும் ஒரு தன்னிச்சையான செயல்பாடு இருக்கும். உங்கள் எழுத்து எப்படி நிகழ்கிறது? திட்டமிட்டுப் பிரக்ஞைப்பூர்வமாகவா அல்லது உங்களை மீறியதொரு பெருவெடிப்பாகவா அல்லது இரண்டும் கலந்தா?**

சூரிய ஒளிக் கிரணங்களுக்கு எத்தனை வழிகள் இருக்கின்றனவோ அத்தனை வழிகள் கவிதை கூடிவருவதற்கும் இருக்கின்றன. தான் சம்பவிப்பதற்கு ஒரு படைப்பு மேற்கொள்ளும் முறைகள் வரையறுக்க முடியாதவை. வாட்டர் கலர், ஆயில் கலர், நைஃப் பெயிண்டிங், சார்க்கோல் டிராயிங், பேஸ்ட்டல் ஒர்க், கொல்லாஜ் என்று ஓவியத்தில் பல வகைமைகள் உண்டு. எல்லாமும் தனித்தனி. ஒவ்வொன்றுக்கும் அதற்கான முறை உண்டு. ஆயினும் ஒரு பென்சில் ஓவியம் எப்போது ஒரு பென் அன்ட் இங்க் கோட்டோவியத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு வெளிப்படும் என்று தெரியாது. வாட்டர் கலர் ஓவியம் தன் மீது பால்பாயின்ட் பேனா முனையின் தீற்றல்களை எப்போது கோரும் என்று அனுமானிக்க முடியாது. இப்படித்தான் ஒன்றுடன் ஒன்று உறவாகிக் கலை உருவாகும் சந்தர்ப்பங்கள் அனேகம் இருக்கின்றன. இதற்கும் அப்பாற்பட்ட 'மிக்ஸட் மீடியா' என்றொரு வகை உண்டு. அது எந்த முறையையும் தன்னுள் அனுமதிக்கக்கூடியது. திரண்டு கனத்துப் பீறிட எத்தனித்து வழி தேடும் வேட்கையின் போது, வெளிப்பாட்டின் முழுமைக்குச் சகாயம் செய்ய எவ்வகையில் எப்போது என்ன வரும் என்று நான் அறியேன்.

பெருநகரச் சாலையில் நடந்துகொண்டிருக்கும் போது, பேருந்துக்குக் காத்திருக்கும்போது, உணவருந்துகையில் என எந்த நிலையில் இருந்தாலும் திடீரென்று தன்னெழுச்சியாக என்னுள்ளே கவிதைகள் அரிதாக நிகழ்ந்தது உண்டு. எத்தகைய சூழ்நிலையிலும் அப்போதே மெனக்கெட்டு அவற்றைப் பதிவு செய்திருக்கிறேன். உதாரணமாக, 'அம்மாவுக்கு என் கைகளை மிகவும் பிடிக்கும்..' என்று ஆரம்பிக்கும் கவிதை, 'மதுக்கடையில் உருளும் கோலிக்குண்டுகள்', 'தெருப்பெண்ணுக்கு', 'பூமொழி' போன்ற கவிதைகளைச் சொல்லலாம். இவை முதற்கட்டத்தில் எப்படி முகங்காட்டினவோ அப்படியே பதியப்பட்டவை. பிறகு எந்தத் திருத்தங்களுக்கும் ஆட்படாதவை. சில, இரண்டு முறை எழுதப்பட்டு, சில நான்கைந்துமுறை செம்மைப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. சிலவற்றை மாதக்கணக்கில் எப்போதும் என்னுடனேயே வைத்திருந்து போகும் இடங்களிலெல்லாம் செப்பனிட்டிருக் கிறேன். இதற்கு உதாரணமாக, 'சக்தி வழிபாடு' போன்ற கவிதைகளை நினைவுகூர்கிறேன்.

நடந்துகொண்டே நின்று நின்று மனதிற்குகந்த ஒரு கவிதையை எழுதி முடித்தவுடனே சாலையோரக் கல்லில் அமர்ந்து குமுறி அழுதிருக்கிறேன். வேறொரு கவிதையை எழுதிவிட்ட உடனே வானளாவி வளர்ந்து விட்டவனாக அவ்வளவு இறுமாப்புடன்



சகலத்தையும் துச்சமென நோக்கி நடந்திருக்கிறேன்... எல்லாவற்றுக்கும் இடமுண்டு...

கவிதைக்கான மனநிலையை எப்போதும் தக்கவைப்பதும், அசகாய மோப்ப சக்தியுடைய வேட்டை நாய்போலக் கவிதையின் சலனங்களைப் பின்தொடர்வதும், எக்கணமும் பிரக்ஞையுடன் இருப்பதும் முக்கியமாகிறது. வியட்நாம் யுத்தத்தின்போது ஒளிப்படக் கலைஞர் 'நிக்உட்' போர்முனையில் கேமராவின் வாயிலாக அவதானித்துக்கொண்டிருக்கிறார். அப்போது அமெரிக்காவின் நாபாம் குண்டுத் தாக்குதலுக்கு ஆளாகி, நிர்வாணமாகக் கதறிக்கொண்டு கைவிரித்து ஓடிவருகிறாள் 'கிம் புக்' எனும் சிறுமி. அந்த நிகழ்வின் தருணத்திலொன்றை உடனடியாகக் கேமராவில் பதிவு செய்துகொண்டு அடுத்த நொடியே அவளை மருத்துவமனையில் சேர்க்கிறார் நிக்உட். அந்த ஒளிப்படம்தான் 'நாபாம் சிறுமி.'

**'ஒரு மொழியில் செயல்படுகிற ஒருவனுக்குப் பின்னால் அந்த மொழி சார்ந்த மரபு இயங்கிக்கொண்டேயிருக்கும். அதிலிருந்து ஒருபோதும் தப்ப முடியாது. தப்பியவன் கவிஞனும் ஆகமாட்டான்' என சுகுமாரன் ஒரு நேர்காணலில் தெரிவிக்கிறார். ஒரு கவிஞருக்கு மரபிலக்கியப் பயிற்சி எந்த அளவு அவசியம் அல்லது அவசியம் இல்லை என்று நினைக்கிறீர்கள்? மரபிலக்கியப் பயிற்சி கவிஞரின் மொழியாளுமையின் மீது எத்தகைய தாக்கத்தை உண்டாக்குகிறது?**

கவிஞருக்கு மரபிலக்கியப் பயிற்சி மிகமிகவும் முக்கியமானதுதான். மரபிலக்கியப் பயிற்சி கவிஞரின் மொழிப் பிரயோகத்துக்கு நுட்பத்தையும் வலுவையும் வளத்தையும் அளிக்கிறது. மரபிலக்கியம் பயின்றவர்களின் நவீனக் கவிதை வெளிப்பாட்டில் அசாத்தியமும் அற்புதமுமான மொழிப் பிரயோகங்களை நான் அனேகம் கண்டிருக்கிறேன். என் மொழி, நிலம், மரபு குறித்து நெஞ்சார்ந்து பெருமைகொள்ளும் சந்தர்ப்பங்கள் இவை. தொண்ணூறுகளுக்கு முன்பு கும்பகோணம் ஓவியக் கல்லூரியில் படிப்புக் காலம் ஐந்தாண்டுகள். இதில் கணிசமான காலம், பார்த்து வரையும் பயிற்சிதான். மனிதர்களை மாதிரியாக வைத்து, பொருட்களை வைத்து, இன்ன பிறவற்றையெல்லாம் பார்த்து வரையும் பயிற்சிக்கு மிகவும் முக்கியத்துவம் உண்டு. மனித உடற்கூற்றைத் துல்லியமாகக் கிரகித்தறிவதற்கு இந்தப் பயிற்சிகள் பேருதவியாக இருக்கும். இப்படிப் பல காலப் பயிற்சிக்குப் பிறகு மாணவர்கள் மனித உருவங்களை எந்தச்

செயல்பாட்டு நிலையில் வேண்டுமானாலும் உடற்கூறு வழுவாது இயல்பாக இயற்கையாக கற்பனையில் வரையும் திறன் பெறுவார்கள். அந்தக் காலத்தில் மேற்கில் ஓவியர்களும் மருத்துவர்களும் மனித உடற்கூறை அறிந்து கொள்ள பிணங்களை விலைகொடுத்து வாங்கி அறுத்துப் பயில்வதுண்டு.

இப்படி உள்ளதை உள்ளபடி வரைவதில் தகுதி பெற்றவர்கள் நவீனப் படைப்புகளை உருவாக்கும்போது, அவர்களின் எண்ணங்களைக் கரங்கள் அற்புதமாகவும் எளிதாகவும் சாத்தியமாக்குகின்றன. மரபின் வேர் வலுவுடனான நவீன வெளிப்பாடு, கலைவெளியில் முதிர்கதிர்களாகின்றன.

இங்கும் விதிவிலக்குகள் உண்டு. சுயம்புகள் உண்டு. யதார்த்த ஓவியங்கள் முற்றிலும் கைவரப்பெறாத, அந்தப் பயிற்சியே இல்லாத பலர் நவீன ஓவியத்தில் பெருமளவு கவனம் ஈர்த்திருக்கிறார்கள். பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியும் அதில் ஈடுபாடும் அற்ற பலர் நவீனக் கவிதை உரைநடை வெளிப்பாட்டில் அபார சாதனை செய்திருப்பதையும் சொல்ல வேண்டும். இந்த இடத்துக்குத் தூரப் பொருத்தமாக இருந்தாலும் எப்போதோ வாசித்ததை நினைவுகொள்கிறேன்.

வடநாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர் வீட்டில் வீட்டுவேலை செய்யும் ஒரு பெண், ஒரு சமயத்தில் அவரிடம் தன் வாழ்க்கையைப் பற்றிய சில தகவல்களைச் சொல்கிறார். அதன் கனத்தில் கவனம் கொண்ட எழுத்தாளர் தினமும் பேசிப் பேசி அவளிடம் மேலும் மேலும் விவரங்களைக் கேட்டறிந்து அப்படியே எழுதி அவள் பெயரிலேயே ஒரு நாவலாக வெளிக் கொணர்ந்தார். பிறகு அது பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. நிறைய பத்திரிக்கை களில் அந்த நாவலைப் பற்றிய மதிப்புரைகள் வெளியாயின.


**“எழுத்தாளரின் வேலை என்பது, ‘ஆம், நீங்கள் சொல்வது புரிகிறது’ என்று வாசகரைச் சொல்லவைப்பது” என்கிறார் ராபர்ட் ப்ராஸ்ட். “புரிந்துவிடு என ஒரு கவிதையை மிரட்ட முடியாது. ஒரு கவிதைக்குப் புரியவும் புரியாமல் இருக்கவும் முழு உரிமை இருக்கிறது. ஏறத்தாழ அது நம்மைப்போலத்தான்” என்கிறார், வே.நி. சூர்யா. ‘இருண்மைக்கும் புரிதலுக்கும் இடையேயான விளையாட்டு தருகிற சுகம்தான் கவிதானுபவம்’ என்கிற மாதிரியான இலக்கியச் சூழல் நிலவி வந்த காலத்தில் எழுத வந்த நீங்கள், ஆழமான சிந்தனையை உள்ளடக்கிய எளிய கவிதைகளை எழுதியதன் பின்னணி என்ன?**


எதற்குள்ளும் ஒரு உரையாடல் பொதிந்திருக் கிறது. எதற்குள்ளும் ஆரத் தழுவத் தவிக்கும் கரங்கள் ஒளிந்திருக்கின்றன. எதுவும், தன் மீது நம் கவனம் கோரி அரூபச் சமிக்ஞைகள் வெளிப்படுத்தியபடியே இருக்கிறது; எக்கணமும் பரிமாற்றத்துக்கு ஆயத்தமாக இருக்கிறது. எதுவுமற்று எதுவுமில்லை. நான் மீண்டும் சொல்கிறேன், சர்வ எதார்த்தமான ஒரு ஓவியம் எளிதில் புரிந்துவிடக்கூடும். ஆனால் அதில், எதார்த்தம் என்று அறியப்பட்ட ஒன்று இல்லாத மிகப் பூடக வெளிக்கு, வரையறையற்ற உலகத்துக்கு நம்மை இட்டுச் செல்லக்கூடிய மார்க்கங்கள் இருக்கின்றன. ஒரு அப்ஸ்ட்ராக் ஓவியம் எதுவும் ஈய மறுத்து நம்மை விலக்குவதாகத் தோன்றும். ஆனால் அதில், எதார்த்தத்தின் அத்தனை ஒழுங்குகளுடன் இயங்கும் ஒரு பரப்பிற்கு அழைத்துச் செல்லும் படிக்கட்டுகள் இருக்கின்றன. எல்லாம் நம் அகச் செறிவு தொடர்பானவை. கானகவாசியால், ‘இது புலியின் காலடித் தடம். அது இந்த வழியே சென்று சில நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன’ என்று சொல்ல முடியும். பறவையியலாளர் ஒருவரால், தொலைதூர ஒலித் துணுக்கைக் கொண்டு அது எந்தப் பறவையின் குரல், அதில் என்ன செய்தியிருக்கிறது என்று உணர்ந்துவிட முடியும். உதிர்ந்து கிடக்கும் ஒரு இறகே அவருக்கு, அந்தப் பறவையின் அருமையை அறியத் தந்துவிடும்.


அப்படி அல்லாதபட்சத்தில், அற்புதங்கள் அற்பங்களாக முடிந்துபோகும்; காற்றாடி உலகளந்து காலமெல்லாம் வானில் வாழ்ந்திருந்த அற்புத வண்ண மென் இறகு என்பது காது குடைவதற்கான கருவி மட்டுமே என்பதாக.

என்னால் சில கவிதைகள் எழுதப்பட்டிருக் கின்றன என்பதற்கு அப்பாற்பட்டு அவை குறித்து நான் ஏதுமறிகிலேன். ஆரம்பத்தில் நான் எழுதியவை புரியவில்லை என்று பலர்













சொல்லியிருக்கிறார்கள். சிலர் சிலாகித்தும் சிலர் விமர்சித்தும் எழுதியிருக்கிறார்கள், இருண்மைக் கவிதைகள் என்று. தனியே அப்படி ஒன்று இருப்பதாக நான் நம்பவில்லை. ஜலதரங்கக் கிண்ணங்களில் எல்லாம்தான் நிரம்பியிருக் கின்றன. அவற்றில் பட்டுச் செல்லும் அந்தக் கோல், எல்லாவற்றைக் கொண்டும்தான் இசையெழுப்புகிறது. அவ்வளவு தீர்மானமாக ஒரு வகைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு இயலாது. இன்ன குளத்து மீன் இதுவென்று நாம் ஒன்றை அறுதியிடும்போது, அது நாமறியாத நீர்ச் சுரங்கங்கள் வாயிலாக மற்ற குளத்திலிருந்து தலை நீட்டிப் பார்க்கும். இப்படித்தான் அது பெரும்பாலும் மாறிமாறி எல்லாவற்றையும் ஒன்று கலக்கிறது.

**தன் எழுத்தின் மீது தானே கொள்கிற மயக்கம்தான் ஒரு எழுத்தாளனைத் தொடர்ந்து முன்னகர்த்துகிறது. ஒரு எழுத்தாளனது படைப்பை அவனுக்கு முன்பாக வேறு எவரும் படித்து ரசிப்பதற்குரிய சாத்தியங்கள் இல்லை. அந்த விதத்தில் பார்க்கப்போனால், உங்கள் கவிதைத் தொகுப்புகளில் உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளித்த தொகுதி என்று எதைக் குறிப்பிடுவீர்கள்? அதற்குரிய காரணங்கள் என்ன?**

என் எழுத்தின் மீது எனக்கு எந்த மயக்கமும் இல்லை. எழுதுவது என்பது பொதுவாக எனக்கு மிகக் கஷ்டமான காரியம். ஒருவகை சுய வதை அது. எழுதும்போது மனோரீதியான விஷக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவனாகிறேன். அது உடலையும் மனதையும் மிகவும் துவளச் செய்கிறது. எழுத்து எனக்குப் பணி ஏவுகையில், அது என் ஆவியைத் தீர உறிஞ்சி, கனத்த புத்தகத்துக்குள் சிக்கி இறந்து தட்டையாக ஒட்டிக்கொண்டிருக்கும் புழுவுடலின் எச்சம் போல ஆக்கிவிடுகிறது. எழுதுவது ஒரு மணி நேரம் என்றால், அதற்கான மன ஆயத்தம் மேற்கொள்வதற்குப் பல மணி நேரமாகி விடுகிறது. எழுதும் நேரம் நேர்கையில், அதிலிருந்து எப்படியெல்லாம் தப்ப முடியும் என்று என் சிந்தனை அலைபாய்கிறது. மீண்டும் மீண்டும் தேநீர் குடிப்பது, வெறுமனே உலவுவது, கடைக்குச் செல்ல வேண்டிய வேலை ஏதும் இருக்கிறதா என்று மனைவியிடம் வழக்கமற்ற அக்கறையுடன் கேட்பது, அந்த நேரம்பார்த்து யாரேனும் வந்தால், அவர்களிடம் உரையாடலை நீட்டிக்கொண்டே போவது என்று பல தந்திரங்கள். கடைசியில், என் பிடரியைப் பிடித்துப் பலவந்தமாக நானே தண்ணீருக்குள் மூழ்கடிப்ப தான நிலையில், வெளிவந்து உடையும் திணறல் குமிழ்களாகச் சில வரிகள் உருவாகிவிடுகின்றன. இந்த நேர்காணலுக்காக நான் உங்களிடம் எத்தனை வாய்தா வாங்கியிருக்கிறேன் என்று பாருங்கள்!

எழுத்தின் பேருருவை, எறும்பு வாய்க் கவளம்போன்று நான் நுண்ணளவு உணர வாய்த்திருக்கிறது என்பதால், 'எழுத்தாளன்' என்று சொல்லிக்கொள்வதற்கு எனக்குத் திடம் போதாமலிருக்கிறது. என்னைப் பொறுத்தளவு மிகப்பெரும் பேராழத்தில் சமுத்திரத்தின் பரப்பெங்கும் பரவியிருக்கும் ஒரு வினோதாதிசய உயிரென்று அதைக் கொண்டால், அவ்வப்போது நீர் மட்டத்தின் மேலே அதன் சில பகுதிகள் எனக்குக் காட்சி மின்னி மறைகின்றன. இதுவே என் வாழ்நாளுக்கான தரிசனமாக இருக்கிறது.

என்னால் எழுதப்பட்டவையின் சார்பாக நின்று நான் ஒருபோதும் பேசியதில்லை; ஒருபோதும் வக்காலத்து வாங்கியதில்லை. அவற்றை நான் நிர்க்கதியாக விட்டுவிட்டேன். ஒரு சில கூட்டங்களில் என் படைப்பு குறித்து

நான் பேசக்கூடிய கடுங்கட்டாயம் நேரும்போது, சுத்த சூன்ய திக்பிரமையாற் பீடிக்கப்பட்டு வேறு ஏதோ பிதற்றியிருக்கிறேன், அவ்வளவே.

நான் குழந்தைகளுக்காக நூல்கள் மொழி பெயர்த்திருக்கிறேன்; குழந்தைகள் பத்திரிக்கைகள் ஐந்துக்கு ஆசிரியராக இருந்திருக்கிறேன்; 'ரத்த உறவு', 'மஞ்சள் வெயில்' நாவல்களில் குழந்தைகள் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். எனவே, குழந்தைகளை மையமாகக் கொண்ட கவிதைகளுடைய, 'சாத்தானும் சிறுமியும்' எனும் சிறிய கவிதை நூலின் மீது எனக்குச் சற்றே பரிவு உண்டு.

**சமீபகாலமாகத் தமிழ் நவீனக் கவிதை உலகில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தி இருக்கிற இளம் கவிஞர்களான சபரிநாதன், பெரு விஷ்ணுகுமார், ச.துரை ஆகியோரின் கவிதைகளை வாசித்திருக்கிறீர்களா? அவை பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

சபரிநாதனின் கவிதைகளையும் பெரு விஷ்ணுகுமாரின் கவிதைகளையும் வாசித்திருக்கிறேன். ச.துரையின் கவிதைகளை இன்னும் வாசிக்கக் கூடாததற்கு வருந்துகிறேன். தேர்வுக் குழுவின் உள் வட்டத்திலிருந்து அல்லாமல் வெளியிலிருந்து சபரியை யுவ புரஸ்காருக்குப் பரிந்துரைக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. விஷ்ணுவின், 'மெலிதானவை' எனும் தலைப்பில் அமைந்த,

காற்று பலமான மரமொன்றை
அசைக்கிறது
காற்று பலமான மரமொன்றின்
சருகுகளை அசைக்கிறது.

புரண்டு படுக்கத் தெரியாதவர்களின் கல்லறைகள்
காற்றில் பறந்துவிடக் கூடாதென
எல்லா மரங்களும் சருகுகளை அவற்றின் மேல்
எடை வைக்கத்தான் செய்கின்றன.

ஆனாலும்
காற்று ஊதி நகர்த்துவதோ
பலமான மிகவும் பலமான
சருகுகளையேயன்றி
மெலிதான மிகவும் மெலிதான
கல்லறைகளையன்று.

என்னும் கவிதை உட்பட பலவற்றைச் சொல்ல முடியும். கும்பகோணத்தைச் சேர்ந்த கவிஞர் கன்னகனின் கவிதைகள் போதிய கவனம் பெறாமல் போனது வருத்தமளிக்கிறது. 'பறவைக்குள் அடையும் கூடு' என்ற ஒரு தொகுப்புதான் இதுவரை வெளிவந்திருக்கிறது. தஞ்சை, அகரம் பதிப்பக வெளியீடு. இன்னும் கையெழுத்துப் பிரதிகளாக நிறைய இருக்கின்றன. சமீபத்தில் வாசித்தவற்றில், கார்த்திக் நேத்தா ('தேனை ஊற்றித் தீயை அணைக்கிறான் திகம்பரன்' தமிழினி வெளியீடு), ரமேஷ் பிரேதன் ('மனநோயர் காப்பகத்தில் பின்காலனிய நாட்டின் கவிஞன்' புது எழுத்து வெளியீடு), பொன்முகலி ('தாழம்பூ' தமிழினி வெளியீடு), சஹானா ('கண் அறியாக் காற்று' ஆகுதி (மற்றும்) பனிக்குடம் வெளியீடு), ஷக்தி ('மரநாய்' சால்ட் வெளியீடு), ஸ்டாலின் சரவணன் ('ரொட்டிகளை விளைவிப்பவன்' உயிர்மை வெளியீடு) முதலியோரின் கவிதைகள் நிறைவளித்தன.

**நீங்கள் தீவிர இலக்கியத்துக்கு இணையாகக் குழந்தை இலக்கியத்துக்கு முக்கியத்துவம் அளிக்கிறீர்கள். குழந்தை இலக்கியத்தின் முக்கியத்துவம் மற்றும் தேவை குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன? தமிழின் சிறார் இலக்கியத்தின் போதாமையை உங்களது சிறார் இலக்கிய மொழிபெயர்ப்புகள் எந்த அளவுக்குச் சரிசெய்துள்ளதாகக் கருதுகிறீர்கள்?**

மிகச் சிறு வயதிலிருந்தே சித்திரக் கதைப் புத்தகங்களும், மாயாஜால நாவல்களும் மற்ற சிறார் நாவல்களும் பத்திரிக்கைகளும் வாசிக்கும் பழக்கம் இருந்தது. அந்தக் காலத்தில் என் பகுதியிலிருந்த ஒவ்வொரு சிறாரிடமும் கணிசமான புத்தகங்கள் இருக்கும். மாற்றி மாற்றிப் படித்துக்கொள்வோம். இப்போது நினைக்கும்போதும் அந்தச் சூழலின் இனிமையை உணர முடிகிறது. முப்பது காசுக்கு முப்பத்தியிரண்டு பக்க புத்தகம் வாங்கலாம்.

முத்து காமிக்ஸ் என்றால் ஒரு ரூபாய். அது நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களுடன் இருக்கும். அந்த முப்பது காசு புத்தகங்கள் பெட்டிக் கடைகளின் முகப்புகளில் சரம்சரமாகக் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். அப்படிப் படித்தது எவ்வளவு புத்தகங்கள்! பாலமித்ராவும், ரத்ன பாலாவும், அம்புலிமாமாவும், மணிப்பாப்பாவும்,

பொம்மை வீடும், பொன்னி காமிக்ஸும், இந்திரஜால் காமிக்ஸும், பூந்தளிரும், மாதவெளியீடாக வரும் சிறார் நாவல்களும் எங்கள் பொழுதுகளிலெல்லாம் நிறைந்திருந்தன. வாசிப்பின் உலகத்திலேதான் எப்போதும் திளைத்திருந்தோம்.

இப்போது அப்படிப்பட்ட வாசிப்புச் சூழல் இல்லை. ஒட்டுமொத்தச் சிறார் இலக்கியச் சூழல் மிகவும் நலிவு கொண்டிருக்கிறது; இந்தத் துறையில் மிகவும் வறட்சி நிலவுகிறது. பெரியவர்களுக்கான அத்தனைக் கலை இலக்கியத் துறைகளிலும் அசுர வீச்சுகள் நிகழ்ந்துவரும் காலத்தில் சிறார் கலை இலக்கியத்துறை கைவிடப்பட்டுப் பாழடைந்து சிதிலங்களை உதிர்த்துக்கொண்டிருக்கிறது.

இப்படி நான் நீண்ட காலமாகவே சொல்கிறேன். இப்படிச் சொல்லும்போதெல்லாம், ‘சிறார் இலக்கியம் தற்காலத்தில் பெரும் மகத்துவம் பெற்று விளங்குகிறது. அது அபூர்வக் கனிகள் சொரியும் அற்புதத் தோட்டமாயிருக்கிறது’ என்று எதிர்க்கூச்சல் போடுவார்கள். அவர்கள் யார்? சிறார் இலக்கியத்துறையில் இயங்கிக்கொண்டிருப்பவர்கள். நாங்கள் எழுதுகிறோமே, பிறகு எப்படி சிறார் இலக்கியம் வளம்பெறாமல்போகும் எனும் அசாத்திய நம்பிக்கை அவர்களுக்கு. சிறார் இலக்கியம் கோரும் கற்பனையாற்றலையோ, எளிய, அழகிய மொழியையோ, நம்பகத்தன்மையையோ, உயிர்ப்பான உருவாக்கத்தையோ அவர்கள் எழுத்தில் என்னால் பார்க்க முடியவில்லை. அவர்கள் மேலும் பின்னோக்கி இழுக்கிறார்களே தவிர, நல்ல விளைவு ஏதுமில்லை. பாலசாகித்ய புரஸ்கார் உள்ளிட்ட அங்கீகாரங்களுக்கான மோகம்தான் அவர்களை இயக்குகிறது. பாலசாகித்ய புரஸ்கார் என்பது ஐம்பதாயிரம் ரூபாய் பணப்பரிசு கொண்டது. இதைப் பெறுவதற்காக வருடாவருடம் லட்சங்கள் செலவழித்து அவரை இவரைப் பார்த்துத் ‘திருப்திப்படுத்தி’க் காரியம் சாதிக்கப் பேயாகப் புயலாகச் சுழன்று ‘களமாடு’பவர்களை நான் பார்க்கிறேன். படைப்பிலக்கியம் பொருட்டல்ல, பெருமை வந்தால் சரி என்றெண்ணும் சீமான்கள் அவர்கள். இலக்கியத் திராணியற்று, இன்னது கொண்டு இன்னாரை வசப்படுத்த முடியும் என்று



மட்டுமே நன்றாக அறிந்துவைத்திருக்கிறார்கள். இந்தத் துறையில் முற்றிலும் தகுதியற்றவர்கள் முக்கியமான விருதுகள் பெறுகிறார்கள். நான் உண்மையாகச் சொல்கிறேன். விருது கொடுக்கும் நிறுவனங்களுக்கும் அமைப்புகளுக்கும் தனி நபர்களுக்கும்கூட சிறார் இலக்கியம் பற்றிய புரிதல் இல்லை.

தற்காலச் சிறந்த சிறார் இலக்கியப் படைப்பாளர்கள் என்று ஆயிஷா நடராசன், உதயசங்கர், பாலபாரதி, விஷ்ணுபுரம் சரவணன், வள்ளியப்பன், சரவணன் பார்த்தசாரதி போன்ற வெகுசிலரையே சுட்ட முடியும்.

வெகுஜனத்தளத்தில் பல்லாண்டு காலம் வெளிவந்த சிறார் இதழான சுட்டி விகடனும் நின்றுவிட்டது. நான் சிறுவனாக இருக்கும் போதிருந்து வெளிவந்துகொண்டிருந்த கோகுலம் நின்றுவிட்டது. நாளிதழ்களில் வரும் சிறார் இணைப்புகளும் பலவீனப்பட்டிருக்கின்றன. தமிழ்ச் சிறார் பத்திரிக்கைகளுக்கு இந்த நிலை. தற்காலத்தில் சிறார் இலக்கியத்தில் நல்ல பத்திரிக்கைகளும், நல்ல எழுத்தாளர்களும் அரிது. ‘துளிர்’, ‘பெரியார் பிஞ்சு’, ‘தும்பி’, ‘பஞ்சுமிட்டாய்’, ‘குட்டி ஆகாயம்’ முதலிய சிறார் பத்திரிக்கைகள் இக்காலத்தில் பெரும் நெருக்கடிகளுக்கிடையிலும்

தங்களைத் தக்கவைத்துக்கொண்டிருக்கின்றன. சிவராஜின் 'தும்பி' சிறாரின் கண்ணையும் கருத்தையும் கவரும் விதத்தில் அருமையாக வெளிவந்துகொண்டிருக்கிறது.

வாசிப்புப் பழக்கம் சிறாரின் மனதைப் பண்படுத்தி அறிவை விசாலமாக்குகிறது என்றறிவோம். மனித வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை, நாகரிகத்தை, விழுமியங்களை, உறவுகளை, உரிமைகளை, இயற்கையை, பிரபஞ்சத்தை, மனிதாபிமானத்தை, நீதியை, சுயகௌரவத்தை, சகோதரத்துவத்தை, விடுதலையை, சக மனிதனைக் குறித்த அக்கறையை, சமத்துவத்தைத் தேன் குழைத்துப் புகட்டுவதற்குச் சிறார் இலக்கியங்களால் எளிதில் இயலும். உள்ளும் புறமுமான அதன் நல் விளைவுகள் எல்லையற்றவை. வாசித்து வளரும் பிள்ளைகள் பேராளுமைகளாகத் திகழ்வார்கள்; பெருங்கனவுகளை நிறைவேற்றுவார்கள். நான் பலமுறை பகிர்ந்த வார்த்தைகள்தான் இவை. ஆயினும் மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டியிருக்கிறது, சமூக மாற்றத்தை விரும்புவோமானால் அதற்கான தலையாய பணி சிறார்களிடம் கலை இலக்கியங்களைக் கொண்டு செல்வதுதான். இதன் மூலம்தான் சாத்தியமாக்க முடியும்.



ஆனால் சமூகத்தின் சகல மட்டங்களிலும் சிறார் இலக்கியம் குறித்த அறியாமையும் புறக்கணிப்பும் இறுகியிருக்கிறது. அதற்கு ஈரம் பாய்ச்சி இளக்குவதற்கு மாபெரும் கூட்டுப் பிரயத்தனம் தேவைப்படும். ஒவ்வொருவரும் இதைச் சிந்தனைப் பொருளாகக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு படைப்பாளியும் சிறார் இலக்கியத்துறைக்குத் தன் சிறந்த பங்களிப்பைச் சேர்க்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் வேண்டும் என்பதுபோல, 'ஒவ்வொரு குழந்தைக்கும் நூலகம்' எனும் முழக்கமும் ஈடேறவேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் நூலகம் என்பதில் பாரதி புத்தகாலயம் தீவிர முனைப்புக்காட்டி வருகிறது.

நான் மலையாளம் கற்றுக்கொள்ள ஆரம்பித்த போது, பயிற்சிக்காக மலையாளச் சிறார் இலக்கிய நூல்களைப் படிக்க ஆரம்பித்தேன். அப்போது அங்கே தென்பட்ட சில நல்ல படைப்புகளை மொழிபெயர்த்து இங்குள்ள வெறுமையில் முன்னுதாரணங்களாக வைக்க நினைத்தேன். இப்படித்தான் சிறார் இலக்கியம் சார்ந்த என் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவந்தன. சிறிதேனும் சூழல் மாற்றத்துக்கு உதவும் எனும் நம்பிக்கையில், சிறார் இலக்கியப் படைப்பாளர் களிடம் தாக்கம் உருவாக்கக்கூடும் எனும் எதிர்பார்ப்பில் நான் தொடர்ந்து இந்தக் காரியத்தைச் செய்துகொண்டிருக்கிறேன்..

ஒட்டுமொத்தச் சூழலிலேயே, குழந்தைகளின் மீது நிகழ்த்தப்படும் கொடூரங்கள் செய்திகளாக நாளிதழ்களில் பதிவு பெறாத நாட்களே பெரும்பாலும் இல்லை. யுத்தங்களிலாகட்டும், அகதி வாழ்விலாகட்டும், குடும்பச் சூழல்களிலா கட்டும் குழந்தைகளின் இருப்பும் உரிமையும் முழுமுற்றாக உதாசீனப்படுத்தப்பட்டு, கீரை ஆய்வதுபோன்று இலகுவாக அவர்களின் உயிர்கள் பறிக்கப்படுவதை, எந்த உலகமும் எந்த மனிதரும் பொறுக்கவே முடியாதபடி அவர்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப் படுவதை, அளவற்ற வறுமையில் கண் நிறைந்த பசியேக்கத்துடன் தலை சாய்க்க ஓர் இடமற்று அலைவதை, தங்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளைத் தடுக்கும் சக்தியற்றுக் காயத்தின் உதிரங்களை விம்மும் கண்ணீருடன் துடைத்துக் கொள்வதை, கடவுள்களுக்குப் பலி கொடுக்கப் படுவதை, கல்வியும் கதையும் பாட்டும் எட்டா நிலங்களில் குற்றேவல் புரிந்து காலம் கழிப்பதை,

வழியெங்கும் இரந்து நடப்பதை, எவரின் காத்திரமான சிந்தனைக்கும் பாத்திரமாகாமல் அவர்களின் பாடுகளெல்லாம் பாழாவதை நாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். எவ்வளவு ஏளனத்தைத்தான் அவர்கள் சுமப்பார்கள், எவ்வளவுதான் புறக்கணிப்புகளையும் இழிவு களையும் தாங்குவார்கள்! அவர்களின் நிராதரவு சம்மதம்தானா? சில தினங்களுக்கு முன் படித்த செய்தி இது, கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட சண்டையில், இரண்டு குழந்தை களையும் வெளியே அழைத்துச் சென்ற கணவன் போகிற போக்கில் குழந்தைகளை ஆற்றில் எறிந்து செல்கிறான்..

இன்னும், மாற்றுத்திறன் படைத்த குழந்தை களிடம் சமூகம் அணுகும் முறையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அத்தகைய குழந்தைகள் குறித்தான அவர்களின் மனோபாவத்தில் பைசாசம் குடிகொண்டிருப்பதை நானறிவேன்.

என் மகன் சிறப்புக் குழந்தை என்பதால் எனக்கு வீடு கிடைப்பது சிரமமாக இருந்தது. ஒரே நேரத்தில் பல பத்திரிக்கைகளுக்கு ஆசிரியராக இருக்கும் ஒருவனை எனக்குத் தெரியும். அவன், 'உன் முன்னோர் செய்த பாவம்தான் இதற்குக் காரணம்' என்று சொன்னான். என் நிச்சயதார்த்தத்தையோ, திருமணத்தையோ, ஐயர் என்று ஒருவர் நடத்தக் கூடாது என்று பிடிவாதமாக இருந்தேன். அப்படியும் என் நிச்சயதார்த்தத்தை நடத்திக் கொடுப்பதற்கு ஒரு பார்ப்பனப் புரோகிதரை அழைத்துவந்துவிட்டார்கள். குடும்பத்துப் பெரியவர்கள் யாராவது நடத்துங்கள், ஐயர் வேண்டாம் என்று நான் தீவிரமாக மறுத்தேன். அவர் அனுப்பி வைக்கப்பட்டு, குடும்பத்தைச் சேர்ந்தவர்களே அதை நடத்தினார்கள்.

பிறகு வெகுகாலம் கழித்து என் மிக நெருங்கிய உறவுக்காரப் பெண்மணி, 'அன்று நீங்கள் ஐயரை மறுத்ததுதான் உங்கள் குழந்தை இப்படிப் பிறக்கக் காரணம். நீங்கள் அவரை வெளியேற்றியதற்குக் கிடைத்த தண்டனைதான் இது' என்று சொன்னாள். நான் வெளியே வரும் நேரத்தில் எதிர் வீடுகளிலிருந்து புறப்படுபவர்கள் என்னைக் கண்டதும் உள்ளே சென்றுவிடுவார்கள். இப்படிப்பட்ட குழந்தையின் தந்தையான நான் அவர்களின் பார்வைக்கு ஓர் அபசகுனம்.

என் மிக நெருங்கிய நண்பனின் சகோதரி பிள்ளை பெற்று வந்திருக்கிறாள் என்றறிந்து பார்க்கப் போகையில், அந்தக் குழந்தை படுத்திருக்கும் அறையின் கதவை அவள் என் முன்னால் பட்டென்று சாத்தினாள். என் பார்வை பட்டால் அந்தக் குழந்தைக்கு ஏதேனும் ஊறு விளைந்துவிடும் என்பது அவள் நம்பிக்கை. இத்தனைக்கும் அவள், மெத்தப் படித்துப் பல லட்சங்கள் ஊதியம் பெறும் அமெரிக்கவாசி.

குழந்தைகள் வாழ்வின் சகல நிலைகளிலும் நாம் மனதாழ்ந்த கருத்துச் செலுத்தவேண்டியது, அவர்களுக்கு நம்மை முற்றிலும் அர்ப்பணிக்க வேண்டியது எக்காலத்துக்குமான நமது கடமையாகிறது.

இந்த நேரத்தில், சிறாரின் மீதான அளவற்ற வாஞ்சையுடன் அவர்களின் உலகில் தங்களைப் பிணைத்துக்கொண்டு இடையறாது அவர்களுக் காகச் செயல்படும் தும்பி சிவராஜ், இனியன், ஜான் சுந்தர், குப்பு மல்லி யுவன், மகாலட்சுமி, தியாகசேகர், கதைசொல்லி சதீஷ், பாலபாரதி, விஷ்ணுபுரம் சரவணன், சரவணன் பார்த்தசாரதி முதலியோருக்கும், அரசியல்ரீதியாகச் சிறாருக்கு ஏற்படும் பாதிப்புகளை எதிர்த்து உரத்துக் குரலெழுப்புபவர்களுக்கும், பாரதி புத்தகாலயம், தமிழ்நாடு அறிவியல் இயக்கம் ஆகிய அமைப்புகளுக்கும் என் மறதியின் காரணத்தால் இங்கே பெயர் விடுபட்டுப்போன மற்ற அனேக சிறார் செயல்பாட்டாளர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தமிழில் சிறுபத்திரிக்கைகள் எல்லாமே இடைநிலை இதழ்களாகிவிட்டன என்ற ஒரு கருத்து உண்டு. கோட்பாட்டு விவாதங்கள் போன்றவை இல்லாமலாகிவிட்டன. நீங்கள் தற்போதைய சிறுபத்திரிக்கைச் சூழலை எப்படிப் பார்க்கிறீர்கள்? உங்கள், 'குதிரை வீரன் பயணம்' சிற்றிதழ் அனுபவத்தைப் பகிர்ந்து–கொள்ளுங்களேன்.**

கேரளத்திலிருந்து வரும் 'மலையாளம் வாரிகா', 'தேசாபிமானி', 'மாத்ருபூமி', 'மாத்யமம்', 'சந்திரிகா', 'மலையாள மனோரமா' ஆகிய வார இதழ்களையும், 'பாஷாபோஷிணி', 'எழுத்து', 'GK AND CURRENT AFFAIRS' ஆகிய மாத இதழ்களையும் பின்தொடர்ந்துவருகிறேன். மலையாள மனோரமா (இதில் தாமஸ் ஜேக்கப், 'கதக்கூட்டு' எனும் தலைப்பில் எழுதிவரும் ஒரு பக்கத் தொடர் எனக்கு விருப்பமானது. இந்த ஒரு

பக்கத்துக்காகத்தான் இதைத் தொடர்ந்து வாங்கிக்கொண்டிருக்கிறேன்.), GK AND CURRENT AFFAIRS (இதிலும் அருமையான கட்டுரைகள் வெளிவருவதுண்டு. சமீபத்தில் லியனார்டோ டாவின்சி பற்றிய மிக விரிவான ஒரு நல்ல கட்டுரையை இதில் படித்தேன்) தவிர மற்றவையும் மிகவும் தரமான உள்ளடக்கத்துடனும் கலை தேர்ந்த வடிவமைப்புடனும் வெளிவருகின்றன. நாம் சிறுபத்திரிக்கைத் தரம் என்று கருதும் தன்மையில், பல்லாண்டுகளாக வெகுஜன அளவில் பெரும் எண்ணிக்கையில் அவை வெற்றிகரமாக விற்பனையாகிவருகின்றன. அதனால் அங்கே சிறுபத்திரிக்கைகளுக்கான தேவை இல்லை. மாத்ருபூமி, தேசாபிமானி, மலையாளம் வாரிகா, சந்திரிகா, மாத்யமம் வார இதழ்போன்று அவ்வளவு சிறப்பான தரத்தில் வெகுஜனத் தளத்தில் நம்மிடம் பத்திரிக்கைகள் இல்லை. மாத்ருபூமி வார இதழ்போன்று தமிழில் ஒன்று சாத்தியமாகுமா என்று தெரியவில்லை. காத்திரமான படைப்புகளோடும் பார்வையோடும் தமிழில் சில பத்திரிக்கைகள் சிறிய பரப்பளவில் வெளிவந்துகொண்டிருப்பதை வைத்து நாம் திருப்திகொள்ள வேண்டியதாகிறது. 'தடம்' எனும் நல்ல முயற்சியும் முடிந்துபோனது. தற்காலப் பத்திரிக்கைச் சூழலின் மலினத்துக்கும் கொடும் வறட்சிக்கும் நடுவில் நாம் சி. சு. செல்லப்பாவின் மனநிலை கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது. எவ்வளவு பெரிய பாரம்பரியம் நமக்கு, எத்தகைய மரபு, ஒவ்வொருவரும் மகுடம் வைத்து உலவக்கூடிய அளவுக்கான பெருமிதம்! ஆயினும், பாவிகள், தங்கள் சுயநலத்துக்காக நம்மைப் படுபாதாளத்தில் தள்ளிவிட்டுவிட்டார்கள்!

'குதிரை வீரன் பயணம்' என்ற பெயரில் ஒரு சிறு பத்திரிக்கை நடத்த வேண்டும் என்று எனக்கு வெகுநாளாக விருப்பம் இருந்தது. நண்பர் அமலன் ஸ்டேன்லிக்கும் இதில் ஆர்வம் இருந்தது. அப்போது நாங்கள் இருவரும் எல்டாம்ஸ் ரோடு, சி.பி. ராமசாமி ஐயர் பவுண்டேஷனில் வேலை செய்தோம். அங்கே அவர் அதிகாரி. நான் ஓவியர். ஸ்டான்லியின் சகோதரர் 'வலம்புரிச் சங்கம் டிரஸ்ட்' என்று ஒரு அமைப்பு வைத்திருந்தார். பத்திரிக்கை நடத்துவதற்கு அதில் நிதியுதவி வாங்கிக் கொடுத்தார் ஸ்டான்லி. நான் சென்னையிலிருந்து திருப்பூர் சென்று இதழ்கள் தயாரித்தேன். திருப்பூரில் என் கல்லூரி நண்பர் அறிவுச்செல்வன் தொழில் செய்து வந்ததுதான் நான் அங்கே இடம் மாறக் காரணம். வலம்புரிச் சங்கம் டிரஸ்ட் நிர்வாகத்துக்குப் பத்திரிக்கையின் போக்கு உவப்பாக இல்லாததால் சில இதழ்களுக்குப் பிறகு அந்த உதவி தொடரவில்லை. பிறகு வேறு சில நண்பர்களின் ஆதரவு கிடைத்தது. சுந்தர ராமசாமி, பிரம்மராஜன், கோணங்கி, கோபி கிருஷ்ணன், பெருமாள் முருகன், வளர்மதி, சா.தேவதாஸ், சாருநிவேதிதா, மனுஷ்யபுத்திரன், அமலன் ஸ்டான்லி, பிரான்சிஸ் கிருபா, சிபிச்செல்வன், பசலை கோவிந்தராஜன், எம்.கோபாலகிருஷ்ணன், கடற்கரை முதலிய பலர் அதில் எழுதினார்கள். மிகச்சில சந்தாக்கள்தான் வந்தன. முழுக்கவும் அன்பளிப்பாகத்தான் அனுப்பிக் கொடுத்தோம். பிறகு இதழ் வரும் இடைவெளி அதிகரித்தது. கடைசியாக வெளிவந்த பத்தாவது இதழ் சி.மோகன் சிறப்பிதழ். விரைவில் அடுத்த இதழுக்கான முனைப்பில் இருக்கிறோம்.

**எழுத்தாளர் யூமா வாசுகி கவிஞர், புனைகதையாளர், மொழிபெயர்ப்பாளர், ஓவியர் எனும் பன்முகத் திறன் கொண்டவர். அவருக்கு எந்த முகம் மிக இயல்பாகப் பொருந்திவருகிறது என்று நினைக்கிறீர்கள்?**

என் அம்மா வார இதழ்கள் வாசிக்கும் பழக்கம் கொண்டிருந்தார். அவர் வைத்துவிட்ட பிறகு, சிறுவனாகிய நான் அவற்றைக் கையிலெடுப்பேன். அப்படித்தான் எழுத்துப் பரிச்சயம். அம்மாவின் அண்ணன் மாயூரம் பாலசுப்பிரமணியனும் தம்பி ராதாகிருஷ்ணனும் ஓவியர்கள். அவர்கள் ஓவியம் வரையும்போது பார்த்துக்கொண்டிருப்பது என் சிறு பிராய ஆர்வம். இந்தச் சூழலில் ஓவியத்தின் மீது நாட்டம். பிற்பாடு வெகுகாலத்துக்குப் பிறகு, எழுத்தாளர் ஜெயமோகனின் தூண்டுதலால் மலையாளம் கற்கப்போய், மொழிபெயர்ப்பாளனாக ஆனேன். இந்த வடிவங்களில் எனக்குப் பேதங்கள் இல்லை. இவற்றில் ஏதாவது ஒன்றில் ஈடுபட்டிருப்பதில் எனக்கு மகிழ்ச்சி. ஆயினும் தலைச்சன் மகவுக்கென்று ஒரு மகத்துவம் இருக்கும் அல்லவா, அந்தளவில் நான் என்றென்றும் கவிஞனாகவும் கவிதை உபாசகனாகவும் இருக்க வாய்க்கும்படி வாழ்வை இறைஞ்சுகிறேன்.

– அடுத்த இதழில் முடியும் ■

## கவிச்சித்திரம்

• கவி : கதிர் அவன்
சித்திரம் : அன்பழகன்

நரகமென நகர்ந்திடும்
இந்த இரவு

நினைவுகளைத் தின்று கொழுத்த
ஒரு அரவம்

பிடரியை மெல்ல ஊடறுக்கும்
ஒரு குளிர் தென்றல்

தலையணையுடன் தேம்பிப்
புலம்பும் ஒரு நியாபகம்

போர்வைக்குள் புதைந்து வாழும்
ஒரு பெருவலி

நெருப்பிற்கு இடமளிக்கும்
கனவுகளின் முரண்

உயிரை அறுத்தெரியும்
பாடல்களின் வலி

வலியின் ஓலமென மாறிய
புல்லாங்குழல் இசை

தேகம் போர்த்திக்கொண்ட
காலத்தின் காயங்கள்

உயிரை மாத்திரம் மிச்சம் வைத்த
ஒரு புறக்கணிப்பு

சாலைகளில் பிரக்ஞையற்று
நடமாடும் மனநிலை

உணவினைப் பற்றி நினைத்திடாத
பசியின் நேரம்

பூக்களை ரசித்திட மறுக்கும்
வித்யாச அனுபவம்

பூமியின் சுழற்சியைப் பற்றிக்
கவலை கொள்ளாத பொழுதுகள்

மழையில் நனைந்திட மறுக்கும்
மாபெரும் பயம்

வெயிலில் முழுதும் நனைந்திட
நினைக்கும் மனதின் பேராசை

அழுது முடித்த அடுத்த நொடி
சிரித்து மகிழும் ஒரு குழந்தையின் மனநிலை

உன் பிரிவெனும்
பெருந்தனிமையை
ஒவ்வொரு நாளும்
இப்படியாகத்தான்
நகர்த்திக்கொண்டிருக்கிறேன் நான். ■



• கவிஜி

# இணையத்தில் ஓர் இலக்கியப் புரட்சி



**ஆழ்மனம் துழாவும் படபடப்பின் வழிநின்று 'படைப்பின்' மூன்றாம் ஆண்டு விழா கொண்டாட்டத்தை அசை போடுகிறேன். ஆசையின் தெப்பம் நிறைந்து வழியும் அற்புத ஞானோதயம் நம்பினோருக்கு வாய்த்திருக்கிறது. இலக்கியத்தின் வெற்றிடம் நிரம்ப ஆரம்பித்திருக்கிறது.**

தொழில்நுட்பம் இன்றி இனி மானுட இயக்கம் இருக்காது. புரிந்துகொண்டு தமிழோடு தொழில்நுட்பத்தையும் சேர்த்துக்கொண்டு பயணிக்கத் தொடங்கியது.. "படைப்பு குழுமம்".

படைப்பு குழுமம் ஆரம்பித்த இந்த மூன்றாண்டுகளில், அது செய்திருக்கும் சாகசங்கள் அசுரத்தனம். நல்ல படைப்பாளியை இனம் கண்டு உலகுக்கு அறிமுகம் செய்து வைப்பது உச்சம் என்பேன். மூன்றாண்டுகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளிக்கொண்டு வந்திருக்கும் "படைப்பு குழுமம்" இந்த வருடம் மட்டும் பதினைந்து நூல்களை அறிமுகப்படுத்தி இருக்கிறது.

எழுதுபவனுக்குக் காசு இரண்டாம் பட்சம்தான். மேடைதான் முதல் நிலை. அது சாத்தியம் ஆகி இருக்கிறது. மனம் நிறைந்த எழுத்தாளன் இன்னும் எழுதுவான். எண்ணங்களில் குறையில்லாத தீவிரத்தை எழுத்துக்களில் காட்டுவான். அவன் சம காலத்தின் பிரதிநிதி.

விதவிதமான போட்டிகளின் வாயிலாக எங்கெல்லாம் திறமை ஒளிந்திருக்கிறதோ அங்கெல்லாம் ஒரு மேடை அமைத்துப் பாராட்டிக் கொண்டிருக்கிறது படைப்பு. விருதுகள், வளருபவனுக்கு வீரியமூட்டுபவை. அது தகுதியான இடத்தில் இருந்து வரும்போது தகுதி உள்ளவை கண்டிப்பாகத் தப்பிப் பிழைக்கும்.

• • •

### 08.09.2019 ஞாயிறின் நிறம் எனக்கு மஞ்சள்

மஞ்சள் சட்டையில்... மகிழ்ச்சி கொட்டும் வெயிலோடு **'அரசு அருங்காட்சியகக் கலையரங்கம், எழும்பூர், சென்னை'** செல்கையில்.. சிரிப்பில்.. சிலிர்ப்பில்.. சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றது படைப்பு குழுமம்.

முறையான வடிவமைப்பில் அரங்கம் ஆத்மார்த்தமாக அமர்க்களப்படுத்தியது.

ஒளியாளும்.. வேண்டிய இருளாளும்.. மானுடக் கொண்டாட்டத்தின் நிலைகொள்ளாமை நீக்கமற நிறைந்து அரங்கத்தில் பூத்து இருந்தது இலக்கியம். முகநூலில் சேர்ந்த ஒரு குழு இத்தனைத் தரமான சம்பவங்களை நிகழ்த்திப் பலத்த கைதட்டல்கள் வழியே பிறிதொரு தேடலை மிக அற்புதமாக நடத்தியது எனலாம். நிகழ்ச்சியை ஒரு கார்ப்பரேட் நிறுவனத்தின் சந்திப்பு போலத்தான் செய்திருந்தார்கள். இதன் பிறகு இது.. இதன் பிறகு இதுதான்.. விருப்பு வெறுப்புக்கு இடமில்லை.

குழுவின் முடிவைச் செயல்படுத்துவதில் காட்டிய முனைப்பு என நிகழ்ச்சி நிரலின் குரல்கள் "தோழர் ரூபஸ் ஆண்டனி மற்றும் சுசித்ரா" அடித்தாடியது எல்லாம் அத்தி பூத்தாற் போல நிகழ்வது. தொய்வில்லாத நிரம்புதல்களில் யார் மீட்டினாலும் வீணையின் இலக்கிய சப்தங்கள். வட்டமிட்ட அரங்கத்தில் வாய் முழுக்கப் புன்னகைதான் யாவருக்கும். மேடையில் நெகிழ்ந்த தருணங்களில் ஆனந்தக் கண்ணீர் கண்கள் தாண்டாவண்ணம் சமாளித்தது இலக்கிய முகம்.

• • •

**நூல்கள் வெளியீடு**

ஒவ்வொரு நூலின் அட்டைப்படமும் பார்க்கும் கண்களை வருடி இமைக்க விடாமல் செய்திருந்தன.

நூல் வடிவமைப்பு.. காலத்தின் கோலத்திற்குத் தன்னைத் தக்க வைத்துக்கொண்டிருந்தது. கண்களில் ஒத்திக்கொள்ளும் கோலாகலம் நிரம்பி... பார்த்ததுமே படிக்கத் தூண்டும் அட்டைப் படங்களின் வழியே விழி ஈர்க்கும் விசை சமநிலையில் சாத்தியப்பட்டிருந்தது.

ஒவ்வொரு நூல் வெளியிடுவதற்கு முன்னும் அந்த எழுத்தாளரைப் பற்றிய ஒலிஒளி அமைப்பு (AV). இதுவரை இது போன்ற பரிசளிப்பைத் தொலைக்காட்சியில் மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த இயல்புக்கு அடுத்தக் கட்ட நகர்வாக இருந்தது. அந்த எழுத்தாளர் எங்குப் பிறந்தார்.. எங்கு வளர்ந்தார்.. என்ன செய்து கொண்டிருக்கிறார்.. அந்த எழுத்தாளருக்கும் தமிழுக்கும் உள்ள உறவு.. இது எத்தனையாவது நூல்.. அதன் மூலமாக அவர் என்ன சொல்ல வருகிறார்.. அவரின் லட்சியம்.. அவரின் பயணம் குறித்தான பாதை.. என அவரைப் பற்றிய சிறு குறிப்பு திரையில் மலர்கையில்... ஆயிரம் கவிதைகள் ஒவ்வொரு எழுத்தாளனையும் சூழ்ந்து கைத் தட்டியது போலத்தான் இருந்தது. பின்னணி இசையும்.. காட்சியின் கோர்வையும்.. கண்கள் போதா நிறைவு. ஒரு சில கவிதைகளை ஒளிர விட்டுக் குரல் வழியே அரங்கை நிறைக்கையில்... சிறந்த கவிதைக்கான தத்துவம் வடிவமைக்கப் பட்டது. பார்க்கப்பார்க்கப் பரவசத்தில் ஆழ்த்திய ஒலிஒளி அமைப்பு, எனக்குத் தெரிந்து இலக்கிய உலகின் முதல் முயற்சி என்றே கூறலாம்.

இலக்கியம் என்றாலே.. ஜோல்னாப் பையுடன் தாடி வைத்துக்கொண்டு சோடாபுட்டிக் கண்ணாடி போட்டுத்தான் இருப்பார்கள் என்ற வடிவத்தைத் தடாலடியாக மாற்றிய படைப்பு குழுமம் மாற்றத்தின் விதை.

இலக்கியம் என்பது பொழுதுபோக்கு அல்ல. அது வாழ்வின் வழி. மானுடத்தைச் செம்மைப்படுத்தும் பொருள். பண்பாட்டுக் கலாச்சாரத்தின் காலடித் தடங்களைச் செப்பனிடுதல். தமிழ்த் தாகத்துக்குத் தமிழ் இலக்கியம் நீரூற்றுவதைப் படைப்பின் வழிநின்று காண்பது பெரிதினும் பெரிது. பசியாறும் தமிழ் வனம் பச்சைப் பயிர் வளர்த்து உச்சம் தமிழ் என்றே காட்டட்டும்.

கடந்த இரண்டு வருடங்களைத் தொடர்ந்து இவ்வருடம் பதினைந்து நூல்கள் வெளியிடப் பட்டன. யாவும் தாள்களால் ஆனவை அல்ல. இலக்கியக் கால்களால் ஆனவை.

1. நம் காலத்துக் கவிதை - விக்ரமாதித்யன்
2. ஆரிகாமி வனம் - முகம்மது பாட்சா
3. எறும்பு முட்டுது யானை சாயுது - கவிஜி (நான் தான்)
4. சொல் எனும் வெண்புறா - மதுரா
5. யாவுமே உன் சாயல் - காயத்ரி ராஜசேகர்
6. நீர்ப்பறவையின் எதிரலைகள் - குமரேசன் கிருஷ்ணன்
7. பொலம்படை கலிமா - ஜோசப் ஜூலியஸ்
8. நீ பிடித்த திமிர் - அகதா
9. இசைதலின் திறவு - ஜானு இந்து
10. மறை நீர் - கோ.லீலா
11. தேநீர் கடைக்காரனின் திரவ ஓவியம் - பிரபு சங்கர்
12. எரியும் மூங்கில் இசைக்கும் நெருப்பு - நடன. சந்திரமோகன்
13. வேர்த்திரள் - சலீம் கான் (தொகுப்பாசிரியர்)
14. வான்காவின் சுவர் - ஜின்னா அஸ்மி (தொகுப்பாசிரியர்)
15. இருளும் ஒளியும் - பிருந்தா சாரதி

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" தமிழில்தான் இருக்கிறது. மேடையை அலங்கரித்த ஆளுமைகள் படைப்புக்கு மட்டுமல்ல.. படைப்பாளிகளுக்கும் நம்பிக்கையை விதைத்தார்கள்.

• • •



## இந்திரன்

இன்றைய இளைஞர்கள் படிப்பது குறைந்துவிட்டது என்று சொல்வதை ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டாலும்.. அவர்களைத் தொடர்ந்து படிக்கவைக்கக் காலத்தின் கையோடு இலக்கியத்தின் கைகள் கோர்க்கும் வேலையைப் 'படைப்பு' செவ்வனே செய்துகொண்டிருக்கிறது. தொழில்நுட்பமும் தமிழும் இணையும் இடம் 'படைப்பாக' இருக்கிறது என்றார் எழுத்தாளர் இந்திரன். இந்திரனில் ஆரம்பித்த படைப்பின் விழா மதியம் இரண்டு மணிக்கெல்லாம் ஜொலிக்க ஆரம்பித்திருந்தது.

இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட கவிஞர்கள் படைப்பாளிகள் ஒன்றாகச் சேர்வது எல்லாம் சாதாரணக் காரியம் அல்ல. அதை நிகழ்த்திக் காட்டி இருக்கிறது படைப்பு. அதுதான் படைப்பின் தனித்த அம்சம் என்றார்.

கடல் பேசும் சப்தங்களால் நிறைந்திருந்த அவையில் "அய்யா இந்திரன்" அலை அலையாய்ப் பேசியது.. கடற்கரை சுகம். அவர் சொற்களில் நாமும் கண்டோம் அவர் கண்ட பாண்டிச்சேரிக் கடலின் அதிகாலைத் தவம்.

• • •




## 'பவா' செல்லத்துரை

விழாவில் எனக்கு மிக நெருக்கமான இலக்கிய மனிதராகத் தெரிந்தவர் "பவா செல்லத்துரை".

மேடையில் அவர் கதை சொல்லிய விதம் அரங்கை அமைதியில் தாலாட்டியது. அவர் கதை சொல்லத் தொடங்கும்போதே நமக்குள் நம் பால்யம் சம்மணமிட்டு அமர ஆரம்பிக்கிறது.

கதையும் கதைக்கான காரணங்களும் பெரிதாக என்ன இருந்துவிடப் போகிறது... வாழ்வியலின் மகத்துவத்தைத் தாண்டி 'பவா' எனக்கு மிகப்பெரிய நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறார். அவர் பேச்சும் உடல் மொழியும் ஒவ்வொருவருக்கும் அவரவரின் அப்பாவை நினைவூட்டுபவை. தாத்தாக்களின் கனிவைக் கொண்டிருக்கிறார். நம்மூர்க் கிழவிகளின் வெற்றிலை இட்ட வாய் அவருக்கு. நரை கூடிய தாடியில் பஞ்சு மிட்டாய் நினைவுகளை இன்னும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார். மானுடத்தின் நெகிழ்வு அவரின் உடல் மொழியில். அவரின் குரலில் காதலியின் சுவீகாரம்.

ஒரு கதைக்கு, ஒரு கதாபாத்திரத்துக்கு, ஒரு கதை முடிச்சுக்கு அவர் மெனக்கெடும் சொற்களில் அன்பையும் அறத்தையும் கொண்டு அழகு சேர்க்கிறார். ஜெயகாந்தனின் கதையை அவர் சொல்ல ஜெயகாந்தனே கேட்டது போல உணர்ந்தேன். அவை கூடிய அவரின் சொற்களில் இலக்கியம் தன்னில் மகுடம் சூட்டிக்கொண்டது. எளிய மனிதனின் பக்கம் எப்போதும் நிற்கும் ஒற்றை யானையாக 'பவா' பேசிக்கொண்டே இருக்கிறார். அவர் பேச்சுக்களில் துளையற்ற மூங்கிலின் இசையை நான் உணர்கிறேன்.

ஆச்சரியம் கலந்த குரலில் கதை சொல்லும் நேர்த்திக்கு அவர் உடல் அசையும் அற்புத கணம், காணக்காணச் சொற்களுக்கும் சிறகு முளைக்கும் அழகு. வாழ்வைப் பேசும்போதெல்லாம் அவர் ஒரு தீர்க்கதரிசியாகவே நிற்கிறார். "பவா செல்லத்துரை" என்ற மனிதனே ஓர் இலக்கியமாகி விட்டார் என்றுதான் நம்புகிறேன். அந்த நம்பிக்கை பெரும்பலத்தோடு இந்த வாழ்வின் கதையைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

என் பாட்டியின் தூரத்துக் கண்கள் 'பவா'வினுடையது.

• • •




## அமுதபாரதி

நரை கூடிய கிழப்பருவத்திலும் மினுமினுங்கும் ஆறெழுத்துக் கவிதை "அமுதபாரதி".

நான்கு வருடங்களுக்கு முன்பு பாண்டிச்சேரியில் இவரோடு ஒரே அறையில் ஓர் இரவு தங்கும் தருணம் எனக்குக் கிடைத்தது. அப்போது இவர் இத்தனைப் பெரிய ஆளுமை என்றெல்லாம் தெரியாது. இரவு இரண்டு மணி வரை ஹைக்கூ பற்றி.. கவிதைகள் பற்றி... எழுத்தின் மயக்கங்கள் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருந்தார். இப்போது நினைத்துப் பார்க்கிறேன். எப்போதோ இவரின் ஆசி பெற்றுவிட்டேன். இப்போது காட்சிப்பட்டிருக்கிறது. இவரின் கையால் விருது வாங்கியதை மிக நுட்பமான இலக்கியப் புள்ளியில் நின்று ஆராதிக்கிறேன்.

தனிப்பட்ட சோகம் இவரை வாட்டினாலும் அதன் சோகம் கண்களில் இருந்தாலும்... பேசுகையில் இருப்பதேயில்லை. மெய்ம்மறந்த மலை உச்சியில் அமர்ந்திருக்கும் ஒற்றைக் காகத்திற்கு இவரின் நிறம்தான். "படைப்பு குழுமம்" நிதி திரட்டி இவருக்குக் கொடுத்தது, விழாவின் மணிமகுடமாக இருந்தது. படைப்பாளிக்கும் வயிறு உண்டு என்பதை இதன் மூலம் சமூகத்துக்குச் சொல்லவேண்டிய நிர்பந்தத்தை இந்தக் காலம் ஏற்படுத்திவிட்டதைச் சற்று அச்சத்தோடுதான் காண்கிறேன்.

உலக அளவில் நம் நாட்டில்தான் எழுத்தாளனுக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதில்லை என்பதையும் இங்கே வருத்தத்தோடு பதிவு செய்கிறேன். காலத்துக்கும், தமிழுக்கும் தமிழ் நிலைக்கும் உழைத்த எழுத்தாளன்.. அவன் இறுதிக் காலத்தில் தவித்திருக்கிறான். பொருளாதாரம் பொருட்டு அவன் காலம் சுருங்கிவிடக் கூடாது என்ற படைப்பின் கரிசனம் கண் கலங்கச் செய்தது. எழுந்து நின்று கை தட்டவும்.

• • •

## லிங்கூ

லிங்குவை ஒரு இயக்குனராக நான் காணவில்லை. ஒரு படைப்பாளியாக... ஒரு எழுத்தாளராகத்தான் பார்த்தேன். கழுத்து சாய்ந்த அதே அமைதி. விழா இறுதி வரை பொறுமையாக, பொறுப்பாக அமர்ந்திருந்த லிங்கு தன்னம்பிக்கையின் உச்சமாகவே இருந்தார்.

பேசுகையில் "ரன்" படத்தில், தான் வைத்த ஒரு காட்சியைப் பற்றிச் சிலாகித்துப் பேசினார். ஒரு தீவிரம் எப்போதும் அவரின் காட்சிகளில் இருக்கும்.

பேருந்தை விட்டு இறங்கிய பிறகு தனக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்த பெண் மெல்ல எட்டிப் பார்க்க.. அவ்வளவு நேரம் அவள் பார்ப்பாள் பார்ப்பாள் என்று ஏங்கிய அவன்..



அவள் பார்த்த நொடிக்கும் குறைவான நொடிப் பொழுதில்.. பேருந்து புறப்பட ஆரம்பித்த அந்த நொடிப்பொழுதில், விட்ட பேருந்தை ஓடிச் சென்று பிடிக்கும் காட்சி.. இன்னமும், தியேட்டரில் எழுந்த விசிலும் கைத்தட்டலும் ஆரவாரச் சத்தத்தோடு கேட்கிறது. இது அவர் வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவம் என்று சொல்கையில்... எல்லார் முகத்திலும் புன்னகை.

ஒரு கலைஞன் தன் வாழ்வில் இருந்துதான் படைப்புகளைக் கட்டமைக்கிறான். பின்பு அது விரிவடைய ஆரம்பிக்கிறது. அதே படத்தில்.. வெளியே தப்பித்து ஓடி விடுவது போல ஓடி - நாமும் அப்படித்தான் நினைப்போம் - சடாரென ஷட்டரை இழுத்து அடைத்துவிட்டுத் திரும்பி நிற்கும் கதை நாயகனாகவேதான் லிங்குவும் இருக்கிறார்.

அவர் பேசுகையில் மிக முக்கியமான விஷயமாகப் பட்டது..... 'நலிவடைந்த கவிஞர்கள்' என்று எப்போதும் சொல்லாதீர்கள். அவர்கள்.. பொருளாதாரத்தில் பின் தங்கி இருக்கலாம். ஆனால் இந்த வாழ்வைக் கொண்டாடும் தரிசனங்களில் எப்போதும் முன்னால்தான் இருக்கிறார்கள் என்றார். சரிதான்.... ஒரு கவிஞன் எப்போதும்... உச்சாணியில்தான் அமர்ந்திருக்கிறான். அவனுக்குக் காசு இரண்டாம்பட்சம்தான்.. ஒரு நல்ல கவிதைக்குக் காத்திருப்பதுதான் அவனின் ஆகச் சிறந்த ஆசையாக இருக்கிறது. சுருங்கக் கூறி அவையை நிரப்பிச் சென்ற லிங்குசாமிக்குள் இருக்கும் கவிஞன் தமிழ் வேட்டைக்குக் காத்திருக்கும் அஞ்சானாகவே இருக்கிறான்.

• • •

### அமிர்தம் சூர்யா

இவர் எனக்கு நெருக்கம். என் முதல் கவிதைத் தொகுப்பு "நிழல் தேசத்துக்காரனின் சித்திரப் பறவைகள்"க்கு அணிந்துரை எழுதிய அண்ணா.. நண்பா.. தோழா. இவருக்கு சார் என்று அழைத்தால் பிடிக்காது. அதனால் அண்ணா தான். மேடையில் ஏறியதும், "வாடா.. வா...." என்று வாரி அணைத்துக்கொண்ட அன்பின் சூர்யம்.

"நாலு வார்த்தை நல்லா இருக்குன்னு பாராட்றதுல என்ன வந்துடப் போகுது.. தகுதி இருக்கறவன் வளரட்டுமே" என்றார் மேடையில். மிக நெருக்கமாக மானுடம் பேசுபவர். மிக மிக நுட்பமான சக மனிதப் புரிதலை மேடையில் சிரித்துக்கொண்டே சொன்னது தகுதியானதாக இருந்தது.

எங்கெல்லாம் இலக்கியக் கூட்டங்கள் நடக்கிறதோ அங்கெல்லாம் அண்ணாவைப் பார்க்கலாம். பாராட்ட மட்டும் அல்ல. படிப்பதற்கும், படித்துக்கொண்டே இருப்பதற்கும் காத்திருப்பவர்.

'படைப்பு' மேடைக்குக் குறுந்தாடி வைத்தது போல இவரின் அமர்வு.

ஒரு சாமானியக் குரலில் தோள் தட்டிக் கொடுக்கும் இவரின் உறவு இலக்கியம் தாண்டிய மானுடத்துக்கானது.

"ஒருத்தருக்கொருத்தர் பாராட்டிக்கோங்க" என்கிறார். வாழ்வின் மிகப்பெரிய தத்துவத்தைக் கண்டது போலத்தான் நான் அந்த வார்த்தை களை உணர்ந்தேன். மிகச் சிறிய வாழ்வு இது. மிகப் பெரியது அன்புதான். அதன் வாசலைப் பாராட்டுதலின்வழி திறந்த அமிர்தம் சூர்யா தமிழ் அமிர்தம் என்றால் தகும்.

• • •

**விக்ரமாதித்யன்**

மூத்த கவிஞர். ஒரு குழந்தையின் மனநிலையில் இவ்வுலகைத் தரிசிக்கும் சூத்திரமற்றவர்.

விக்ரமாதித்யன் இவர் பெயரிலேயே ஒளி படைத்த கவிதை ஒன்று இருப்பதை உணர் கிறோம். வெள்ளுடை தரித்து வெண்தாடி நிறைந்து வாய் வரைந்த சிரிப்பால் அவை நிறையவும் வைத்தார். மேடை ஏறிய ஒவ்வொரு படைப்பாளியையும் வாரி அணைத்து வாழ்த்தினார். கவிதைகளால் பெருகிய மனிதர். சிரிப்பொலியால் சிதறிய மாமனிதர். அவரின் நூலையும் வெளியிட்டுப் 'படைப்பு' தன் தலையில் கிரீடம் சூடிக்கொண்டது.

மேடையில் இவர் பேசுகையில் அத்தனைக் குதூகலம். இலக்கியம் சீரியஸ்தான். ஆனால் இலக்கியவாதி சிரிக்கலாம் என்பதுதான்.. தத்துவம். இயல்பில் இரு. இயன்றவரை தமிழால் இணைந்திரு.. என்பதுதான் சாராம்சம். தன்னைத் திறந்த புத்தகமாகவே எப்போதும் எழுதிக் கொண்டிருப்பவர். படைப்பின் தத்துவங்களில் மிகப்பெரியது.... தமிழோடு இருப்பது.... தமிழைத் தொழில்நுட்பத்தோடு இணைத்திருப்பது. அதை மூன்றாம் ஆண்டு விழாவில் நிரூபித்துக்காட்டிய 'படைப்பை'த் தனக்கே உண்டான சிறுபிள்ளைச் சிரிப்பில் வியந்து பாராட்டினார்.

வாழ்நாள் சாதனையாளர் விருதை "அய்யா விக்ரமாதித்ய"னுக்குக் கொடுத்துத் தன் நெற்றியில் நட்சத்திரத்தையும் சூடிக்கொண்டது 'படைப்பு'.

• • •

**பிருந்தா சாரதி**

பூக்கிறது காய்க்கிறது

கனிகிறது

மயானத்து மரமும்

இந்தக் கவிதையிலிருந்து என்னால் மீளவே முடியவில்லை. கவிதைக்குச் சொந்தக்காரர் பிருந்தா சாரதி. லிங்குவின் சாரதியும் கூட. இவர் நூலும் இங்கே வெளியிடப்பட்டது. எந்த மேடை அலங்காரமும் இன்றிப் பேசும் இவர், படைப்பு விழாவின் சாரதியும் கூட.

கடந்த வருடமும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார். அரங்கத்திலிருப்பவர் மீதும் வெளிச்சம் வீசுங்கள்... எனக்கு அவர்களைப் பார்த்துப் பேச வேண்டும் என்று முதல் பந்திலேயே சிக்ஸர் அடித்தார். மேடை என்பது ஒரு வசதிக்காகத்தானே தவிர கொம்பு முளைத்து அமர்வதற்காக அல்ல என்பதைத்தான் அவரது எளிமை சொல்லாமல் சொன்னது. அவரின் "இருளும் ஒளியும்" கொடுக்கும் செய்திகள் ஏராளம்.

ஆரூர் தமிழ்நாடன் போன வருடம் போல இவ்வருடமும் வந்திருந்து விழாவை நடத்திக் கொடுத்துச் சிறப்பித்துச் சென்றது மனம் நெகிழச் செய்தது. படைப்பின் தூணாகவே எப்போதும் இருக்கிறார்.

ஈரோடு மகேஷ்.... வழக்கம் போலப் பேசினார். சிரிக்கும்படி பேசினார்.

இத்தனைப் பெரிய விழா.. "மூன்றாம் ஆண்டு விழாவாக நடந்துகொண்டிருப்பதற்கு ஒரே காரணம் ஜின்னா என்கிற இந்த ஒற்றைக்குடை" என்றார்.. நண்பர் தமிழன் பிரசன்னா. சத்திய வார்த்தைகள்.

• • •

**விருது**

விருதுகள் வளரும் கலைஞர்களுக்கு நல்ல உற்சாகத்தைத் தரும். விருதுகள் கொம்பு முளைக்க வைத்துவிடக் கூடாது என்ற கண்டிஷன்ஸ் அப்ளை.



வேர்த்திரள், மழைக்கு ஒதுங்கிய வானம் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான விருது.. வாழ்நாள் சாதனையாளர் விருது.. சமூகப் பணிகள் செய்தவருக்கான விருது.. தன் சொந்தக் காசில் ஏழைப் பெண்ணுக்குக் கழிப்பிடம் கட்டித் தந்த முன்னுதாரணப் பள்ளி மாணவிக்கு விருது.. போன வருடம் நடந்த கதை.. நாவல்.. கவிதை.. கட்டுரை போன்ற இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான விருது.. சிறந்த பின்னூட்டம் இட்டவருக்கான விருது.. தொடர்ந்து படைப்பில் பங்களிப்பு செய்துகொண்டிருப்பவருக்கான விருது.. சிறந்த மாதாந்திரப் படைப்புக்கான விருது.. கவிச்சுடர் விருது.. மக்கள் செல்வாக்கு பெற்ற படைப்பாளிக்கான விருது.. இன்னும் பல விருதுகள்.. என்று இலக்கியத்தோடு தொடர்ந்து பயணித்துக்கொண்டிருக்கும் சிறந்த மனிதர்களைத் தேர்ந்தெடுத்துக் கௌரவித்த "படைப்பு குழுமம்" இலக்கிய உலகில் தன்னை ஆழமாகப் பதித்து முன்னுதாரணமாகிவிட்டது. இனி படைப்பு அடைய வேண்டிய உச்சத்தை இலக்கியம் பார்த்துக்கொள்ளும்.

• • •

## நிறை – குறை

பரவலாக எல்லா ஊர்களிலிருந்தும் படைப்பாளிகள் வந்திருந்தார்கள். மலேசியா, பினாங்கில் இருந்து கூட தமிழுக்காக வந்திருந்த படைப்பாளிகளைப் படைப்புதான் சாத்தியப் படுத்தியிருந்தது. ஒரே இடத்தில் அத்தனைக் கலைஞர்கள் ஒன்று கூடித் தமிழைக் கொண்டாடியதைக் காணக் கண் கோடி வேண்டும். படைப்பின் விருட்சம் தளதளத்த காட்சி அற்புதம். படைப்பின் இலைகள் மினுமினுங்கிய வெற்றிடத்தை நிரப்பியது இலக்கிய ஆலாபனைகள்.

நிறைகள் இருக்கும்போது குறைகளும் இருக்கத்தான் செய்யும்.

எல்லாமே மானுட உழைப்பு என்கையில் தவறுகள் நிகழ்வது இயற்கையின் நியதி. இரவு எட்டு மணி தாண்டியும் விழா தொடர்ந்து கொண்டிருந்தது என்னைப் போன்ற தூர தேசத்துக்காரர்களுக்குத் தவிப்பை உண்டு பண்ணியது.

கடந்த வருடம் கொடுத்த விருதின் வடிவமைப்பு... கனம்... தோற்றம் இந்த வருடம் குறைந்திருந்தது. போன வருடம் கொடுத்த விருது இன்னும் பார்வைக்கழகாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இலக்கிய விருதுகள் வாங்கியவர்களை மேடையில் பேச வைத்திருக்கலாம். புத்தகம் வெளியிட்டவர்களின் ஏற்புரையையும் முன்னமே பேசிப் பதிவு செய்து திரையிட்டிருக்கலாம்.

காலம் சரிசெய்ய வேண்டியவை இவை. மற்றபடி... படைப்பு மூன்றாம் ஆண்டு விழா.. நிறைவு. மனம் முழுக்க சிம்மாசனம் போட்டு ஏறி அமர்ந்துகொண்டது "படைப்பு".

படைப்பு தகவு, படைப்பு கல்வெட்டு, படைப்பு இலக்கிய விருதுகள் என்று இப்போது இருப்பவற்றைத் தாண்டி அடுத்தடுத்து... படைப்பு டிவி, படைப்பு மேடை, படைப்பு பசுமைத் திட்டம், படைப்பு பதிப்பகம், படைப்பு அறக்கட்டளை, படைப்பு கலை இலக்கிய விருதுகள், படைப்பு பண்பலை, படைப்பு வலையொளி, படைப்பு இணையதளம்.... என்று படைப்பின் படையல்கள் வந்ததற்கும்.. அடுத்தடுத்து எதிர் வரும் நாட்களில் வர இருப்பதற்கும் மனம் நிறைந்த பாராட்டுக்கள். "படைப்பு" இலக்கிய விருட்சமாய் வளர்ந்து நிற்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. படைப்போடு சேர்ந்து இச் சிறு துரும்பும் பல் குத்த உதவுகிறது எனும்போது.... புன்னகைக்காமல் இருக்க முடியவில்லை.

முகநூலில் மட்டுமே பழகிக்கொண்டிருந்த நட்புகளை நேரில் காண வாய்ப்பாக அமைந்தது இவ்விழா. கூடி வாழ்தல்தானே வாழ்வு. அதன் அடையாளம்தான் படைப்பு.

தமிழால் இணைந்தோம்.... தமிழால் உயர்வோம். ■

சிறுகதை

• அண்டனூர் சுரா
ஓவியங்கள் : அன்பழகன்

# நின்னைச் சரணடைந்தேன்

அவன் எட்டையபுரம் சிவன் சன்னதியின் கடைசிப் படிக்கட்டில் உட்கார்ந்து கிழக்கு நோக்கிப் பார்த்திருந்தான். அவனுக்கு முன்னே, அவனுக்குள், அவனைச் சுற்றிலும் எங்கெங்கு காணினும் சக்தியாகக் கண்ணம்மா நிறைந்திருந்தாள்.

தனித்திருத்தலும், காத்திருத்தலும்தானே காதல்? கூண்டுக்கிளியைப் போல் தனிமை கொண்டு சுடர்விளக்காக உள்ளம் துடித்திருந்தான். அவளுக்காகக் காத்திருந்த ஒவ்வொரு நொடியும் அவனுக்குள் கதம்பம் போல் கனத்தன. அச்சுமையில் ஒரு சுகமிருந்தது. கனல் இருந்தது. அவளைப்பற்றிய ஒவ்வொரு நினைவும் பூச்சொரிந்து அலங்கரித்தது.

சின்னஞ்சிறு கிளியே, செல்வக்களஞ்சியமே, பிள்ளைக் கனியமுதே, பேசும் பொற்சித்திரமே, எப்பொழுது நீ வருவாயடி கண்ணம்மா.... அவனுக்குள் யாரோ பாடுவதைப் போலிருந்தது.

'சிவ, சிவ, சிவ...', 'ஜீவ...ஜீவ...ஜீவ....', 'தேவ...தேவ...',


'கிலுகிலு கிலுகி......', 'கிக்கீ....கிக்கீ.....', 'கேக்க.....கேக்க.....',

'கொக்கெக்கே.....கொக்கெக்கே.....', 'குக்குக் குக்குக் குக்குக் குக்குக் குக்கூவே.......',

'கீச்கீச்...கீச்கீச்.....', 'கிசு...கிசு...கிசு....', 'ரங்க...ரங்க....' என்றவாறு பட்சிகளின் குதூகல ஒலியும், ஆடவர் மற்றும் பெண்களின் களியாட்டமும் இரண்டறக் கலந்து கேட்பதாக இருந்தன. அத்தனை ஒலிகளுக்கிடையில், கண்ணம்மா அணிந்து வரும் கால் கொலுசின் சிணுங்கலைத் தனியே பிரித்தறியக் காத்திருந்தான்.

கார்காலம், அந்தி முடிந்து முன்னிரவு மேனியைப் போர்த்துக்கொள்ளத் தொடங்கி யிருந்த காதல்மைய நேரமது!

விடிந்தால் சுப்பையாவிற்குத் திருமண வைபோகம். அவனது வீட்டில் கெட்டிமேளம், நாதஸ்வரம் முழங்கிக்கொண்டிருந்தன. அவனது வீட்டின் ஆரவாரம் தெருவைத் தாண்டி, வானுயர்ந்த மரங்களைத் தாண்டி அவனுக்குக் கேட்கத் தொடங்கியிருந்தது. உறவுகள், சொந்த பந்தங்கள் வேலைகளை வரிந்து கட்டிக்கொண்டு செய்துகொண்டிருந்தார்கள். அவனது வீட்டில் நண்பர்கள், உறவினர்கள் பேசிக்கொள்ளும் குதூகல அரவம் கல்தூரம் தாண்டி அவனுக்குக் கேட்டுக்கொண்டிருந்தது. இளைஞன் சுப்பையா எதையும் பொருட்படுத்தவில்லை. சன்னதியின் பின் வாசலில், கடைசிப் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தவன் மெல்ல எழுந்து தீர்த்தக் கரையில் தெற்கு மூலையில் செண்பகத் தோட்டத்தில் போய் உட்கார்ந்துகொண்டான்.



பொழுது நகர சன்னதியில், தீர்த்தக் கரைதனில் ஆளரவம் மெல்லக் கரைந்து கொண்டிருந்தது.

அபிஷேகம் செய்யும் குருக்கள் இல்லை. சன்னதியைச் சுற்றி வரும் பெண்கள் இல்லை. குழந்தைகள் இல்லை. பெண்களின் துணை, இணை.. என அவனைச் சுற்றிலும் யாருமில்லை.

சுப்பையாவின் இதயம் உரல் இடிக்கும் சப்தமாக அவனுக்குள் கேட்கத் தொடங்கியது. மேனி கொதித்தது. விடைக்கும் நரம்புகள் துழன்றன. கண்களை உருட்டித் திரட்டி அவள் வரும் திசையைப் பார்த்தான். ஒத்தையடிப் பாதை துடைத்துக்கிடந்தது.

'இன்று வருவதாகச் சொல்லியிருந்தாளே... வருவதாக இருந்தால் இந்நேரம் வந்திருப்பாளே' என்றவாறு திசைகளைச் சுற்றும்முற்றும் பார்த்தான். அவள் நின்ற இடங்கள், நடந்த இடங்கள் அவளைப் போலவே தெரிந்தன.

'வார்த்தை தவறி விட்டாய் அடி கண்ணம்மா! மார்பு துடிக்குதடீ!' அவனுக்குள் பாடிக் கொண்டான். தீர்த்தக் கரையின் கடைசிப் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தவன் மெல்ல எழுந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். சன்னதியை ஒரு சுற்று வந்தான்.

'கண்ணம்மா...கண்ணம்மா....'

அவளது பெயரை அவன் உச்சரிக்கையில் அவனுக்குள் இன்பத்தேன் வந்து பாய்வதைப் போலிருந்தது. வந்தே மாதரம் எனச் சொல்கையில் அவனுக்குள் பாயும் புத்துயிர் போல ஓர் உருவமற்ற பாய்ச்சல் அவனுக்குள் ஊடுருவியது. கண்களை மூடுவதும் திறப்பதுமாக இருந்தான். நேற்று அவளை நினைத்து எழுதிய பாடல் நினைவிற்கு வந்தது. காற்றில் அளாவிக் கைகளை வீசிக்கொண்டு உரத்தக்குரலில் பாடினான்.

'காற்று வெளியிடைக் கண்ணம்மா நின்றன்
காதலை யெண்ணிக் களிக்கின்றேன் அமுது
ஊற்றினை யொத்த இதழ்களும்...'

'ம்..... இதழ்களும்....?'

ஒரு கிளிப்பேச்சு அவனது காதிற்குள் நுழைந்தது. பாடிக்கொண்டிருந்தவன் பாடலை நிறுத்திக் கண்களை அகலத் திறந்து பார்த்தான்.

'சுப்பையா...'

அவளது பிம்பம் விழித்திரையில் விழுவதற்கும் அவளது கொஞ்சும் மொழி அழைப்பு செவியில் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

'கண்ணம்மா....' அவளது கரத்தைப் பற்ற நெருங்கினான்.

'வேணாம்....' என்றாள்.

சுப்பையாவின் முகத்தை அவள் குறுகுறு வெனப் பார்த்தாள். அரும்பிக்கொண்டிருந்த மீசையை ரசித்து.. அவனது தலையில் கட்டியிருந்த முண்டாசை ரசித்தாள். அவனது ஏறிய நெற்றி, நிமிர்ந்த நெஞ்சு, குவிந்த இதழ்கள், ஏறு போன்ற நடை, குன்றென நிமிர்வு.. மெல்லச் சிரித்தாள்.

'நல்லா இருக்கிறது சுப்பையா....'

'என் பாட்டைத்தானே சொல்கிறாய்....'

அவள், 'ஆம், ஊகூம்.. இல்லை.....' மேலும்கீழுமாக, இடமும் வலமுமாகத் தலையை ஆட்டினாள்.

'கண்ணம்மா, உனக்கு நான் எழுதிய பாட்டு இது. பிடிக்கவில்லையா....?'

'பிடித்திருக்கிறது. ஆனால்...'

'ஆனால்..?'

'பிடிக்கவில்லை....'

'என்ன சொல்கிறாயடி கண்ணம்மா...?'

'உன் பாடலில் பிழை இருக்கிறது சுப்பையா...'

'இருக்காது கண்ணம்மா....' என்றவாறு அவன் குன்றென நெஞ்சை நிமிர்த்தினான்.

'பிறகு என்ன நான் பொய் சொல்கிறேன் என்கிறாயா....?'

'சரி, சரி. கற்றதொழுகு. என்ன பிழை...?'

'பொருட்பிழை...'

'இருக்காது. நீ என்னை வம்புக்கிழுக்கவே இப்படியாகச் சொல்கிறாய்.'

'மெய். வேண்டுமானால் இன்னொரு முறை உன் பாடலைப் பாடேன்....'

அவன் கண்களை இறுக மூடிக்கொண்டு பாடினான்.

'காற்று வெளியிடைக் கண்ணம்மா நின்றன்...'

'நிறுத்தும் சுப்பையா'

அவன் விகற்பத்தோடு தான் பாடியதை நிறுத்தினான். 'பிழை தெரிகிறதா இல்லையா....?'

'என்ன பிழை....?'

'உன் பாடலில் இருக்க வேண்டியது கண்ணம்மா இல்லை செல்லம்மா...'

'கண்ணம்மா என் காதலி '

'செல்லம்மா உன் வாழ்க்கைத் துணைவி. காற்று வெளியிடை செல்லம்மா நின்றன் காதலை யெண்ணிக் களிக்கின்றேன்.. இப்படித்தான் உன் பாடல் இருந்திருக்க வேணும் '

'கண்ணம்மா, இது உனக்கான பாட்டு'

'எனக்கு நீ பாட்டெழுத வேண்டாம் என்கிறேன்.'

'கண்ணம்மா! வானமழை நீ எனக்கு, வண்ணமயில் நானுனக்கு; பானமடி நீ எனக்கு, பாண்டமடி நானுனக்கு.'

'சுப்பையா, உன்னைக் கும்பிட்டுக் கேட்டுக்கொள்கிறேன். போதும்...போதும்....'

'மாட்டேனடி கண்ணம்மா. காதலடி நீ எனக்கு காந்தமடி நானுனக்கு; வேதமடி நீ எனக்கு, வித்தையடி நானுனக்கு'

'அய்யோ, என்னை உன் எதிர்காலத்துடன் உதைத்து விளையாடும் பந்தாக்கி விடாதே. நான் உன்னைப்போல ஆண் அல்ல....'

'கண்ணம்மா, பேதம் பார்க்காதே. காதலில், களவில், கற்பில் ஆண் என்றும் பெண் என்றும் பேதமில்லை. கற்பென்று வைத்தால் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவென்று வைப்பவன் நான்'

'சுப்பையா, நான் உன் குலத்தாள் இல்லை....'

'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே! பாடியிருக்கிறேன் கண்ணம்மா....'

'போச்சு! போச்சு! உன்னால் என் நிம்மதியெல்லாம் போய்விட்டது.' கண்ணம்மா அதே இடத்தில் உட்கார்ந்து மடிக்குள் தலையைப் புதைத்துகொண்டு மேனி குலுங்கினாள்.


'கண்ணம்மா, என்ன செய்கிறாய்... எங்கே உன் முகத்தைக் காட்டு.' அவள் மடியிலிருந்து தலையை நிமிர்த்தினாள். அவளது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியிருந்தது. அவளது கன்னத்துளியை விரல்களால் துடைத்தான்.

'அழாதேயடி கண்ணம்மா. அழாதே, உன் கண்ணில் நீர் வழிந்தால் என் கண்ணில் உதிரம் கொட்டுதடி.....'

கண்ணம்மா சட்டென அழுகையை நிறுத்தினாள். முந்தானையால் முகத்தைத் துடைத்துக்கொண்டாள். இருவரும் சோலையைத் தாண்டி மரம், செடி, கொடிகளின் பூக்களைக் கிள்ளி ஒருவர் மீது ஒருவர் விட்டெறிந்துகொண்டு நடந்தார்கள்.

'சுப்பையா போதும். எனக்கு விடைகொடு. நான் விடைபெறுகிறேன்...'

'மாட்டேனடி.. நீ என் கூடவே இருக்க வேண்டியவள்....'



அவள் நின்று நிதானித்துச் சுப்பையாவை நேருக்கு நேர் பார்த்து முறைத்தாள்.

'என்ன சுப்பையா விளையாடுகிறாயா, நாளை உனக்கும் செல்லம்மாவிற்கும் திருமணம்.. மறந்து விட்டாயா.....?'

'உன்னை மறக்க முடியவில்லையே கண்ணம்மா...'

'நீ என்னை மறந்துதான் ஆக வேண்டும்....'

'நான் ஏன் உன்னை மறக்க வேண்டும்....?'

'நீயோ பிராமணன். நானோ உன் குலத்திற்குத் தொண்டூழியம் செய்பவள். நான் உனக்குக் காதலியாக இருக்கலாம். துணைவியாக இருக்க முடியாது.'

'சாத்திரம் பேசுகிறாய் கண்ணம்மா. சாத்திர மேதுக்கடீ? ஆத்திரங் கொண்டவர்க்கே கண்ணம்மா சாத்திர முண்டோடீ?'

'நான் ஒன்றும் சாத்திரம் பேசவில்லை. சாதி தர்மம் அப்படியாக இருக்கிறது என்றுதான் சொல்கிறேன்.'

'சாதிகள் இல்லையடி பாப்பா எனப் பாடியவன் நான்....'

'அட பைத்தியக்காரா, பாப்பாவிற்குத்தானே பாடியிருக்கிறாய். தாத்தாக்களுக்கு இல்லையே...' என்றவாறு அவள் ஒரு பூச்சொரிந்த மரத்தின் தூணில் முகம் புதைத்தாள்.

'கண்ணம்மா, நீ வாய்ச்சொல்லில் வீரரடீ....' என்றவாறு அவன் அவளது முகத்தைத் திருப்பி அவளது நிலா முகத்தைப் பார்த்தான். அவளது வேதத்திருவிழிகள் தேன்சிட்டின் சிறகைப்போல அடித்துக்கொண்டிருந்தன. அவளது தேனிதழ்கள் வறண்டு துடித்தன. அவளது நகை செங்காந்தள்; விழி முல்லை அரும்பு; முகம் செந்தாமரை; சுட்டும் இரு விழிச் சுடர்கள் சூரியர் சந்திரர்கள்! வட்டக் கரிய விழிகள் வானக் கருமை அணிந்தவை!

'உன்னை நான் விடப்போவதில்லை. இப்படி வா. என் மடியில் உட்கார்....'

'நான் மாட்டேன் சுப்பையா.... மாட்டேன்....'

'அப்படியானால் என்னை நீ இத்தனை நாளும் காதல் செய்யவில்லை. அப்படித்தானே....?'

'என் காதலுக்கு முன்னால் உன் காதல் மண்டியிட வேணுமடா....'

'என்னை விடவும் நீ அதிகமாகக் காதலித்தாய் என்கிறாயா....?'


'பின்னே இல்லையா....?'

'எப்படிச் சொல்கிறாய்...!'

'நீ என்னை மட்டுமா காதலித்தாய்.....?'

'பிறகு....!'

'நீ கவிதையைக் காதலித்தவன். இந்தியச் சுதந்திரத்தைக் காதலித்தவன். பத்திரிக்கைகளைக் காதலித்தவன். எழுத்தைக் காதலித்தவன். அதோ, அங்கே ஓடுகிறதே வெள்ளை நிறத்திலொரு பூனை; அதைக்கூட விட்டு வைக்காதவன். இத்தனையையும் காதலித்து மிச்சம் நேரத்தில் தானே என்னை நீ காதலித்தாய். ஆனால் நான் என்ன அப்படியா, எனக்குச் சகல நேரமும் உன் நினைப்புதான்!'



சுப்பையா கண்ணம்மாவின் பேச்சை மெய்மறந்து ரசித்தான். 'அப்பப்பா...! ஒரு பல்லவியையே மூச்சு விடாமல் ஒப்பித்து விட்டாயே. நல்லாப் பேசுகிறாயடீ கண்ணம்மா....'

'நீ எனக்கு எழுதித் தரும் காதல் கவிதைகளைப் படித்து இதைக்கூடப் பேசாவிட்டால் எப்படியாம்!'

இருவரும் பேசிக்கொண்டே சன்னதியை ஒரு சுற்றுச் சுற்றி வந்தார்கள். எப்பொழுதும் கண்ணம்மா முன்னே நடக்க சுப்பையா பின்னால் நடந்து வருவான். அன்றைய தினம் சுப்பையா முன்னே நடக்க அவள் பின்னால் நடந்தவளாக இருந்தாள்.

'சுப்பையா, நான் ஒன்று கேள்விப்பட்டேன் உண்மையா...?'

'சொல்லடி கண்ணம்மா....?'

'உன்னை இப்பொழுது யாரும் சுப்பையா என்று அழைப்பதில்லையாமே....?'

'நீ அப்படித்தானே என்னை அழைத்து வருகிறாய்....?'

'என்னை விடும். மற்றவர்களைச் சொல்கிறேன்....'

'சுப்பையா என்று அழைக்காமல் வேறு எப்படி அழைக்கிறார்களாம்....?'

'சுப்பிரமணியம் என்றும் பாரதி என்றும் அல்லவா அழைக்கிறார்களாம்.'

'நீ என்னைச் சுப்பையா என்றே அழை கண்ணம்மா....'

'நான் மாட்டேன்....'

'ஏன்....?'

'உன்னை அவ்வாறு அழைக்க நான் உன் இல்லத்தாள் செல்லம்மாள் இல்லையே...?'

அவள் அப்படிச் சொன்னதும் சுப்பையாவின் முகம் சூரியக்கதிர் பட்டு உடையும் பனித்துளியைப் போல உடைந்தது. அவளை அள்ள, செல்லமாகக் கிள்ள கையை நீட்டினான். அவள் அவனிடமிருந்து தப்பி ஓடினாள். அவன் அவளைத் துரத்தினான். மான் மானைத்

துரத்துவதைப் போலத்தான் இருவரும் சன்னதியைத் தாண்டி, தெப்பக்குளத்தைத் தாண்டி, சோலை வனத்திற்குள் ஓடினார்கள். அவள் அவனிடம் பிடிகொடுக்கவில்லை. காதலனிடம் பிடிபடாத ஆனந்தம் அவளுக்கு. அவளை வெற்றியடைய வைத்துவிட்ட திருப்தி அவனுக்கு. மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க இருவரும் ஓடி கூப்பிடும் தூரத்தில் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

சுப்பையா கண்ணம்மாவை அழைத்தான். 'வெற்றிகொண்ட கையினாய் வா வா வா'

கண்ணம்மா பதிலுக்கு அவனுடைய பாடலையே பதிலாகப் பாடினாள்.. 'வலிமையற்ற தோளினாய் போ போ போ'

அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். பதிலுக்கு அவளும் சிரித்தாள். .

'நீ ஏன் என்னைத் துரத்துகிறாய்....?' கேட்டாள் கண்ணம்மா.

'கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள் கவர்ந்திட மாட்டாவோ....?'

'அட, கண்ணில் தெரியுது வானம். அதற்காக வானம் உன்னிடம் வசப்படலாகுமோ...?'

'கண்ணின் மணி போன்றவளே, கட்டியமுதே, கண்ணம்மா.. நீ என் தீராத விளையாட்டுப் பிள்ளை.'

'இனி அந்த இடத்தில் செல்லம்மாள் என்கிறேன்.'

'சகியே, உன்னை என்னால் மறக்க முடியாது....'

'சுப்பையா மறக்க வேண்டாம். நினைக்காமல் இரேன் என்கிறேன்....'

சுப்பையா கண்ணம்மாவின் கரத்தைப் பற்ற எத்தனித்தான். அவள் அவனிடமிருந்து விலகி விலகித் தூரத்திற்குச் சென்றாள்.

'சுப்பையா, நான் சொல்வதைக் கேளேன். இனி நாம் ஒருவரையொருவர் மறந்துவிடுவோம்...'

'கண்ணம்மா...என்னிடம் நீ விளையாட்டுக் காட்டாதே....'

'நான் விளையாட்டுக் காட்டவில்லை. சுப்பையா, நாளை முதல் நீ இன்னொருத்தியின் கணவன் என்பதை நினைவுபடுத்துகிறேன்.'

'அதற்காக?'

'காதல் வேண்டாம் என்கிறேன்.'

'காதல் போயிற் காதல் போயிற் சாதல் சாதல் சாதல் தெரியும்தானே......?'

'கூடல், கூடல், கூடல்; கூடிப்பின்னே குமரன் போயில் வாடல் வாடல் வாடல். இது நீ சொன்னதுதானே....'

இருவரும் ஒருவரையொருவர் நெருங்கி வந்தார்கள்.

'உன்னை நான் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் போல இருக்கிறதே கண்ணம்மா...' அவன் அவளது கையைப் பிடித்தான். அவள் மெல்ல விசும்பினாள்.

'நீ என்னைப் பார்த்துகொண்டே இருக்க வேண்டும் அவ்வளவுதானே, இங்கே வா....' என்றவாறு அவனைச் சன்னதியின் படித்துறைக்கு அழைத்துச் சென்றாள்.

அவன் முன்னே நின்றுகொண்டு 'என்னைப் பார்....' என்றாள். அவன் அவளைப் பார்த்தான். பார்த்துகொண்டே இருந்தான்.

'இப்பொழுது உன் கண்களை இறுக மூடு' என்றாள். அவன் இறுக மூடினான்.

'என்னை உன் மனதிற்குள் ஓட விடு.'

'ஆம், ஓட விடுகிறேன்...' என்றான்.

'நான் தெரிகிறேனா....?'

'இம், தெரிகிறாயடி கண்ணம்மா...'

'நன்றாகத் தெரிகிறேனா.....?'

'ஆம், நன்றாகவே தெரிகிறாய்...'

'கண்களைத் திறவாமல் என்னையே பார்த்துக்கொண்டிரு....'

சுப்பையா கண்களை இறுக மூடிக் கண்ணம்மாவை உள்ளூரப் பூசித்தான். மனதிற்குள் பூரித்தான். அவளது முகத்தால் ஆகாயத்தில் மிதந்தான். அவளால் நிரப்பப்பட்ட மனதால் அவன் நீண்ட நேரம் தன்னையே மறந்தான்.

'கண்ணம்மா, கண்ணம்மா!' மெல்ல அழைத்தான். அவளிடமிருந்து ஓர் அரவமும் வந்திருக்கவில்லை.


கண்களைச் சட்டெனத் திறந்தான். அவன் எதிரே அவள் விட்டுச்சென்ற வெறுமைதான் இருந்தது. சுற்றும்முற்றும் பார்த்தான். நாலா புறமும் அவளைத் துழாவினான். கண்ணம்மாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. கண்களை மீண்டும் மூடினான். தன்னிலை மறந்தான். பாடினான்.

'நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா!
நின்னைச் சரணடைந்தேன்!' ■

ஓவியங்கள் : அன்பழகன், தாஹிர் பாட்சா

குழந்தைக்குச்
சோறூட்டுகிறாள்
அம்மா.
ஆதிக் காலம் முதல்
அலுக்காமல் ரசிக்கிறது
நிலா.

**- அமுதா தமிழ்நாடன்**



கனவில் மட்டுமே பொழிய வாய்க்கிற போன
நூற்றாண்டின் மழைக்குக்
கைவிட்டுப்போன காதலொன்றின் சாயல்
துருப்பிடித்த நினைவுகளில் கருப்பிடித்த
சொற்கள்
சூனியத்தைக் கிளறும்
பிரக்ஞையின் அலகுகள்
ஆழமான கலைவடிவம் எப்போதும்
வாசகனிடமே
முடிவெழுதச் சொல்வது
நெடிய கவிதைகளை யாரும் படிக்காத
காலத்தில்
கைவிட்டுப்போன காதலை எழுதுதல்
சுயவதை அல்லது வடக்கிருத்தல்
மழைக்காலம் துயர்மீட்ட உகந்ததல்ல என்கிற
தவளைகள் என்போலத் தனித்தில்லை
பொருள்பிரிந்த சொற்கள்
மணிபிரிந்த உமி
அல்லது
நீ பிரிந்த பிறகான நானுமற்ற நான்
கார்காலம் போனபின்னும் குடைவிரிக்கும்
காளான்கள்
ஏதோ ஓர் படிமமாக மிஞ்சுகையில்
இந்தப் பகல்மீது
காதலுற்ற முகிலொன்று மழை தூவுகிறது

**- கோ.கலியமூர்த்தி**

ஓவியங்கள் : அன்பழகன், தாஹிர் பாட்சா

காலணாவுக்கு வெத்தல வாங்கியாரச் சொன்ன
அப்பத்தாவோட சுருக்குப் பையிலதான்
எட்டணாவ எடுத்துக் கருப்பட்டி வாங்கியாந்தோம்...
வாய்த்தகராறுல
தினம் நாத்தம்பிடிச்ச பேச்செதுக்குனு
ஊடு சுவரு தடுக்க வாங்கிப் போட்ட
செங்கலுலதான்
ஆளுக்குரெண்டா தூக்கியாந்து
அடுப்பாக்கினோம்....
ஆளும்பேருமா நிக்க
அவசரப்படுத்திக் கருப்பட்டி வாங்கயிலதான்
சீசாக்குள்ளயிருந்து பொட்டுக் கடலைய
எடுத்தோம்னு
இப்பத்தான் உங்களுக்கே சொல்றோம்...
வாயும் வயிறு மாதிரி
கேணியும் வாளியும் கெடக்க...
அங்குன துலக்கப் போட்டிருந்த ஊராம்வீட்டுச்
சட்டியிலதான்
கருப்பட்டி மிட்டாய காய்ச்சினோம்...
பொங்க பானை பல்லிளிக்கிற மாதிரி
சூடு பொறுக்காம பாகு பொங்கப் பொங்க
ஒன்னுமாத்தி ஒன்னா பூவரச இலைய பறிச்சுக்
காத்துக்கிடந்தோம்....
பொங்குன பாகு கடைசி வரைக்கும்
வத்தாத சீனிக் கடல்னு தெரியவும்
கருப்பட்டி மிட்டாய காப்பித் தண்ணியாக் குடிச்சது
நாங்கதானு நினைக்கயில...
அடுப்பெரிக்க உடைக்கயில குத்துன முள்ளு
இப்பத்தான் கருப்பட்டித் தண்ணியாக் கசியிது....

– மஹா பர்வீன் ■


ஒரு தரைக்கடை வியாபாரி போலச்
சொற்களைக் கூவி விற்கிறது உலகம்.
நீயும் நானும் சொற்களை
வாங்கச் சந்தைக்கு வந்தோம்.
வாங்கிக் கொண்டது பற்றி விவாதித்தோம்.
அவரவர் உருவம் சார்ந்து
சொற்களைப் பிரித்தோம்.
அவரவர் புரிதல் சார்ந்தும்
சொற்களைப் பிரித்தோம்.
நீயும் நானும் எதையுமே வாங்கவில்லை
எல்லாச் சொற்களும் நம் அனுபவத்தைப்
பேசும் அருஞ்சொற்பொருளாகவே
புரிந்து கொள்கிறோம்.
சந்தையில் நீயும் நானும்
வாங்கிக்கொள்ள எதுவும் சாத்தியமே.
வாழ்வின் சுவை உணர்ந்தவர்கள்
எதையும் கூவி விற்பதில்லை.
பேரம் பேசி வாங்குவதும் விற்பதும்
சந்தையின் விதி.
மகிழ்வைத் தேடிப் பயணிப்பது
பொது நியதி.

– அம்பிகா குமரன்.



• அகதா

# நிறைவேறிய காதல் கனவு




நூல் : நீ பிடித்த திமிர்

நூலாசிரியர் : அகதா


வெளியீடு : படைப்பு பதிப்பகம்

ஒரு பெண் காதல் கவிதைகளைப் படைப்பதில் எண்ணற்ற சிக்கல்கள் உண்டு. தனது காதலை வெளிப்படையாகத் தெரிவிப்பது ஒரு பெண்ணுக்கான பண்பல்ல என்பது சிலரது கருத்து. இதை உடைத்தெறிய வேண்டும் என்ற எண்ணம் நெடுநாளாக எனக்கு இருந்தது. அதை இந்த நூலின் மூலம் செய்திருக்கிறேன் என நம்புகிறேன். மேலும் ரசனைக்குரிய, அழகிய கருத்துக்களைக் காதலின் மொழியில், தமிழுக்கே உரிய மொழி விளையாடல்களில் வந்து விழுந்த கவிதைகளை எனது முகநூல் பக்கத்தில் நிறைய பேர் ரசித்தனர். அதனால்தான் 'நீ பிடித்த திமிர்'என்ற இக்கவிதை நூல் உருவானது.

நூல் வெளியீடு என்பது எல்லாப் படைப்பாளர்களுக்கும் மிகப்பெரிய கனவாக இருக்கும். எனக்கும் இருந்தது. அதுவும் காதல் கவிதை நூலை வெளியிடுவதற்கு மிகப்பெரிய கற்பனை இருந்தது. கற்பனையை நூல் வெளியீட்டு நாளில் படைப்புக் குழுமம் நிறைவேற்றி இருந்தது மிகப்பெரிய ஆச்சரியத்தைத் தந்தது. என்னுடைய மறக்க இயலாத புகைப்படங்களைத் தொகுத்தும், சில கவிதைகளை அடிக்கோடிட்டும், படைப்புக் குழுமம் ஒரு காணொளியை உருவாக்கியிருந்தது. அது மிகப் பெரிய ஆச்சரியத்தையும் ஊக்கத்தோடு மகிழ்ச்சியையும் தந்தது. ■

• முகம்மது பாட்சா

# சி.மணி




**'பழக்கத்திற்கு இவனொரு அடிமை.**
**பழக்கமற்ற எதையும் இதுவரை**
**செய்ததில்லை - இனிமேல்**
**செய்யப்போவதில் பழக்கமற்றது**
**சாவது ஒன்றுதான்.**
**சாவதும் பழக்கமானதோ என்னவோ,**
**அதுவும் நாள்தோறும்.'**

**- சி.மணி**

புதுக்கவிதைகள், நவீனக்கவிதைகளின் மறுமலர்ச்சியில் முக்கியப் பங்காற்றியவர்களில் சி.மணி அவர்களும் மிக முக்கியமானவர்.. அன்றும் சில ஆளுமைகள் அவரைப் புறக்கணித்தார்கள் இன்றும் அவரை நம் இலக்கிய ஜாம்பவான்கள் நினைவுகூரவே மறந்துவிடுகிறார்கள்.

கவிஞரின் உண்மையான பெயர் எஸ். பழனிசாமி என்பதுதான். வித்தியாசமாக ஓலுலு என்ற பெயரில் எல்லாம் எழுதியவர். ஆங்கிலப் பேராசிரியராகப் பணி புரிந்தவர். அதனால்தான் என்னமோ டி.எஸ்.இலியட்ஸை வாசித்து அதன் தாக்கம் கொண்டு எழுத ஆரம்பித்தார். அவரது 'நகரம்' என்ற நெடுங்கவிதை முழுக்கமுழுக்க இலியட்ஸின் வார்ப்பாகவே வாசிப்பவர்களுக்குத் தெரிந்தது. ஆனாலும் அதன் உள்ளடக்கம் நம் மண் சார்ந்த காட்சிகளாகவே நகர்ந்தன...


'கவிதைகளின் வடிவம் யாப்பில்தான் இருக்கவேண்டும் என்று யார் சொன்னது.. அது வெறும் ஒப்பனைதான்' என்று சாடியவர்.. அவரைப் பொறுத்தவரைக் கவிதையென்பதே 'முழு நிர்வாணம்' என்பதுதான். அவர் எழுதிய 'யாப்பும் கவிதையும்' என்ற நூல்தான் புதுக்கவிதைகளைப் பற்றிய முதல் ஆய்வு நூல் என்பது எத்துணைப் பேருக்கு இங்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியவில்லை.

சி.மணியின் எழுத்துகளின் மீது அதீதப் பற்று கொண்டவராகவே 'எழுத்து' சி.சு.செல்லப்பா அவர்கள் செயல்பட்டார். கவிஞரின் முதல் படைப்பும் எழுத்து பத்திரிக்கையில்தான்

'முக்கோணம்' என்ற தலைப்பில் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து எழுத்து பத்திரிக்கையில் தான் அவர் அதிகமாகவும் எழுதினார் என்று சொல்லலாம். எழுபத்தைந்துகளுக்குப் பிறகு கவிதைகள் எழுதுவதை ஏனோ படிப்படியாகக் குறைத்துக்கொண்டார்..

க.நா.சு அவர்கள் எழுத்து பத்திரிக்கையின் மீது தீராத விமர்சனங்களை ஏற்படுத்தியவர், அதில் வரும் கவிதைகள் கவிதைகளே கிடையாது என்று சாடியவர்.. அதனால்தான் என்னமோ சி. மணியின் கவிதைகளையும் கவிதைகளே இல்லை என்கிற அளவிற்கு விமர்சனங்களை அவரும் அவரது சகாக்களும் முன் வைத்தனர். டி.எஸ். இலியட்ஸின் வேஸ்ட் லேண்ட் பாதிப்புகள்தான் அவரது கவிதையில் இருப்பதாகவும் சுய சிந்தனைகளில் இல்லையென்றும் விமர்சனங்களைப் பகிரங்கமாக வைத்து வளரவிடாமல் பார்த்துக்கொள்வதில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டார்கள்.

இதே காலகட்டத்தில்தான் நடை பத்திரிக்கையில் வே.மாலி எழுதிய கவிதைகளை மிகவும் அருமை என்று சிலாகித்தது இந்தக் கோஷ்டி.. அவர்களைப் பொறுத்தவரை மாலி



என்பது சுந்தர ராமசாமி என்று நினைத்திருந்தார்கள். பிறகுதான் இவர்களுக்குத் தெரிந்தது வே.மாலி என்பவரும் சி.மணிதான் என்பது. இதனை சி.மணி தன் நண்பர்களிடம் பகிர்ந்துகொள்ளும்போது "இவர்களின் இலக்கியம் என்பது வெறும் பெயரில் மட்டும்தான் இருக்கிறது" என்று சொல்லி வேதனையுடன் சிரிப்பாராம்.

**'முன்நோக்கும் இருமுலைகள்**
**கண்காம்பு முகம் தூக்கி**
**வான்நோக்கி அகம் மலர**
**மீன் வார்ப்பில் சிறு கச்சு...'**

போன்ற இவரது வரிகள் சிறு அதிர்வலைகளை ஏற்படுத்தியது என்று சொல்லலாம். நா.வானமாமலை போன்றவர்கள் 'இவன் பச்சை எழுத்தாளன்' என்று சொல்லத் தொடங்கினார்கள்... அதற்கும் பதிலளிக்கும் விதமாக அவர் எழுதிய கவிதைகளின் சில வரிகள் அவர்களை நேரடியாகவே சாடியது...

**'பாலுணர்ச்சி கூடினால்**
**பச்சையாம்...**
**இளமை கொடுக்கும் துணிவில்**
**இடித்துக் களிக்கும் இவர்கள்**
**வயது வழங்கிய வாய்ப்பில்**
**அமர்ந்து சிலிர்க்கும் இவர்கள்**
**இருவரைக் கட்டிலேற்ற ஊதி**
**முழக்கியூர் கூட்டும் இவர்கள்**
**இருளில் ரகசியமாய் வெட்கி**
**மருவி மயங்கும் இவர்கள்**
**பிறகு தவழவிட்டு ஊரெல்லாம்**
**பெருமை உரைக்கும் இவர்கள்**
**எல்லாம் இவர்கள்தான் –**
**வேறு யார்**
**சொல்வார்கள்? கூடாதாம்; பச்சையாம்'**

இங்கு அளிக்க மறந்த கௌரவத்தை, கவிஞருக்கான அங்கீகாரத்தை 'விளக்கு விருது' மூலமாக அமெரிக்க வாழ் தமிழர்கள் அளித்துக் கௌரவம் செய்தார்கள். அதன் பிறகு சிற்பி விருது மற்றும் ஆசான் விருதினையும் பெற்றார் கவிஞர்.

கவிஞரின் சிந்தனைகள் நவீனத்தைத் தொட்டு நகர்ந்தன.. காலத்தின் கூறுகளை அங்கத நயத்துடன் எழுதுவதில் மிகச் சிறந்தவராக

*விளங்கினார்.. கை உழைப்பு இல்லாமல் வாய்ப் பேச்சில் வம்பளக்கும் மேதாவிகளைத் தனது கவிதையில் சிறப்பாகவே எள்ளலாடினார் என்று சொல்லலாம்..*

'என்ன செய்வதிந்தக் கையை
என்றேன் என்ன செய்வதென்றால்
என்றான் பெரியசாமி. கைக்கு வேலை
என்றிருந்தால் பிரச்சினையில்லை;
மற்ற நேரம் நடக்கும்போதும்
நிற்கும்போதும் இந்தக் கைகள்
வெறும் தோள்முனைத் தொங்கல்; தாங்காத
உறுத்தல் வடிவம் தொல்லை என்றேன்.
கையக் காலாக்கென்றான்.'

*மற்றொரு கவிதை:*

'இலக்கியம் என்றால் என்னவென்றேன்?
புலவர் ஒருவர் இதுகூடத் தெரியாதா
இலக்கு + இயம்தான் என்றார்.'

*கவிஞரின் இந்த மூன்று வரி கவிதை மிகவும் சிறப்பானதென்று சொல்வேன்.. இது எந்தப் பொருளுக்கும் மாறக்கூடிய தன்மை கொண்டதாகவே அமைந்திருந்தது.*

*கூடவே மெச்சும் தமிழ் வார்த்தைகளைப் போட்டு எழுதும் ஆற்றலும் அவரிடம் இருந்ததை யாரும் கவனிக்கவில்லை என்றே சொல்லலாம்.. உதாரணத்திற்கு,*

கலைந்த மழையுள, மறைந்த பூவுள
தாங்கிய செங்கை தலைக்கண் மேலுள
ஒலித்த வளையுள, ஓய்ந்த விரலுள
சரிந்த தலைப்பால் தெரிந்த மலருள..

*போன்ற பாடல் வரிகள் சந்தம் கோர்த்து நழுவும்.*

*கவிஞரின் முழுத் தொகுப்புகளை வெளியிட்டதிலும் 'தாவோ தே ஜிங்' மொழி பெயர்ப்பு நூலை வெளியிட்டதிலும் க்ரியா ராமகிருஷ்ணன் அவர்களுக்கு மிக முக்கியப் பங்குண்டு என்று சொல்லலாம்.*

'சொல்ல விரும்பியதெல்லாம்
சொல்லில் வருவதில்லை
எத்தனையோ மாற்றங்கள்
குறிதவறிய ஏமாற்றங்கள்
மனம் புழுங்கப் பலவுண்டு
குதிரை வரைய குதிரையே
வராது; கழுதையும் வரலாம்.
இரண்டும் கலக்கலாம்.
எலிக்குப் பொறிவைத்தால்
விரலும் விழுவதுண்டு.
நீர்தேடி அலையும்போது
இளநீரும் கிடைக்கும்.'

*ஒரு கவிஞனின் மனம் யதார்த்தத்தில் உழல்வதை இதைவிடச் சிறப்பாக யாரும் சொல்லிவிட முடியாது.. கவிஞன் அனைத்தையும் இரசிக்கக் கூடியவனாக இருக்கிறான். இசை ரசிப்பு இருந்துவிட்டால் வரிகளும் பாடத்தானே செய்யும்...*

'ஷெனாய் இசைக்கும் சோகம், ஆஹா
செவிமடுக்காத செவியென்ன செவியோ
செவிமடுத்துக் கரையாத மனமென்ன மனமோ
என்கிறான் மணி. என்ன செய்ய?
ஒருமுறையேனும் மாலி
முழுவீச்சுத் தொனி
பூரண
சாரங்கி இழைப்பில், ஒற்றைச் சோகக்
கீற்றை, ஆஹா
மடுக்கச் சொல் செவியால்'

*கவிஞரை நினைவுகூரும் இந்தக் கட்டுரையில் எனக்கு மிகவும் பிடித்தமான அவரது 'அறைவெளி' என்ற கவிதையைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.*

'தப்பிவிட்டேன் என்று விழித்தேன்
சுற்றும் முற்றும் பார்த்தேன் மேலே
வானம்;
நான்கு பக்கமும் கூரிருள்.
கூரைச் சுவர்கள் எதுவுமில்லை
எல்லாப் பக்கமும் வழிகள் தெரிந்தன.
வெட்டவெளிதான் இது அறையல்ல
என்று சில கணம் துள்ளியது என் மனம்.
மேற்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்
தெற்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்
வடக்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்
கிழக்கே நடந்தேன் இடித்தது ஒரு சுவர்
எம்பிக் குதித்தேன் இடித்தது கூரை'

*இதைவிட வாழ்வியலை எப்படித்தான் சொல்வது...* ■

• மூலம் : வில்லியம் வேர்ட்ஸ் வொர்த்
• தமிழில் : தங்கேஸ்
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

கவிஞர் மரங்கள் அடர்ந்த ஒரு சிறிய பகுதியில் அமர்ந்து ஒரு மரத்தில் தலை சாய்த்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். பறவைகளின் ஓசையும் காற்றின் ஓசையும் காற்றின் வெளிகளில் கலந்து கவிஞரின் காதில் விழுகின்றன. எல்லையற்ற உயரத்திற்கு மனது பறந்து சென்றாலும் சட்டென்று தரையில் மோதிச் சிதைந்து துயருறுகிறது. அந்தக் கலவை மனநிலையிலேயே இந்தக் கவிதை உதயமாகிறது.

## Lines written on Early Spring

(வசந்த காலத்தின் துவக்கத்தில் எழுதப்பட்ட வரிகள்)

ஆயிரம் ஓசைகளின் கலவையைக் கேட்டேன்
அந்த மரக் கூட்டங்களுக்குள் அமர்ந்திருந்தபோது
இனிமையான தித்திப்பில்
கரைந்தது பொழுது
ஆனால் இனிமையான எண்ணங்கள்தான்
திறந்து விடுகின்றன
துயரத்தின் சாளரங்களையும்
அழகின் உன்னதம்
என் ஆன்மாவின் வழியே
பாய்ந்தோடிக்கொண்டிருக்கிறது
அளவற்ற கருணையாக
இயற்கையே இங்கு
படைப்பின் முழுமை
இந்தப் பிரபஞ்சம் முழுவதும்
ஆனாலும்
என் மனதை
நிரப்பிக்கொண்டிருப்பது என்னவோ
துயரம்தான்
மனிதன் மனிதனுக்குச் செய்யும் தீமைகளின்
நீட்சிகள்
இந்த உலகமெங்கும்
நீங்காத வடுக்கள்
கொத்துக்கொத்தாய்
மஞ்சள் பூக்கள் பூத்துச்சொரியும்
காட்டுப்பூச்செடிகள்
நீல மலர்களை
மலர் வளையங்களாக
ஏந்தியபடி ஊர்ந்து செல்லும்
காட்டுக் கொடிகள்
வெட்ட வெளிதனில்
அடடா ஒவ்வொரு மலரும்
சுவாசங் கொள்ளும் காற்றோடு
பிணைந்து திளைக்கிறதே
என்னைச் சுற்றித் தத்தித் தாவும்
பறவைகளின் கூட்டம்
லயிக்கின்றன
அலகிலா விளையாட்டுக்களில்
அலகிலா விளையாட்டுக்கள்தான்
அளவிலா ஆனந்தமோ?
அடடா
நான் அதை
எவ்விதம் அளந்தறிவேன்?
அவை எண்ணங்களில்
மிதக்கின்றனவா
அல்லது மிதக்கும் கனவிலா?
சின்னஞ்சிறிய அசைவுகளும்
சிருங்கார நெளிவுகளும்
எத்தனைச் சிலிர்ப்புகளை
ஏற்படுத்துகின்றன
என்னிடம்?
சிறு சிறு கிளைகளும்
இரு கரங்களை விரித்து
ஈரக்காற்றை ஏந்துகின்றதே
ஆசையோடு
நான் சாதாரணன்
என்ன செய்ய இயலும்
அந்த ஆனந்தத்தில்
அமிழ்ந்து போவதைத் தவிர
எல்லையற்ற ஆனந்தம்தான்
பிரபஞ்சத்தின்
பெரும் செய்தியோ?
முடிவற்ற சிலிர்ப்புகள்தான்
இயற்கையின்
புனித நியதியோ?
ஆனால் மனிதா மனிதா
அன்பென்னும் பெருஞ் செய்தியறியாது
நீ அல்லலுறும்போதும்
மனிதன் மனிதனுக்குச்
செய்யும் தீமைகளைக்
கண்கொண்டு காணும்போதும்
நான் உன்னை
நினைத்துப்
புலம்புவதன்றி
வேறென்ன செய்வது சொல்? ■

கட்டுரை

தொடர் - 2

• கரிகாலன்




# தேநீர் சாலை

## ● முதுவேனில் பாடல்கள்!

'கட்டிப்புடி கட்டிப்புடிடா.. கண்டபடி கட்டிப்புடிடா' என வலியக் கேட்டால் கட்டிப் பிடிப்பதைத் தவிர வேறுவழி இல்லை. ஆனால் கபிலர் ஒரு குறிஞ்சி நில ஆணைக் காட்டுகிறார். இவன் பொருப்பனா? வெற்பனா? சிலம்பனா? எனத் தமிழய்யாக்களிடம்தான் கேட்க வேண்டும். ஆனாலும் ஃபுல் ஃபார்ம்மில் இருக்கிறான். கொடிச்சி ஒருத்தி அன்னநடை பயின்று எழிலாக வருகிறாள். இவனுக்கோ கண்டதும் காதல். கட்டிப்பிடித்து விடுகிறான். அவளோ பதறி 'ஏஎ! இஃது ஒத்தன் நாண் இலன் தன்னொடு மேவேம் என்பாரையும் மேவினன்' 'என்ன இது, இப்படியா கட்டி அணைப்பாய். சம்மதமிருக்க வேண்டாமா?' எனக் கோபம் காட்டுகிறாள். உனக்குச் சம்மதமோ இல்லையோ எனக்கு இன்பமாயிருக்குமெனத் தோன்றியது. கட்டியணைத்துக்கொண்டேன். 'தமக்கு இனிது என்று வலிதின் பிறர்க்கு இன்னா செய்வது நன்று ஆமோ மற்று?' என்கிறாள்.

இதற்கு நம் பயலிடம் பதிலில்லை! 'வேட்டார்க்கு இனிது ஆயின் அல்லது நீர்க்கு இனிது என்று உண்பவோ, நீர் உண்பவர்?' தாகமெடுக்கிறது. நீரருந்துகிறோம். நமது தாகம் தீர்க்கத்தானே குடிக்கிறோம். நீருக்கு இன்பமாயிருக்கிறதா இல்லையா என்றா யோசித்துக் குடிக்கிறோம். 'உனைக் கண்டு என் உள்ளம், பாம்பின் வாயில் அகப்பட்ட உயிர்போல் துடிக்கிறது. வலிந்து கொள்வதில் பிழையில்லை பெண்ணே' எனக் காதல் வலி சொல்கிறான். 'ஓகோ.. அப்படியா.. சொன்னால் கேட்கவா போகிறாய். முன்பிறப்பில் ஒன்றாயிருந் தோம் போலிருக்கிறது. ம்.. சரி.. சரி.. ஆகட்டும்' என்றாள் அந்த ரோஷக்காரி!

'ஏஎ இஃது ஒத்தன், நாண் இலன் தன்னொடு
மேவேம் என்பாரையும் மேவினன் கைப்பற்றும்
'மேவினும், மேவாக்கடையும், அஃது எல்லாம்
நீ அறிதி; யான் அஃது அறிகல்லேன்; பூ அமன்ற
மெல் இணர் செல்லாக் கொடி அன்னாய்!
நின்னை யான்
புல் இனிது ஆகலின், புல்லினென்' எல்லா!
தமக்கு இனிது என்று, வலிதின் பிறர்க்கு இன்னா
செய்வது நன்று ஆமோ மற்று?'
சுடர்த் தொடீ! போற்றாய் களை,
நின் முதுக்குறைமை; போற்றக் கேள்!
வேட்டார்க்கு இனிது ஆயின் அல்லது,
நீர்க்கு இனிது என்று
உண்பவோ, நீர் உண்பவர்?
செய்வது அறிகல்லேன்;
யாது செய்வேன்கொலோ
ஐ வாய் அரவின் இடைப்பட்டு, நை வாரா?
'மை இல் மதியின் விளங்கும் முகத்தாரை
வௌவிக் கொளலும் அறன்' எனக் கண்டன்று;
அறனும் அது கண்டற்றாயின், திறன் இன்றிக்
கூறும் சொல் கேளான், நலிதரும்; பண்டு நாம்
வேறு அல்லம் என்பது ஒன்று உண்டால்; அவனொடு
மாறு உண்டோ, நெஞ்சே! நமக்கு.'

(குறிஞ்சிக் கலி, பாடல் 62)

## ● பாப்கார்ன் – ரான் கிளர்க் ஸ்டோரி

ஒரு சிறுவன் பள்ளிக்கு வெளியே உள்ள குப்பைத்தொட்டியில் நிற்கிறான். அவனை அங்கு பார்க்கும் இளைஞன் 'நீ ஏன் இங்கு நிற்கிறாய்?' என்கிறான். 'என் ஆசிரியர் என்னை ஒன்றுக்கும் உதவாத குப்பை என்கிறார். அதனால்தான் இங்கு நிற்கிறேன்!' என்கிறான் அச்சிறுவன். 'என் பெயர் ரான் கிளர்க். எனக்கு மெமரி லாஸ் உள்ளது. இப்போதுகூட திரும்பவும் என் பெயர் மறந்துவிட்டது. உனக்கு என் பெயர் நினை விருக்கிறதா?' என்கிறான் இளைஞன். 'ஓ, ரான் கிளர்க்!' 'பார்த்தாயா உனக்கு எவ்வளவு நினைவுத்திறன்!' எனப் பள்ளிக்கு மீண்டும் அவனை அழைத்துச் செல்கிறான்.

ரான் கிளர்க் அமெரிக்காவைச் சேர்ந்த அர்ப்பணிப்பு மனோபாவம் கொண்ட ஆசிரியன். அவனது சுயவரலாற்றைக் கொண்டு எடுக்கப்பட்ட படம் ரான் க்ளர்க் ஸ்டோரி. 2007இல் இப்படம் டிவியில் முதன்முதலாக ரிலீசானது. சிறுநகரத்தில் ஆசிரியனாகத் தன் பள்ளிக்கு மாநில அளவில் கிரேட் வாங்கிக்கொடுத்த ரான் கிளர்க்குக்கு நியூயார்க் சென்று ஆசிரியனாக ஆசை. செல்கிறான். முதலில் ஒரு சர்வர் வேலையில் சேர்கிறான். அங்கு பணிபுரிந்தபடி ஆசிரியப் பணி தேடுகிறான்.

ஒருநாள் வழியில் ஒரு பள்ளி. வெளியே ஒரு நீக்ரோ மாணவனுக்கும் ஆசிரியருக்கும் தகராறு. சத்தம் கேட்டுத் தலைமையாசிரியர் வெளியே வருகிறார். அச்சிறுவனுக்குப் பயந்துகொண்டு இனி இங்குத் தன்னால் பணிபுரிய முடியாது எனக் கூறி வெளியேறுகிறார் அவ்வாசிரியர். அந்த ஆண்டில் மட்டும் பசங்களுடைய அக்கிரமம் பொறுக்காமல் ஆறு ஆசிரியர்கள் அப்பள்ளியிலிருந்து வெளியேறியிருக்கின்றனர்.

இச்சூழலில் தலைமையாசிரியரிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு வேலை கேட்கிறான் கிளர்க். த.ஆ. இல்லை என்கிறார். இப்போது ஒரு ஆசிரியர் போனாரல்லவா! அவரது வேலையைக் கொடுங்கள் என்கிறான் கிளர்க். அவனது போர்ட் ஃபோலியோவைப் பார்த்து வியக்கும் த.ஆ. அவனுக்கு நல்ல கிரேட் எடுக்கும் மாணவர்களடங்கிய வகுப்பைத் தர முன்வருகிறார். ஆனால் கிளர்க்கோ வெளியேறிய ஆசிரியர் வகுப்பான மெல்லக் கற்கும் வகுப்பைக் கேட்கிறார்.

அவரைப் பரிதாபமாகப் பார்க்கிறார் த.ஆ. டி ஷான், ஷமைகா, இந்திய மாணவியொருத்தியெனச் சேட்டைப் பையன்களிடம் சீரழிகிறான் ரான் கிளர்க். அவர்களேன் கற்றலில் ஆர்வமின்றிக் கலகக்கார வாண்டுகளாக இருக்கிறார்கள்? என்பதற்கான பின்னணியைத் தேடுகிறான்.

டி ஷான் மற்றவர்களோடு கலக்காமல் தனிமைப்பட்டு முரட்டுத்தனம் கூடியவனாக இருக்கிறான். மோசமான வளர்ப்புத்தந்தையின் (foster care) வன்முறை மேலாண்மையால் அவன் இவ்வாறு மாறியிருப்பதை அறிகிறான். அவனுக்குத் தேவையான அன்பு அரவணைப்பு பரிவுணர்வு அனைத்தையும் அளிக்கிறான்.

இந்தியச் சிறுமியோ நல்ல கற்றல் திறன் உடையவள். இருப்பினும் அதை மறைத்து நானும் ரௌடிதான் என நடித்தால்தான் வகுப்பில் தனக்கு மரியாதை என பாவனை செய்பவள். அவளது திறமைகளையும் மீள்கொணர்கிறான் கிளர்க்.

ஷமைகா ஹோம் வொர்க் செய்வதேஇல்லை. அவளது வீட்டுக்குச் செல்கிறான். அங்கு அவள் தாய் அவளைத் தன் சிறுகுழந்தைக்கு உணவூட்டவும், இரவு உணவு தயார் செய்யவும் விடுத்து வெளியில் சுற்றுகிறாள். கிளர்க் சமையலறைக்குச் சென்று தான் சமைத்து, ஷமைகாவை ஹோம் வொர்க் செய்யச் சொல்கிறான். வீடு திரும்பும் தாய், தன்னைத் தனது குழந்தை தப்பாக எண்ணுவாளே! என மறுநாள் த.ஆசிரியரிடம் அவரை மாற்ற வலியுறுத்துகிறாள். இல்லாவிட்டால் தன் குழந்தையை வேறு பள்ளியில் சேர்ப்பதாகக் கூறுகிறாள்.



கிளர்க் அந்தத் தாயிடம் கெஞ்சுகிறான். ஷமைகா நல்ல கிரேட் எடுப்பாள். அடுத்த ஆண்டு ஆறாம் வகுப்பு வேறுபள்ளிக்குப் போகும்போது அவளுக்கு ஸ்காலர்ஷிப் வாங்குமளவு தன்னால் பயிற்சியளிக்க முடியும் என்கிறான். மனமிறங்குகிறாள் அக்கடின நெஞ்சுடைய தாய்.

அப்பள்ளியிலேயே மோசமாகப் படிக்கும் மாணவர்களைக் கிளர்க்கால் மாற்ற முடிந்ததா? அடிக்கடி அவன்மீது பிரச்சனை வருவதால் தலைமையாசிரியரும் நம்பிக்கை இழக்கிறார். கிளர்க் அச்சிறுபிள்ளைகளின் முட்களைத் தன் அன்பின்வழி அகற்றுகிறான். சமூகத்தின் அலட்சியத்தால், பெற்றோர்களின் பொறுப்பற்ற தனத்தால், கடவுளின் பாராமுகத்தால், நம்பிக்கையிழந்து முரடர்களான அச்சிறுவர்களைக் கண்ணின் மணியெனக் காத்து அறிவு தீபத்தை ஏற்றுகிறான் கிளர்க். எவ்வளவோ துன்பத்தை அளித்தும் தாய்மனதோடு அணைத்துக் கொள்ளும் தம் ஆசிரியன் மீது காதல் கொள்கிறார்கள் அக்குழந்தைகள்.

ஒரு வகுப்பறை என்பது ஒரு தேசத்தின் தலைமுறைக் கனவு. அங்குதான் நாட்டை ஒளிசெய்யும் அகல்விளக்குகள் அணிசெய்கின்றன. எந்தச் சூரைக்காற்றிலும் அவை அணைந்துவிடுவதை அன்னை மனம் படைத்த கிளர்க் போன்ற ஆசிரியர்கள் அனுமதிப்பதில்லை. தேர்வு முடிவுகள் வருகின்றன. எந்தப் பிள்ளைகளைப் படிப்பதற்கு லாயக்கில்லை என்றார்களோ, யாரைக் குப்பை என்றார்களோ, எவரெல்லாம் எருமை மாடு மேய்க்கத்தான் லாயக்கு என்றார்களோ, அந்தப் பிள்ளைகள்.. கற்றல் குறைபாடுள்ள அப்பிள்ளைகள் ஸ்டேட்டில் உயர்வான கிரேடுகளைப் பெறுகின்றனர்.

எழுத்தறிவித்தவன் இறை என்கிறது தமிழ். மாணவ மனங்களில் இறையென உறைகிறான் கிளர்க். முரட்டுப் பிள்ளைகளை மெல்லக் கற்போரைத் தன் அன்பின்வழி வென்ற நல்லாசான் கிளர்க். இது ஒரு ஆசிரியரின் சாக்பீஸ் பவுடர் படிந்த வேர்வை தொட்டு எழுதிய நிசக்கதை! நமது ஆசிரியர்கள், ரான் கிளர்க்காக மாறவேண்டும். ■

• முகில்நிலா–தமிழ்

# ‘தச்சன் வீட்டு யானை பொம்மை’ பரிசளித்த பேரானந்தம்






தமிழ் எழுத்தாளனால் எழுத்து மேன்மையுறுகிறது என்பதைக் காட்டிலும் எழுத்தே எழுத்தாளனின் கரம்பற்றி இழுத்துச் சென்று புதிய உலகை அறிமுகம் செய்கிறது.

அப்படி எழுத்தால் ஓர் புதிய உலகம் காண அழைத்து வரப்பட்ட எழுத்தாளர்களில் திரு.வசந்தன் அவர்களும் ஒருவர். வாசிக்கத் திகட்டாத நூல்கள் வாழ்வியல் சார்ந்த நூல்களே. அந்த வகையில் திரு. வசந்தன் அவர்களின் "தச்சன் வீட்டு யானை பொம்மை" என்ற இந்த நூல் வாழ்வியல் கவிதைகளை உள்ளடக்கிய ஒரு சமகாலப் பதிவென்றே நாம் வாசிப்பின் மூலம் உணரலாம்.

கவிதை எதுவென்ற தனது தேடலை இந்நூலின் ஆசிரியர் முன்னுரையில் வெளிப் படுத்துகிறார்... பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளுக்குச் சமூகம் செவி சாய்க்காதா..? என அங்கலாய்க்கிறார்.

சமூகத்தை நோக்கிச் சிந்திக்கத் துவங்கியுள்ள இவரின் மனதைப் பாராட்டுகிறேன்...

"மேனி கொதிக்குதடி

தலை சுற்றியே வேதனை செய்குதடி

வானினிடத்தையெல்லாம் அந்த வெண்ணிலா வந்து தழுவுது பார்"

"மோனத்திருக்குதடி வையகம் மூழ்கித் துயிலினிலே,

நானொருவன் மட்டிலும்

பிரிவென்னுமோர் நரகத்துழலுவதோ"

என்ற மகாகவியின் பிரிவு ஆற்றாமை வரிகள் நம்மால் மறந்துவிடவோ, இவை வெறும் காதல் கவிதைகளெனவோ புறந்தள்ளிவிட முடியாது.

வாழ்விலிருந்து பிரித்து எடுக்கவே முடியாத ஓர் அங்கம்தான் காதல்.

காதலைக் கொண்டாடும் கவிஞர்கள் பலர் காதலியைப் பலமடங்கு கொண்டாடுகின்றனர்... பாரதி கொண்டாடிய கண்ணம்மா போல் இவரது நூலில் "அவளைக்" கொண்டாடுகிறார்.

அந்த அவள் யாராகவும் இருக்கலாம், காதல் என்ற சொல்லை விடுத்து அன்பென்று பொருத்திப் பார்த்தால் இவரது கவிதைகள் அனைவருக்கும் பொருந்தும் கவிதைகளே..!

பெண்களைக் கொண்டாடும் ஆண்கள் என்பது தனது ஆணென்ற உடற்கூற்றைக் கடந்து அன்பினால் தன்னை முழுமைப்படுத்திக் கொள்ளும் இதயங்களால்தான் சாத்தியப் படுகிறது.

அப்படியான அன்பு இந்த நூல் முழுதும் அன்பாகவும், பிரிவாற்றாமையாகவும், வலியாகவும், யாதும் நிரம்பிய ஏகாந்தமாகவும் கவிதைகள் மூலம் வெளிப்படுகிறது.

இந்த நூல் வாசிப்பனுபவம் என்பது பேருந்தின் யன்னல் வழி வேடிக்கை பார்க்கும் ஓர் குழந்தை தன் நகர்வை அறியாது மரங்கள் ஓடுவதாய் எண்ணிக் குதூகலிக்கும் பேரானந்தத்தை வாசிப்பின் மூலம் எனக்குப் பரிசளித்தது...!

"அவளுக்கான" கண்ணாமூச்சி ஆட்டங்களில் நான் மூன்றாவது நபராய் நேரடியாக நின்று கவனிப்பதாய் உணர்ந்தேன்... இவரது கவிதை வரிகள் எதார்த்தம் பேசுகிறது, புனைவுகளுக்கு அப்பாற்பட்டு, வெளிப்படைத்தன்மையோடு எவ்வித சமரசத்திற்கும் உட்படாது எழுதப்பட்டிருக்கிறது.

"வாழ்நாள் முழுதும் பேரானந்தம் அடைய அன்பின் வாசனை நிரம்பிய கவிதை நீயென்கிறார்"...

அந்த நீ யாரைச் சுட்டுகிறது என்பது கவிஞர் மட்டுமே அறியக்கூடியது....

நமக்கு அந்த 'நீ' தாயைச் சுட்டலாம், தகப்பனைச் சுட்டலாம், கணவன், மனைவி, தோழமை, சகோதரர் என எவரை வேண்டுமானாலும் சுட்டலாம்... காதலன், காதலியையும் சுட்டலாம்...

வாழ்நாள் முழுதும் அன்பின் வாசனை நுகர்கிறேன் உன்னிடத்திலெனச் சொல்ல எந்தத் தயக்கமும் தேவைப்படுவதில்லை, எவரை நோக்கி வேண்டுமானாலும் நாம் சொல்லிக்கொள்ளலாம்.

இதுதான் எழுத்தாளருக்கு இல்லாத சலுகை வாசிப்பாளருக்கு இருக்கிறதென்ற உண்மை..!

"ரகசிய மொழி கற்கவேண்டுமென்கிறார், அது அத்தனை எளிதானதில்லை என்றும் சொல்கிறார், ஆனால் அதைக் கற்றுக்கொண்டால் உருவாக்கலாம் உன்னைப் போலப் பலரை" என்கிறார்.

ரகசிய மொழி என்பதை நான் அன்பென எடுத்துக்கொண்டேன், அன்பைத் தருவதின் மூலம் பல அன்பானவர்களை உருவாக்கலாம், அன்பைப் பெறுவதும், தருவதும் அத்தனை எளிதானதும் இல்லைதான்... அதற்குக் கொஞ்சம் மௌனமும் கற்றாக வேண்டியிருக்கிறது, அன்பின் ஊற்று எவருக்குள் வேண்டுமானாலும் சுரக்கலாம், ஆனால் அந்த ஊற்று வற்றாது நதியாக மாறக் கொஞ்சம் அன்பை எப்படிச் செலுத்துவதென்ற கற்றலும் அவசியமாகிறது.

"எல்லாம் துறந்த பின் வாழ்தல் சுதந்திரமா" என்று வினவுகிறார். சித்தார்த்தன் தேடிய சுதந்திரம் யாவற்றையும் இழத்தலைக் குறிக்கிறது. சித்தார்த்தனின் மனைவிக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரம் இழத்தல் அல்ல இருத்தலில் நீங்குதல் என்கிறது. ஆக நீ இல்லாத சுதந்திரம் அல்ல.. நீ இருக்கும்போதே சுதந்திர உணர்வோடு நான் வாழ வேண்டுமென்பதே அவரின் தேடலாய் இருக்கலாம் என்று அனுமானிக்கிறேன்...

"உள்ளும் புறமும்

நீ

எழுதி, பேசிக்கொண்டிருக்கிறாய் எனக்குத் தான் விளங்கிக்கொள்ள ஞானமில்லை"

என்கிறார்.

அன்பு செலுத்துவதென்பது அறிவாளி களுக்குப் பெரும்பாலும் சாத்தியப்படுவதில்லை, எதிர்பார்ப்பற்ற அன்பைச் செலுத்த முட்டாள் தனமும் அவசியமாகிறதுதான்...

"பெரும் கூச்சலிட்டு அழுவதால் என் கோடையில் மழையா பெய்யும்?!'' என்று கொஞ்சம் வலிகளிலிருந்து விலக, தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக்கொள்கிறார்...

கோடை என்பது அவரது வெறுமையைக் குறிக்கும் சொல்லாகவும் இருக்கலாம், வெறுமை தீர அழுதால் மட்டும் ஆகாது, என்ன செய்யலாம் என்பதைத் தீர்மானிக்க இயலாத கையறு நிலையில் கவிதை எழுதித்தான் தப்பிக்கொள்ள வேண்டியுள்ளது...

"முதுகில் குத்தப்பட்ட வடுக்களோடும் சிரித்தபடி கடந்தால் மரணம் தள்ளிப்போகும் என்பதை அவள் மீதான நம்பிக்கையே வழிநடத்துகிறது"

என்கிறார்.

அவமானங்களுக்குப் பின், துரோகங்களுக்குப் பின் அவள் இருக்கிறாள் என்கிற நம்பிக்கையே தன்னை நடமாடச் செய்கிறதென்று அவளிடத்தில் தன்னை ஒப்புக்கொடுக்கிறார்..

"நலிந்தவன் முகவரி தேடி யார் வருவார்கள்? பசித்துக்கிடக்கும் வயிற்றிலிருந்து வெளிப்படும் தூய அன்பின் சொற்களை உன் இரையாக்கிக் கொள் தோழி"

என்கிறார்... சொற்களால்தான் உறவுகள் கட்டமைக்கப்படுகின்றன. அந்தச் சொற்கள்தான் தீர்மானிக்கின்றன.. நம்மைக்குறித்துப் பிறர் மனதின் பிம்பங்களை. பசியோடு இருப்பவனின்

வாய்ச்சொற்கள், அன்பிற்காய் ஏங்கித் தவிப்பவனின் சொற்கள் உன்னதமான அன்பைச் சுமந்தே வெளிப்படுகின்றன என்பதைத் தன் வரிகளில் மெய்ப்பிக்கிறார்.

"ஆகவே அவனை ஒருநாள் தாமதமாகக் கொலை செய்யுங்கள்"

அவனுக்கான இறப்பை அறிமுகப்படுத்தியபின் ஒரு நாள் காத்திருங்கள் அவன் முடிக்கப்பட வேண்டிய பல முக்கியக் காரியங்கள் இருக்கலாம் என்கிறார்...

"எல்லாம் இழந்தபின் பூஜ்ஜியத்திலிருந்து துவங்குகிறது ஒரு வாழ்வு" என்கிறார்.

லகரங்களில் எப்போதும் தன்னம்பிக்கை பிறக்காது. சுழியனிலிருந்துதான் தன்னம்பிக்கை பிறக்கும் என்ற நம்பிக்கை இருக்கும்வரை வாழ்வின் யாவற்றையும் கடந்துவிடலாம் என்ற நம்பிக்கையை இந்த வரிகள் மூலம் கடத்துகிறார்..

"பெருந்துயர்களைக் குடித்தே வளர்கிறது என் இரவுகள் உன்னைப்போல" என்கிறார்...

இரவுகளில் வெளிப்படாத துயரங்கள் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.. இரவுகள் பல துயரங்களை அடர்ந்த காரிருள் மூலம் ஒளித்துவைத்துப் பாதுகாக்கிறது. மனிதர்களை ஆசுவாசப்படுத்த பெரும்பாலும் இரவுகளே பெருந்துணையாகவும் இருக்கிறது...

இப்படி நூல் முழுதும் ஏகாந்தம், வலி, வாழ்வியல் எனப் பேசும் இவரது கவிதைகள் நாளைய நம்பிக்கையைப் பிறர் மனதில் விதைப்பனவாகவே உள்ளன எனலாம். காதல் கவிதைத் தொகுப்பெனக் கொள்ளாமல் இந்நூலை அணுகினால் வாழ்வின் இக்கட்டுகளைக் கவிதைகளால் கட்டியெழுப்பிய பெரும் பாதுகாப்புச் சுவர் இந்நூல் என்பது நமக்குப் புலப்படும்....

இந்நூலின் சில கவிதைகளோடு நான் பயணித்த எனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டேன்.

இறுதியாக, தச்சன் வீட்டு யானை பொம்மை என்ற தலைப்பின் கீழ் காணும் ஒரு கவிதையைப் பதிவு செய்கிறேன்.

**'பழம் கொடுக்கும் முன்**
**கலைந்து போனது**
**தச்சன் வீட்டுச் சிறுமியின்**
**யானைக் கனவு**
**விடியலில் அதுகுறித்து**
**வருந்திய சிறுமிக்குத்**
**திசைகள் தோறும்**
**பார்ப்பதும் கேட்பதும்**
**யானை குறித்தனவாயிற்று**
**பள்ளி வளாக**
**ஆலம் விழுதைப்**
**பச்சை யானையின்**
**துதிக்கை என்கிறாள்...**
**கூடும் கருமேகத்திரளில்**
**யானையைக் கண்டவள்**
**மழையைப் புசித்த யானையின்**
**கண்ணீரென்கிறாள்...**
**குறிப்பேட்டில் தானே வரைந்த**
**யானையின் பசிக்குப்**
**பழம் வேண்டுமெனவும்**
**அழுது அரற்றுகிறாள்...**
**வள்ளி என்கிற**
**அவளின் பெயரைத்**
**தெய்வானை என்று**
**விளித்துச் சிரிக்கிறார்கள்**
**சிநேகிதச் சிறார்கள்...**
**பாவம்**
**யானைக் கிறுக்கிக்காக**
**இல்லையெனினும்**
**வனங்கள்**
**சாலைகளாகிப் போன ஊரில்**
**வீதியில் வரும் யாசக யானையும்**
**இல்லாதொழிந்த நாளொன்றில்**
**எல்லோருக்குமாய்ச் சேர்த்துக்**
**கட்டாயம் செய்யத்தான் வேண்டும்..**
**தச்சன் வீட்டில் ஒரு**
**யானை பொம்மை...'**

இது போன்ற கவிதைகளை உள்ளடக்கிய இந்த நூல் 64 பக்கங்களைக் கொண்டது, விலை 60 ரூபாய்.

கவிஞர்கள் மென்மையானவர்கள், கடும் சீற்றமுடையவர்கள், நாளைய சிந்தனையில் இன்றைத் தொலைப்பவர்கள், வாழ்வின் கோரப்பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள எழுத வந்தவர்கள், நலிந்தவர்கள், வறுமையில் வாடுபவர்கள் ஆயினும் அவர்களே காலத்தின் அடையாளம், வாழ்வின் வரலாற்றைச் செதுக்குபவர்கள்.

கரம் கொடுத்து மேலேற்றுவோம், கைக்குலுக்கி வாழ்த்துவோம்... பலத்த கர ஓசையில் எழுதச் செய்வோம் நமக்காகவும் கொஞ்சம் அவர்களுக்காகவும்.... ■

# தமிழ் மரம்

• கவி : இளைய இன்குலாப்
சித்திரம் : அன்பழகன்

ஆதி
விதையொன்றிலிருந்து
முளைத்தது
ஒரு சொல்.
நாடோடிப் பாடல்களில்
கிளைத்துப் பரவின
இலைகள்.

நெடிது வளர்ந்த
மரத்தின்
அகமும் புறமும் செழிக்க
பாக்களாய் மலர்ந்தன
பூக்கள்



பூக்களின் மையம்
விம்மிப்புடைத்துக்
காப்பியக் கனிகள்
இனிமை பயத்தன.
மணமும் இனிமையும்
கலந்திட
அயல்மொழிப் பறவைகள்
மரத்தையடைந்தன.
கூடிக்களித்து
அடைகாத்த கூட்டினுள் - புதிய
இலக்கியக் குஞ்சுகள்
சிறகை விரித்தன.

எல்லோருக்கும்
நிழல் விரித்த
அம்மரத்தில்
உள்ளூரில் பறந்த
மொழிவெறிக் காகங்கள்
ஆதிக்க வெறியோடு
கரைந்தன.
அண்டங்காக்கையின்
கரைதலோசை
இனமானக் குயில்களின்
உணர்வைத் தட்டியெழுப்பிட
மரம் காக்கும் முயற்சியில்
தம்முயிர் துறந்தன.
குயில்களின் உணர்வெல்லாம்
கந்தக முட்டைகளாய்
மரப்பொந்துகளில்
அடைகாக்கப்படுகிறது
ஆதி
செந்தமிழ் மரத்திற்கொரு
கேடெனில்
தீயாகும். ■

• கோ.லீலா

# நீர்ச் சிக்கனக் கையேடு







நூல் : மறைநீர்

நூலாசிரியர் : கோ.லீலா

வெளியீடு : படைப்பு பதிப்பகம்

மறைநீர் என்ற நூல் இன்றைய பூவுலகில் தண்ணீர் என்ற வரையறுக்கப்பட்ட வளம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே இருப்பதாகவும், அனைத்து மனிதர்களுக்கும் சமமான அளவு தண்ணீர் கிடைக்கவில்லை என்ற துயர்மிகு செய்திகளும் வந்த வண்ணமிருக்கின்றன. இந்தத் துயருக்கான காரணத்தையும் அதற்கான தீர்வையும் கொடுப்பதன் மூலம் வருங்காலச் சந்ததியினருக்கு ஆரோக்கியமான பூமி பங்கினைக் கையளிக்க வேண்டும் என்ற எண்ணமே இந்நூலை எழுதுவதற்குக் காரணம் ஆயிற்று.

வருங்காலச் சந்ததியினர் நம்மைப் போலவே ஆரோக்கியமாக வாழ்ந்திட நீர் இன்றியமையாத ஒன்று. எனவே நீரினைச் சிக்கனமாகத் தேவைக்கேற்பப் பயன்படுத்துவதற்கு ஒரு கையேடாக இந்நூல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினால், நுகர்வுக் கலாச்சாரம் அதிகரித்துவிட்ட இந்நாளில் எந்தப் பொருளில் எவ்வளவு நீர் உள்ளது என்பதைக் கூறுவதன் மூலம் தனி மனிதர் பயன்படுத்தும் பொருளின் அளவைத் தேவைக்கேற்பக் குறைத்துக்கொள்ளவும், அதன் மூலம் தண்ணீரை வீணாக்காமல் இந்தச் சமூகத்திற்கு உதவிடவும் இந்நூல் உதவியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதப்பட்டுள்ளது.

மேலும் இன்றைய தண்ணீர்த் தட்டுப்பாட்டின் அடிப்படைக் காரணங்களை இதில் எழுதியதன் மூலம் இயற்கை வளங்களைப் பாதுகாக்கத் தனி மனிதர்களுக்கு உதவியாக இப்புத்தகம் இருக்கும் என்று நம்புவதோடு, இந்நூலை வாசிப்பவர்கள் ஒழுகும் குழாய்களை மூடுவதன் மூலம் உணவை வீணாக்குவதைத் தடுப்பதன் மூலம் மறை நீரைச் சேமிக்கவும், நெகிழிப் புட்டிகளைத் தவிர்க்கவும் உதவும் என்று இந்நூல் படைக்கப்பட்டுள்ளது. இந்நூலைப் படைப்பு குழுமம் வெளியிட்டுத் தன் சமூக அக்கறையை, பூமிப்பந்தைக் காப்பாற்ற ஒரு மாபெரும் பொறுப்பை நிறைவேற்றியுள்ளது. ■

• வலங்கைமான் நூர்தீன்



# "கவிதை எழுதத் தெரியாதவர்களே ஹைக்கூ எழுத வருகிறார்கள்"

## நா. விச்வநாதன் அவர்களுடன் ஒரு சந்திப்பு

**தொடர்ந்து இலக்கியத்தில் தொய்வில்லாமல் பயணம் செய்யும் முக்கியமானவர்களில் தாங்களும் ஒருவர். எப்படி உணர்கிறீர்கள்...? எழுத்திற்கு ஓய்வில்லைதான். தங்களுக்கு அயர்ச்சியாக இல்லையா...?**

*அது இயல்பானது. உணவு கொள்வதைப்போல. எழுதுவதுகூட ஒரு யோகம்தான். தவம்தான். சிலவற்றுக்கு ஓய்வு இல்லை. அயற்சி இல்லை. இப்போதுகூட சில வங்கி ஊழியர்கள் இலக்கியம் பேச வந்தார்கள். மதிய உணவு துறந்து பேசவே செய்கிறேன். இது உயிர் நீட்சிக்கு உதவக்கூடும்.*

**தற்கால நவீனச் சிறுகதைகள் எதை நோக்கிப் பயணிக்கின்றன...? நவீனத்துவம் என்ற பெயரில் சாமானியர்களைச் சென்றடைவதில் சுணக்கம் இருக்கிறதா...?**

*நவீனம் என்ற சொல்லாடலே சரியன்று. நவீனம் பழசு என்ற ஒன்றில்லை. ஆறுகள் நட்சத்திரங்கள் மலைகள் சூரியன் நிலா ஆகாயம் பழசல்ல.*

என்றுமிருப்பவை. இதை ஒரு வசதிக்காகச் சொல்வது. இலக்கியம் தேங்கி நிற்கவில்லை. எங்காவது யாராவது ஒரு சொல்லை நேர்த்தியாக அழகாக எழுதிவிடுகிறார்கள்.

**கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல்கள், ஹைக்கூ என்று தங்களின் தளம் மிகவும் விசாலமானது. எழுத்து நடையில் தனித்துவமாக நிற்கிறீர்கள். எப்படி உணர்கிறீர்கள் சார்..?**

எழுதியபிறகு வாசகனாக மாறிவிட வேண்டுதல்தான் சரி. சில பரிசோதனை முயற்சிகள்கூடும். சில கம்பீரமாக நடக்கின்றன. சில நொண்டுகின்றன.

**மத்திய அரசின் அஞ்சலகத்துறையில் பணியாற்றிக்கொண்டே இலக்கியத்திலும் சாதித்தீர்கள். சினிமாத்துறையில் பிரபலமான படைப்பாளர்களும் தங்களின் நண்பர்கள் என்பதை நான் அறிவேன். அவர்களின் நட்பு இப்போதும் தொடர்கிறதா..?**

இப்போது எழுத்தை முழுநேரமாக யாரும் கொள்வதில்லை. அரசு, வங்கி ஊழியர்கள் போன்றோர்தாம் எழுதுகிறார்கள். ஒரு வசதியான இடத்தில் அமர்ந்துகொண்டுதான் செய்கிறார்கள். இதனால் இலக்கியம் குறைவுபடுவதில்லை. நட்புபேணுபவன்நான். சட்டென ஒட்டிக் கொள்ளும் சுபாவி. இது உடன்பிறந்தது. நேசம் பெரிது.

**இத்தனை நண்பர்கள் சினிமாவில் இருந்தும் தங்களின் பங்களிப்பைத் தாங்கள் ஏன் பயன்படுத்தவில்லை? அந்த மாய உலகத்திற்குள் நுழைய தங்களுக்கு விருப்பமில்லையா... தயக்கமா... ஒருவித அச்சமா..?**

சினிமா என்னை ஆட்படுத்தவில்லை. நண்பர்கள் வற்புறுத்தலில் சில நல்ல படங்களைப் பார்ப்பதுண்டு. தியேட்டர் சென்று முப்பதாண்டுகளாயிற்று. சொல்லப்போனால் மகேந்திரன் பாலுமகேந்திரா கோமலோடு நிற்கிறேன். சினிமா அறிவு சொற்பமே. நிறையக் கதைகளை வாங்கிக்கொண்டு போயினர். பிறகு சப்தமே இல்லை. சினிமாவில் சுலபமாக நுழைந்திருக்கவும்கூடும். ஈர்ப்பு இல்லை. இது என் குறையே.

**தமிழக அரசின் விருதுகள் உட்பட ஏராளமான விருதுகளை வென்றிருக்கிறீர்கள்... அந்த அங்கீகாரங்கள் உங்களை எந்த மனநிலைக்கு உட்படுத்தியது? அவசரமான இந்த விளம்பர உலகில் தன்னடக்கமாகவே இருந்து கொண்டிருக்கிறீர்கள், ஏன்..?**

பரிசுகளை நோக்கி நான் நகர்ந்ததில்லை. சில அங்கீகாரங்கள் கிடைக்கவே செய்கின்றன. மகிழ்ச்சிதான். என் குடும்பம்கூட குதூகலமடைகிறது. கிடைக்கவில்லை எனில் வருத்தமில்லை. எனக்குப் பின்னால் பெரிய வாசகர் திரள் இல்லை. என்றாலும் கொண்டாட்டம் முக்கியமானதுதான்.

**இலக்கிய அரசியல் என்பது என்ன..? அந்த வட்டத்திற்குள் சிக்கிய அனுபவங்களை விவரிக்க இயலுமா..? தாங்களும் இலக்கிய அரசியல் செய்ததுண்டா..?**

இலக்கிய அரசியல் இருக்கலாம். அதில் நுழைய இஷ்டமில்லை. அரசியலின்றி நான் இல்லை. அலுவலகம் தொழிற்சங்கம் அவை சார்ந்த இடதுசாரியாக என்னைச் சொல்வர். சரியானதே. குபரா மௌனி எம்விவி புதுமைப்பித்தன் ஜானகிராமன் லாசரா கநாசு என என் எழுத்து இவர்களின் நிழல்களில் வருகின்றன. ஆனால் இவர்களின் நகல் அல்ல. என் எழுத்தில் கோஷங்கள் இல்லை.

எனக்கான செய்திகள் என் வீட்டில் என் தெருவில் என் ஊரில் கொட்டிக்கிடக்கின்றன. எனக்கான சாரத்தைச் சக மனிதர்களிடமிருந்தே பெற முடிகிறது. என் எழுத்து இப்படித்தான் கட்டமைக்கப்படுகிறது. இருந்தும் சண்டைக்கோழி என்பது மாதிரியான செல்லப் பெயர்களும் எனக்கு மகிழ்ச்சியோடு தருகிறார்கள். உற்சாகமாக ஏற்கிறேன்.

**தற்போது பத்திரிக்கையாளராகவும் வலம் வருகிறீர்கள். பேசும் புதியசக்தியில் முழு சுதந்திரமாக இருக்கிறீர்களா..? எதற்காகவும் கட்டாயப்படுத்தப்படுகிறீர்களா..?**

பேசும் புதியசக்தியில் என் இயக்கம் கூடுதல். காரணம் முக்கியத்துவம் சுதந்திரம். நான் விரும்பியதை எழுத முடிகிறது. எதை எழுதினாலும் போடத் தயாராக இருக்கிறார்கள். நிர்வாகி எனக்கு என் தகுதிக்கு மீறிய சலுகைகளைத் தருகிறார். என் யோசனைகள் செல்லுபடியாகின்றன. அதனால் உண்மையோடும் பொறுப்போடும் கவனமாகவும் எழுதுகிறேன். என் கட்டுரைகளைத் தொகுத்துப் புத்தகமாகப் போட்டார். அதீத கவனம் பெற்றேன். பேசும் புதியசக்தி எனக்கு வரம். என்னிடம் புகழ்ச் சொற்கள் சொற்பமே. ஆனாலும் சிலவற்றைச் சொல்லாமல் விடுவது அறமன்று. நியாயமுமன்று. பேசும் புதிய சக்தி எனக்கான சிறந்த தளம். அடிக்கடி இதைச் சொல்வது அறம் சார்ந்து. வெறும் புகழ்ச் சொற்களல்ல.

**கவிஞர்கள் பெரும்பாலும் போதைக்கு அடிமையானவர்களாகவே இருக்கிறார்கள். அதனாலேயே நிறைய கவிஞர்களை நாம் இழந்துள்ளோம். எதனால் இந்த அவல நிலை... போதைதான் கவிதைகளை ஆழ்மனதில் புகுத்துகிறதா..?**



போதை எழுத்தாளர்களுக்கு ஒரு தகுதி என்பது அவலம். இது முறையானதன்று. நானறிந்தவரையில் இதில் மிகச் சொற்பமானவர்களே கிடக்கிறார்கள்.

**மரபு, புதுக்கவிதை, ஹைக்கூ, நவீனம், பின் நவீனம் என்கிறோம். இதற்கு அடுத்தது ஏதாவது இருக்கிறதா..?**

இதற்குப் பதில் சரியாக வராது. அது வெளியே இருக்கிறது.

**மூன்று வரிகளை விடுகதைகள் போல எழுதிவிட்டு ஹைக்கூ என்கிறார்கள். ஹைக்கூ என்பது என்ன... அதன் அளவீடுகள் என்ன..? ஜென் மனநிலைத்துவம் எப்படி வரவழைப்பது..?**

கவிதை எழுதத் தெரியாதவர்களே ஹைக்கூ எழுத வருகிறார்கள். அதன் ஆதாரசுருதி பிடிபடாமல் மூன்று வரிகளில் ஏதோ செய்கிறார்கள். தடித்த புத்தகமாகக் கொண்டு வருகிறார்கள்.

ஹைக்கூ ஆரவாரம்தான். இதுவரை தமிழில் பத்துக்கும் குறைவான ஹைக்கூக்களே அசலாக எழுதப்பட்டிருக்கின்றன என்றால் கோபப் படுகிறார்கள். உண்மை நிலை கவலைதான்.

நான் ஹைக்கூ எழுதப் பழகும் பயிற்சியாளனே.


**இலக்கியச் சிற்றிதழ்கள் தொடரமுடியாமல் இடையிலேயே நின்றுவிடுகின்றன... இந்த அவல நிலை தமிழ் இலக்கியத்தில் மட்டும்தானா..? தனிச்சுற்று வட்டாரத்திலேயே முடக்கப்படுவதற்குக் காரணம்..?**

சிற்றிதழ்களுக்குக் காலக்கெடு இருக்கிறது. பொருளாதாரம் சம்பந்தப்பட்டது. ஒன்று நின்றவுடன் இன்னொன்று வருகிறது. இது நீட்சிதான்.

மணிக்கொடி எழுத்து இதழ்களின் தொடர்ச்சிதான்.

**தஞ்சைப் ப்ரகாஷ் அவர்களோடு நெருக்கமாகப் பயணித்தவர் என்ற முறையில் அந்த நினைவுகளைப் பகிரலாமே..? உங்கள்**






**இருவருக்கும் கருத்துவேறுபாடுகள் மூலம் மோதல்கள் வந்ததுண்டா..?**

தஞ்சை ப்ரகாஷ் எங்கள் ஆசான். அவரிடம் பெற்றது நிறைய. பல சிறந்த எழுத்தாளர்கள் சந்திப்பு எங்களுக்கு நேர்ந்தது அவரால்தான்.

**எழுத்தின் மூலம் என்ன சம்பாதித்தீர்கள் நண்பர்களைத்தவிர... எழுத்தால் என்ன இழந்தீர்கள், எப்படி இழந்தீர்கள்..?**

சம்பாதிப்பதற்காக எழுதவருகிறது என்பதே தமிழில் சிறந்த நகைச்சுவை. சிற்றிதழ்களில் மட்டுமே இயங்கும் என் போன்றவர்களுக்கு மகிழ்ச்சி தருவது. என் நோக்கம் எழுத்தின்வழி ஜீவிப்பது அல்ல. இதில் பரவசம் இருக்கிறது. இலக்கிய வளர்ச்சி என்பது சிற்றிதழ்களாலேயே.

ஆயுள் கம்மி என்றாலும் அவை முக்கியமானவை. ஒருநூறு பேர் இருந்தாலும் சரியானவர்கள். படைப்பாளியும் வாசகனும் தேர்ந்தவர்கள்.

**நா. விச்வநாதனுக்கும் தஞ்சாவூருக்கும் உள்ள பந்தம் என்ன...? தஞ்சையில் அனைத்து இலக்கிய மேடைகளிலும் தாங்கள் கட்டாயம் இருப்பீர்கள்...எப்படி அவ்வளவு பேரன்புள்ளங்களைச் சம்பாதித்தீர்கள்..?**

பிறந்த பூமிக்காகத்தான். நேசம் முக்கியம்.

அது பகிர்வதற்கே. அது உத்தமமானது மேலானது. எந்தச் சூழலிலும் என்னால் நண்பர்களுடன் குதூகலமாக இருக்க முடிகிறது.

**எல்லாவற்றிலும் தலித் என்று வேறுபடுத்தப் படுகிறது. உதாரணமாக, தலித் அரசியல். தலித் இலக்கியம் என்றால் என்ன... அது எதைப் பேசுகிறது..? எதை நோக்கிச் செல்கிறது..?**

தலித் எழுத்து பெண்ணிய எழுத்து என்பதெல்லாம் இல்லை. பம்மாத்துதான் இருகூறாகப் பிரிக்கிறது.

**கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என எழுதத் தனித்தனியாக நேரம் ஒதுக்குகிறீர்களா... இல்லை எல்லாச் சூழ்நிலைகளிலும் அது உங்களுக்குச் சாத்தியமாகிறதா..?**

முடியும்போது எழுதுகிறேன். இதற்கான சூழல் மனநிலை சார்ந்துதான் முடியும். சட்டம்



போட்டுக்கொண்டு எழுதுவது சோகையாய்த் தான் இருக்கும்.

**எப்போது தொடங்கினீர்கள் எழுத்தை... எத்தனை வயதாகிறது உங்கள் எழுத்திற்கு...? ஆரம்ப காலத்தில் என்ன எழுதினீர்கள்..? எதில் எழுதினீர்கள்...?**

உயர்நிலைப்பள்ளியில் வாசிக்கும்போதே எழுத வந்துவிட்டேன். பள்ளி ஆண்டுமலர்களில் காமாசோமா என்று எழுதியிருக்கிறேன். ஆரம்பத்தில் கவிதைகள்தாம்.

நவகவிதைவரிசை என்று கவிஞர் மீரா ஒன்பது தொகுதிகள் கொண்டுவந்தார். அதில் ஒன்று என் 'சுதந்திரம்'.

நவகவிதை வரிசைக்கவிஞர்கள் யாரும் சோடை போகவில்லை.

நான், விக்ரமாதித்யன், கல்யாண்ஜி, கலாப்ரியா என.. கவிஞர் மீரா கடலளவு மனசுடையவர்.

**விருதுகளைப் பற்றிய தங்களின் மனநிலைமை என்ன? விருதுகள் விற்கப்படுவதாகக் கூறும் கூற்றைத் தாங்கள் நம்புகிறீர்களா? விருதுகள் விற்கப்படுகிறதா, இல்லை வாங்கப்படுகிறதா..?**

விருதுபற்றி ஏற்கெனவே சொன்னேன். விருது வாங்கும் கலை.

சிலர் இதில் வல்லவர்கள். குற்றம் சொல்லமுடியாது. கூச்சமற்றவர்கள் எல்லாவற்றிலும் இருப்பார்கள்.

**தற்காலக் கவிஞர்களில் யாரெல்லாம் சிறப்பாகச் செயல்படுகிறார்கள்.. எதனால் தனித்துவம் பெறுகிறார்கள்.. தனித்தனிக் குழுக்களாக இயங்குகிறார்களே... இணையத்தில் சண்டையிடவும் செய்கிறார்களே... தாங்களும் குழு வைத்திருக்கிறீர்களா...?**

குழுமனப்பான்மை அபத்தம்தான். குற்றமானதுதான். சில குழுக்கள் என்னை என் இசைவின்றியே இழுத்துக்கொள்கின்றன. ஆரோக்யமற்றது. சண்டை சச்சரவுகள் பிணக்குகள் சகஜமாகும். எழுத்தில் இதுபோன்ற குழுக்களின் சண்டியர்கள் மிளிரமாட்டார்கள்.

நேசமே பிரதானம். ■

• ஜின்னா அஸ்மி
ஓவியம் : அன்பழகன்

# நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் – 12

இருளைத் தரிசிக்கத் தெரிந்த கண்களுக்கு
எல்லாம் வெளிச்சமாகவே இருக்கும்
உன்னைப் போல....

• • •

உன்னை அழைப்பதற்கு
ஒருபோதும் நான்
வார்த்தைகளைப் பயன்படுத்தியதே இல்லை..

• • •

நீ... இல்லாமையின் இருப்பு
நான் இயலாமையின் இருப்பு
இந்த இருத்தலில் இருக்கிறது
நம் புரிதலான நேசம்...

• • •

நீ காட்டும் திசையில்
என்னை நான்
பார்த்ததே இல்லை...

• • •

உன் அழைப்பை ஏற்றதால் வந்தேன்
இனி ஒருபோதும்
எனைத் திருப்பி அனுப்ப இயலாது
விதியைக் கீழே வை
காதலைக் கையிலெடு

• • •

நீ தேடும்போது கிடைப்பதே இல்லை...
தேடுதல் பயனற்றபோது
கிடைக்கிறாய்...

• • •

எல்லாவற்றையும் இழந்த பின்பு
எஞ்சி நிற்கும் நினைவுகளை
இரவுகளுக்குத் தருகிறேன்
காதல் அதைப் பாடலாக்குகிறது


• • •


காதல் கடவுள் இரண்டையும்
அடைய நினைக்கையில் தோற்கிறாய்
உணரும்போது பெறுகிறாய் ■



• சலீம் கான்

# ஆதித்தாய் ஈன்ற கவிதைகள்




நூல் : வேர்த்திரள்

தொகுப்பாசிரியர் : சகா

வெளியீடு : படைப்பு பதிப்பகம்

எல்லா உயிர்களுக்குமான ஆதித்தாய் காடு. அதில் வாழும் உயிர்களுக்கு நீராதாரம் மழை. மழை இல்லையென்றால் காடு இல்லை. அதேபோலக் காடு இல்லையென்றாலும் மழை இல்லை. அப்படி ஒரே கருவில் பிறந்த இரட்டைக் குழந்தைகளாக இருக்கும் மழையையும் காடுகளையும் பற்றி "மழைக்கு ஒதுங்கிய வானம்" என்ற தலைப்பின்கீழ் கவிக்கோ பிறந்த நாள் பரிசுப்போட்டிக்காகவும், "வேர்த்திரள்" என்ற தலைப்பின் கீழ் 'அம்மையார் ஹைறுநூன்பீவி' நினைவு பரிசுப்போட்டிக்காகவும், போட்டிக்களம் அமைத்து எழுதக்கேட்டது படைப்புக்குழுமம். அதன் முத்தாய்ப்பான கவிதைகளின் தொகுப்பே இந்தக் கணத்தில் உங்களின் மனதில் நிறைந்துகொண்டிருக்கும் 'வேர்த்திரள்' தொகுப்பு. இப்போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு முப்பதாயிரம் ரூபாய் பரிசுப்பணம் பகிர்ந்தளிக்கப்படும் என்பது கூடுதல் சிறப்பு.

இந்த இரு போட்டிகளுக்கும் வந்திருந்த ஆயிரக்கணக்கான சிறந்த கவிதைகளினின்றும் மிகச்சிறந்த கவிதைகளைப் பரிசிலுக்காகத் தேர்வு செய்தும் சற்றும் சலிப்புறாது இத்தொகுப்பிற்கான வாழ்த்துரை வழங்கியும் நம்மைப் பெருமைப்படுத்திய கவிஞர். விக்ரமாதித்யன் மற்றும் கவிஞர் வண்ணதாசன் அவர்களுக்குப் படைப்புக் குழுமம் தன் நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறது. ■

• தா. ஜோ. ஜூலியஸ்




# ஷான் மரிய குஸ்டாவ் லே க்லேசியோ

உலகு நீரிலிருந்து பிரிக்கப்படாமல் வெறுமையாக இருந்தது என்பதைப்போலத்தான் பிரெஞ்சு மொழிக்கான இலக்கிய நோபல் பரிசு ஷான் மரிய குஸ்டாவ் லே க்லேசியோவுக்குக் கிடைக்கும் வரை பிரெஞ்சு இலக்கியத்தில் இத்தகைய பெயர் அறியப்படாமலேயே இருந்தது. ஏனெனில் அவர் முதன் முதலில் ஆங்கிலத்தில் எழுதி வந்தவர். மிகவும் சாதாரண மற்றும் நிர்வாண நடையில் அவர் எழுதிய படைப்புகள் முதலில் சீந்துவார் அற்றுக் கிடந்தன.

1940ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் நாளில் பிறந்த இவர் பிரெஞ்சுப் பேராசிரியர் மற்றும் எழுத்தாளர் என்றே அடையாளப்படுத்தப் படுகிறார். நாற்பதுக்கும் மேற்பட்ட படைப்பு களைப் படைத்துத் தனக்கெனத் தனி இடத்தைப் பிடித்துக்கொண்ட இவரைப் பிரெஞ்சு மக்கள் உதாசீனப்படுத்தியே வந்துள்ளனர். ஆனால் "ஆளுகின்ற நாகரீகத்தின் இப்பாலும் அப்பாலும் மனிதத்தைத் தேடி உணர்ச்சிகளின் உச்சத்தைக் கவிதை உலகின் புது முயற்சியாகப் பழைமையை விட்டு விலகிப் படைத்தவர்," என்றே 2008ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு மேற்கோள் இவரைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

தனது ஏழு வயதில் எழுதத் துவங்கிய இவர் முதன் முதலில் எழுதியது கடலைப் பற்றி ஆகும். இவரது 23 வது வயதில் விசாரணை (The Interrogation) என்ற தனது புதினத்தின் மூலம் புகழின் உச்சத்தை அடைந்தவர். அதற்கான நோபல் பரிசினையும் வென்றார்.

1963 முதல் 1975 முடிய உள்ள காலகட்டத்தில் இவரது கருதுகோள்கள் அல்லது மையக் கருத்துக்கள் பயித்தியக்காரத்தனம், மொழி, இயற்கை ஆகியவை பற்றி ஆகும். ஜார்ஜஸ் பெரக் மற்றும் மைகேல் ப்யூடர் போன்ற சமகால எழுத்தாளர்களைப் போலவே இவரும் பல



சோதனைகள் தங்கள் படைப்புகளில் செய்திட தன்னையே அர்ப்பணித்துக்கொண்டார். இவர் உண்மையில் ஒரு விஞ்ஞானியைப் போல் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க முயன்ற ஒரு கலகக்காரர் என்றே மைக்கேல் ஃபோக்கால்ட் மற்றும் கில்லா டெல்யூஸ் போன்றோர் இவரைப் பற்றிப் புகழ்ந்து பேசுவர்.

1970களில் இவரது எழுத்துப் பாணி முற்றிலும் மாறுதல் அடைந்தது. சோதனை முயற்சிகளைக் கைவிட்டுவிட்டுப் பிள்ளைப் பிராயம், இளம் பருவம், பயணம் போன்றவற்றில் இவர் கவனம் செலுத்தித் தன் படைப்புகளை உருவாக்கினார். பிரெஞ்சு அகாதமி நிறுவிய பால் மொராண்ட் எனும் உயரிய விருதும் இவரது பாலைவனம் எனும் புதினத்திற்கு 1980இல் வழங்கப்பட்டது. 1994ஆம் ஆண்டில் லையர் எனும் இலக்கிய இதழ் நடத்திய புள்ளி விவர அறிக்கைப்படி பிரெஞ்சு மொழியில் எழுதும் பெரும் படைப்பாளிகளில் இவரும் ஒருவர் எனப் பதின்மூன்று விழுக்காட்டினர் இவரைக் கருதுவதாகக் கூறி இருந்தனர்.

தனது நோபல் பரிசு ஏற்புரையில் இவர் "செய்தியின் வறுமையை"த் தாக்கிப் பேசினார். அந்தப் பேச்சின் தலைப்பு "முரண்பாடுகளின் வனத்தில்'' என ஸ்டிக் டாகர்மேனின் தலைப்பினைப் பொன்னே போல் பொதிந்து எடுத்துக் கையாண்டதாக அவரே கூறினார்.

இவரது புதினங்களை வரிசைப்படுத்தினோம் எனில் நாற்பதுக்கும் மேற்பட்டவற்றில் அதிக மொழிபெயர்ப்புக்கு உள்ளான கீழ்வருபவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

1. விசாரணை (The Interrogation) 1963.
2. பூமோண்ட் வலியை உணர்ந்த நாள் (The Day Beumont Became Acquainted with the Pain) 1967.
3. பிரளயம் (The Flood) 1966.
4. டெர்ரா அமாட்டா (Terraa Amata) 1967.
5. பறத்தலின் நூல் (The Book of Flight) 1969.
6. போர் (War) 1970.
7. அரக்கர்கள் (The Giants) 1973.
8. அடுத்த பக்கத்திற்குப் பயணம் (Journey to the Other Side) 1975.
9. பாலைவனம் (Desert) 1980.
10. ஓவானியா (Ouwania) 2006.
11. ஆல்மா (Alma) 2017.

கட்டுரைகள், சிறுகதைகள், சிறுவர் இலக்கியம் என அனைத்து வகைமைகளிலும் தன் திறமையை வெளிப்படுத்திய இவரது படைப்புகள் பலவும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப் பட்டுள்ளன. இவரது புதினங்களில் கதா மாந்தர்களின் துயரம் ஒவ்வொரு கதையிலும் மிகத் துல்லியமாக விவரிக்கப்பட்டுள்ளது.. தமது சொந்த அனுபவத்தை எடுத்துக் கூறுவது போல் அமைந்துள்ளது. குறிப்பாக, துயரம் இழையோடும் கீழ்வரும் நிகழ்வுகள் நோக்கற்பாலவை ஆகும்

1. சில நேரங்களில் கதாமாந்தர்களின் தனிமைத் துயர்.
2. சிலரது உடைமைகள் களவு போவது.
3. சில நாடோடிகள் இத்தாலியை விட்டுக் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவது
4. இரண்டு இளம் பெண்கள் வீட்டை விட்டு ஓடுவது.
5. ஒரு குழந்தை எவ்வாறு திருடனாகிறது.

6. நடமாடும் வீட்டுக் கம்பளத்தில் ஒரு பெண் பிரசவிப்பது.
7. ஒரு டிரக்கு ஒரு பெண்ணை நசுக்கிச் சாகடிப்பது.
8. பாதாள அறையில் ஒரு பெண்ணைக் கதறக் கதறக் கற்பழிப்பது.

ஆயினும் மிக மிக அதிகமாக விமர்சிக்கப் பட்ட எழுத்தாளர்கள் வரிசையில் லே க்லாசியோ முதலிடம் வகிக்கிறார். 1950களின் பிந்தைய ஆண்டுகளில் ப்ரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் பயின்ற இவர் தனது புதினங்களை ஆங்கில புதினங்களைப் போலவே எழுதிவந்தார். ஆங்கில வாசகர்கள் முதலில் இவரையும் இவரது படைப்புகளையும் ஏற்கவே இல்லை. அதனா லேயே தான் பிரெஞ்சு மொழியில் எழுதத் துவங்கியதாகக் கூறுவார்.

அல்ஜீரியா செல்லும் முன் எழுதிய விசாரணை எனும் புதினத்தை, தமக்கு நோபல் பரிசு பெற்றுத் தந்ததை, அது ஒரு “நகைச்சுவைத் துணுக்கு” என்றார். ராணுவத்தை விட்டு ஓடிய ஒருவர், தாம் வெளியே வந்தது ராணுவமா அல்லது பயித்தியக்கார விடுதியா என யோசிப்பது போல் புரியாமல் விழிக்கும் அவல நிலையை விவரித்து எழுதி உள்ளார். இந்த எழுத்தாளரின் முகப் பொலிவையும் தோற்றத்தையும் வைத்து இவரைப் பிரெஞ்சு இலக்கியத்தின் “ஸ்டீவ் மெக்வீன்” என்றும் போற்றப்பட்டார்.

ஆயினும் 1970இல் இவர் எழுதிய போர் எனும் வியட்னாம் போர் பற்றிய புதினத்தைப் “படிப்பதே ஒரு சித்திரவதை” என விமர்சிக்கப் பட்டது.

பாலைவனம் எனும் புதினத்தில் லல்லா எனும் இளம்பெண் கதாநாயகி.. “ஸ்பெயின் நாட்டில் இருந்து மார்செயில்ஸ்சுக்கு ஓடிப்போய் இறுதியில் பாரீஸ் நகர் வந்தடைந்து அங்கு ஒரு பிரபல விலைமாது என ஆகிறாள் எனச் சித்தரித்து இருப்பது வீட்டை விட்டு ஓடும் பெண்கள் அப்படித்தான் முடிவர் எனும் கருத்தை வெளியிடுவதாய் அமைந்து இருந்தது. இந்தப் புதினத்தைத் தேர்வு செய்து விருது வழங்கிய பிரெஞ்சு அகாதமி அவர் புதின உலகில் வயதுக்கு வந்துவிட்டார் எனப் போற்றிப் புகழ்ந்தது.

1978 இல் கடலைப் பார்க்காத பையன் என்ற புதினத்தின் இளம் கதாநாயகன் டானியேல்



சிந்துபாத் இறுதியில் கடலைக் கண்டு அதனுடன் ஐக்கியமாகி விடுகிறான். இது மனித உள்ளுணர்வு இயற்கையை அரவணைக்க ஆர்வமாய் இருப்பதை எடுத்துரைப்பதாய் அமைந்தது.

பயணங்கள் எனும் கட்டுரையில் விவிலியத் தின் தொடக்க நூலில் உள்ள தொடக்க வரிகள் ஆகிய ஆதியில் நீரும் நிலமும் பிரியாமல் ஒன்றுமில்லாமல் இருந்தது போல் எதுவும் ஏதும் பேசாமல் இருந்தன எனக் குறிப்பிட்டுக் கதை சொல்லியின் குரல் மட்டுமே கேட்பதாக அமைத்து எல்லாக் காலங்களிலும் இருப்பவராகிய கடவுள் வெறுமையும் உருவமும் அற்று இருப்பவராகக் காட்டி உள்ளது அவரை ஒரு ஆன்மிக எழுத்தாளர் எனவும் சுட்டிக்காட்ட வைக்கிறது.

மீக்காக்ஸ், லூத்ரமோண்ட், ஜே.டி. சாலிங்கர் போன்ற பெரும் படைப்பாளிகளின் தாக்கம் அவரிடம் இருந்தது. ஆயினும் மேற்கத்தியக் கலாச்சாரத்தை வெறுக்கும் தொனி அவரது எழுத்துக்களில் என்றென்றும் எதிரொலிக் கின்றன. ■

கவியும் சித்திரமும் :
• அழ.ரஜினிகாந்தன்

# ஊர்மிளை

அன்று....
அயோத்தியும் மிதிலையும்
சொல்லி வைத்ததுபோல்
சோகத்தில் -
மிதந்தன
வாழப்போன
தன் மகள்

வனவாசம் போவதை
எண்ணி எண்ணி
அடக்கமுடியாமல்
சனகனின் விழிகளில்
அருவிகள் -
வழிந்தன

இறுக்கமும் உருக்கமும்
நிலவிய
அவ்விரு நாட்டிலும்
வருத்தப் பெருமூச்சே
வளைய -
வந்தது

அலறி அழுதால்
அரச மாண்புக்கு
அழகல்ல என்றுணர்ந்து
நிலவறைக்குள்
தாளிட்டுக்கொண்டு
நெடுநேரம் அழுதான் -
சனகன்
புலரும் பொழுதுக்குள்
புதுச் செய்தி வாராதா
என
தளர்ந்த நடையோடு
தளும்பினான்
அந்த -
தந்தை......



நிச்சயமாக
தன் நிலைமாறித்
தசரதன்
அனுப்பிவைப்பான் ஒரு
தாக்கீது என்றபடி
தழுதழுத்தது அவன் –
சிந்தை

அங்கே அயோத்தியில்...

வரிவரியாய் வழிந்தோடும்
தாயின் கண்ணீரை
நிறுத்த இயலாது
நிற்கிறேனே
என்ற வருத்தம்
பெருகி வந்து
உறுத்தியது –
இராமனுக்கு.....
வான் அளித்த தேவமகன்
வனம் போவானோ
இந்த வயிறெரிய
என் பிள்ளை
மனம் நோவானோ
என்று அழும் தாயைக்
கண்டு
கண்கள் கலங்கிற்று
அந்த –
சோமனுக்கு...

ஆகவே
பொத்தாம்பொதுவாய்
ஒரு
பொதுநீதி சொல்லிவிட்டுப்
பத்துமாதம் சுமந்தவளின்
பாதங்களில் –
வீழ்ந்தான்
அன்னையே...!
வாக்களித்த தந்தையை
வஞ்சித்தல் –
அறமன்று
அவரது
நோக்கம் அறியாது
நோவதும் –
அறமன்று



ஆசி கொடுங்கள் தாயே
நான்
ஆரண்யம் –
செல்வதற்கு
அஞ்ஞாத வாசம்
என்பதே
அறிவைப் பெருக்கி
அகிலத்தை –
வெல்வதற்கு
எனப்
பாலூட்டி வளர்த்த
தாயிடம்
பணிவோடு சொன்னது
பரந்தாமனென்னும்–
குணக்குன்று.....

அவளது
பாதாரவிந்தங்களைச்
சீதாப் பிராட்டியுடன்
சேர்ந்து – தொழுதான்
அன்றைக்குத்தான்
முதன்முதலாய்
முதுகு குலுங்கிட
தன்
அன்னையைக் கட்டிக்கொண்டு –
அழுதான்

**இலக்குவன்**

அண்ணனின் அடியொற்றி –
நடப்பவன்
அவன் நாமம்
ஒன்றையே
அன்றாடம் சொல்லிக் –
கிடப்பவன்
அவனையே தன்
ஆவியென –
நினைப்பவன்
அண்ணன் இடும்
ஆணைகளைத்
தெண்டனிட்டு –
முடிப்பவன்
அண்ணனைப்போல்
சாந்தமில்லை
அடங்காத –
துடுக்கவன்
எதிர்ப்படும் இடர்களை
இருகரத்தால் –
தடுப்பவன்

இருள் அகற்றி
ஒளிவீசும் –
விளக்கவன்
அவன்
ஏழ்பிறப்பெடுப்பினும்
இவனே என்
தம்பியென
இராமன்
இதயத்தில் ஏந்திய–
இலக்குவன்....!
நான் வந்ததோ
ஊர்மிளை –
கதை சொல்ல..
சுற்றி வளைக்காமல்
எப்படி –
அதைச் சொல்ல....
ஆகவே
முன்கதைச் சுருக்கத்தை–
சொன்னேன்
இனி
மூலக் கதையினை –
சொல்வேன்......!

ஏர்முனையில் கிட்டிய
சீதையைச்
சனகன் கொணர்ந்து
ஏழு மாதங்கள்
கடந்தபின்
ஒரு
போர்முனையில்
இருந்தபோதுதான் நம்
ஊர்மிளை -
பிறந்தாள்
வார்ப்புச் சிலைபோல
வந்து பிறந்தவள்
அசப்பில் அவளது
அக்காவைப் போலவே -
இருந்தாள்




ஏர்முனைக்காரியும்
போர்முனைக்காரியும்
தேர்வலமேறி
ஊர்வலம் -
போயினர்
கார்முகில் விலக்கி
இவர்களை நோக்கிய
கதிரவனும் சந்திரனும்
வெலவெலத்துப் போய்
கற்சிலைபோல் -
ஆயினர்

அவர்கள்
தேர்வலம்
வந்த தேசம் -
மிதிலை
இந்திரனால் கூட
கடந்துவிட இயலாது
இமயம் அளவு
வியாபித்து நிற்கும்
மிதிலை தேசத்தின் -
மதிலை....!

அடிப்படையில்
சனகனுக்குச்
சீதை ஒரு -
தத்துப்பிள்ளை
அவளைக்
கொண்டு வந்தபிறகுதான்
அவனது
பட்டத்தரசிகள் எல்லாம்
ஈன்றார்கள்
ஆளுக்கொரு -
பிள்ளை
அவள்
வந்தபிறகுதான்
அள்ளி அள்ளிப் பருகினான்
சனகன்
ஆனந்தக் -
கள்ளை.....!

அவள்
குழவியாய்க் கிடக்கையில்
கூடவே கிடந்தது ஒரு -
வில்
ஆகப்பெரிய வன்மையுடன்
ஆராலும்
அசைக்கவே முடியாதபடி
இருந்த
அந்த வில்லைத்தான்
அரைநொடியில்
எடுத்து
அக்கணமே
உடைத்து
அவளைத்
தனவயப்படுத்தினான்
தசரதன் -
பிள்ளை
நாடுகளைக் கூட்டி
நடந்த அந்தச்
சுயம்வரத்தில்தான்
நாதனைக்
கரம்பிடித்தாள்
மண்ணுள்ளவரை
மணத்துக்கொண்டே
இருக்கும்
சீதை என்னும் -
முல்லை....!

- தொடரும்

• பிரேம பிரபா
ஓவியங்கள் : அன்பழகன்

# நட்ட கல்லும் பேசுமோ? (சும்பன் நிசும்பனின் கதை)

கண்ணிற்கெட்டிய தூரம்வரை அச்சுறுத்தும் நெடிய பாலை. அங்குள்ள மரங்களும் செடிகளும் வாடிய நிலையில் இருக்கும். மிருகங்கள் குடிக்க நீர் இல்லாது தவிக்கும். தலைவன் பொருள்சேர்க்க பாலை நிலம் வழியாகச் செல்ல உடன் தலைவியும் இந்த நிலத்தைக் கடந்து செல்வாள். அப்போது அங்கு இறந்தவர்களுக்காக நட்ட நடுகற்களை வணங்கிக்கொண்டே போவார்கள். ஒரு சில நடுகற்களில் பூஜை முடிந்த தடயமாகச் சிதறிய இறைச்சித் துண்டங்களின் கவிச்சையும், சிந்திய கள்ளின் மணமும் ஒன்றெனக் காற்றில் கலந்து வீசும். படைக்கப்பட்ட பண்டங்களை வீரனின் ஆவி ஏற்றுக்கொள்வதாகவும், அதனால், வெற்றியும், விரும்பியது கிட்டும் என்றும் மக்கள் நம்பினார்கள். நடுகற்களைச் சுற்றி அரண் போல் நட்டு வைத்திருக்கும் கூரிய வேல்களின் வழியாக ஊடுருவிச் செல்லும் பாலைக் காற்று இரைச்சலோடு வெளியேற அந்தப் பேரொலி அச்சுறுத்தும் பெயர் தெரியா மிருகங்களின் ஊளையை ஒத்திருக்கும். நடுகற்களைத் தவறாது வணங்கினால் மழை மிகுதியாகப் பெய்யும். மழை பெய்தால் வறட்சிநீங்கிக் குளிரும்; மரம் செடிகள் தளிர்த்துப் பூக்கும்; அதனால் வறட்சிமிக்க இக்கொடிய பாலைவழியில் வண்டுகள் மிகுதியும் மொய்க்கும்; வளம் பெருகும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே இருந்தது.



சூரியக் கதிர்களின் வெப்பத்தால் ஏற்பட்ட நிலப் பிளவுகளில் முருங்கை மரங்களின் வெள்ளைமலர்கள் கொட்டிக் கிடக்கும். ஆளில்லாத நீண்ட வறண்ட பாலையின் பாதையில் கூர்மையான பற்களையுடைய ஆண் செந்நாய் வருத்தத்துடனும் பசியுடனும் தன் துணையுடன் நடுக்கல்லின் நிழலில் இளைப் பாறும். அங்குக் கள்ளிச் செடியும் வாகை மரங்களும் இருக்கும். கள்ளிச் செடிப் புதர்களி லிருந்து அதன் ஊளையைக் கேட்ட முதியவர்கள் மற்றவர்களைச் செய்கையால் அமைதி காக்க எச்சரிப்பார்கள். உட்புறம் வாடிய வளைந்த மூக்கையுடைய நொள்ளை நத்தைவாகை மரத்தின் சொரசொரப்பான அடியில் பொதிந்து இருக்கும்.

அனைவரும் சிறு சிறு குழுக்களாகத் தங்களின் பயணத்தை முதலில் தொடங்குவார்கள். ஒரு சிலர் குழுக்களில் இருந்து பிரிந்து களைப்பு மிகுதியால் சாலையோரத்தில் இருக்கும் வாகைமர நிழலில் சிறிது நேரம் ஓய்வெடுப்

பார்கள். அப்போது அவர்களுடன் வந்தவர்கள் முன்னேறித் தொலைதூரத்திற்குப் போய் விட, பயத்தை வெளிக்காட்டாமலிருக்க உரத்த குரலில் பேசிக்கொண்டும், பாடிக்கொண்டும் பயணத்தைத் தொடர்வார்கள்.

பயணம் செய்பவர்களின் பொருட்களைக் கைப்பற்றி அவர்களைக் கொல்லும் கள்வர்கள் அங்கு ஏராளம். யாத்திரிகர்களுடன் பயணிக்கும் அவர்கள் தங்களை யாரும் அடையாளம் காணாதிருக்கும் பொருட்டு வெகு இயல்பாகப் பேசிக்கொண்டும், பாடிக்கொண்டும் வருவார்கள்.

அந்தப் பாதையில் அடிக்கடி இரண்டு கள்வர்கள் பதிவாக வருவார்கள். அதில் ஒருவனின் பெயர் "சும்பன்". அவனுடைய மெலிந்த உடல்வாகும், பருத்த தலையும், அவன் உருவத்திற்குத் துளியும் ஒத்துப்போகாத கூரிய நாசியும் ஒன்றிற்கு இரண்டு முறை எவரையும் திரும்பிப் பார்க்க வைக்கும். நுனி பிளந்த அடர்த்தி இல்லாத மீசை காற்றிற்குக் கலையும் ஒவ்வொரு முறையும் உதட்டின் ஓரத்தைக் குவித்து மேல் நோக்கி வேகமாக ஊதுவான்.

இவனைப்பார்க்கிலும் வயதில் குறைந்த வனாகத் தோற்றமளிப்பவனின் பெயர் "நிசும்பன்". முன்னவனைப் பார்க்கிலும் பத்து வயது இளையவன். பளபளக்கும் திரண்ட தோள்களை உடையவன். அடர்த்தியான எண்ணெய் தடவிய புருவம். ஒரு நொடியில் எவரையும் சுண்டி இழுக்கும் வசீகரமான கண்கள். அடிக்கொரு தடவை நிலத்தை உழுவதைப் போல் விரல்களால் தலைமுடியைக் கோதிப் பின்வாக்கில் இழுத்துப் படிய வைப்பான்.

அன்று நிசும்பன் கைகளில் அணிந்திருந்த கருப்புக் கயிற்றில் காட்டு மலர்களைச் சொருகியிருந்தான். சிறிய ஊதாப்பூக்களுடன் பாறையின் மேல் படர்ந்திருக்கும் காட்டுக் கொடியினை வட்டமாகப் பின்னி கிரீடம் போலத் தலையில் அணிந்திருந்தான். ஒருபுறம் தன் நண்பனுடன் அவன் பேசிக்கொண்டே நடந்துகொண்டிருந்தாலும், அவனுடைய பார்வை ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல் பசியுடன் இரை தேடும் மீன்களைப் போல அங்கும் இங்குமாக அலைபாய்ந்தது.

ஏரிக்காத்தான் கோயிலை அவர்கள் நெருங்கும்போது இருள் கவிழத் தொடங்கி இருந்தது. கோயிலின் எதிரில் நட்டு வைத்திருந்த நடுகல்லின் அருகில் தான் அணிந்திருந்த கிரீடத்தை எடுத்து வைத்தான் நிசும்பன். தியான நிலையில் இருக்கும் ஒருவனின் உருவத்தை அந்தக் கல்லில் செதுக்கியிருந்தார்கள். நடுகல்லின் மீது நெய்யின் மணம் வீசியது. சாற்றிய மலர்களில் ஒன்றிரண்டு உதிர்ந்து நடுகல்லின் பதுகையின் மேல் இருந்தது. கல்லில் பொறித்திருந்த எழுத்துக்களை விரல்களால் வாஞ்சையுடன் தடவிக்கொண்டே,

"அண்ணே, நாம செத்த பிறகு நமக்கு இப்படி யாராவது ஒரு நடுகல் வைப்பாங்களா?" என்று கேட்டான்.

இதைக் கேட்ட சும்பன் விழுந்து விழுந்து சிரித்தான்.

"எதுக்குடா சாமி? நீ எத்தனை பேரை வழிமறிச்சுக் கொள்ளை அடிச்சேன்னு இந்த உலகம் தெரிஞ்சுக்கணும்னா? போடா போ, முதல்லே வந்த வேலையைப் பாரு" என்று வேட்டியிலிருந்து மடித்து வைத்திருந்த காய்ந்த வெற்றிலையை மடித்து வாயில் போட்டுச் சுவைத்து முதலில் வரும் அடர்த்தியான எச்சிலைக் காறி உமிழ்ந்து வாயின் ஓரத்தைக் கையால் அழுத்தித் துடைத்துக்கொண்டான்.

"இல்லைண்ணே, மத்தவங்க மாதிரி நாம சாகக்கூடாது. வீரனாய்ச் சாகாவிட்டாலும் கண்டிப்பா ஒரு திருடனா சாகவே கூடாது!"

நிசும்பனையே உற்றுப்பார்த்த சும்பன் "கல்யாணம் கார்த்தி எல்லாம் உனக்கு இப்போதான் நடந்திருக்கு. அதெல்லாம் அப்பறம் பேசிக்கலாம். எனக்கு ரொம்பப் பசிக்குது தம்பி. அதுக்கு ஏதாவது வழி இருக்கான்னு முதல்லே பாப்போம்" என்று கூறிக்கொண்டே கிராமத்தை நோக்கி நடந்தான்.

அனைத்துத் தெருக்களும் வெறிச்சோடிக் கிடந்தன. ஆளில்லாக் கல் மண்டபத்தின் படிக்கட்டுகளில் வரைந்திருந்த ஆடு புலி ஆட்டத்தின் முக்கோணக் கோடுகளில் சோழிகள் சிதறியிருந்தன. நிசும்பன் மண்டபத்தின் மேல் ஏறி நின்று பார்த்தான். கிழக்குப் பக்கம் சிறிய கோயில் கோபுரம் தெரிந்தது. மற்றபடி சிறிய கிராமம்தான். மண்டபத்தில் இரவு தங்கிவிட்டுக் காலையில் சென்று விடலாம் என்று இருவரும் தீர்மானித்திருந்தார்கள். பசி

அவர்களிருவரையும் முழுவதுமாகத் தின்று தீர்த்துக்கொண்டிருந்தது. அரை மயக்கத்தில் இருந்த சும்பனுக்குக் கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது. இருவரும் தூக்கம் வராமல் கால் போன போக்கில் நடந்து ஒரு வீட்டின் திண்ணையில் வந்தமர்ந்தார்கள்.

“அம்மா, வீட்டிலே யாராவது இருக்கீங்களா?” நிசும்பனின் கம்பீரமான குரலைக் கேட்ட ஒரு முதியவள் கதவைத் திறந்து வெளியே வந்து பார்த்தாள். எதுவும் கூறாமல் உள்ளே சென்றாள். திரும்ப வரும்போது சிறிய மண் தட்டில் நான்கு சோளக்களி உருண்டைகளுடன் நெல்லி ஊறுகாயும் கொண்டு வந்தாள்.

அவர்களிருவரும் சாப்பிட்டு முடிக்கும் வரை திண்ணையிலேயே பொறுமையாகக் காத்திருந்த அந்த முதியவள், “நாளைக்கு ஏரிக்காத்தான் கோயில்லே கொடியேத்தம், தெரியுமில்லை. அப்புறம் ஊரை விட்டுப் பத்து நாளைக்கு யாரும் வெளியே போகக் கூடாது. திருவிழா முடியறவரைக்கும் ரெண்டுபேரும் இங்கேயே படுத்துக்கலாம். எங்களுக்கும் ஒரு பாதுகாப்பா இருக்கும்,” என்று கூறினாள்.

முதியவளின் கழுத்தில் அணிந்திருந்த கட்டை விரல் அளவு தடிமனான தங்கக் கொடி சும்பனின் கண்களில் பட, நண்பனைப் பார்த்து ரகசியமாகக் கண்ணடித்துச் சிரித்தான். முகத்தைச் சுளித்த நிசும்பன் கண்களால் சும்பனைக் கண்டித்தான். முதியவளிடம் தொடர்ந்து பேச்சுக் கொடுத்தான்.



“ஊருக்குள்ளே ஏதாவது பிரச்சினையா பாட்டி?” நிசும்பனின் கேள்விக்கு முதியவள் உடனே பதில் கூறாமல் மீண்டும் வீட்டினிற்குள் நுழைந்தவள் மண் கலயங்களில் இரண்டு பேருக்கும் நீர்மோர் கொண்டு வந்து கொடுத்தாள்.

“ஆமாய்யா, பெரிய பிரச்சினைதான். நாளைக்கு ஏரிக்காத்தான் கோயில்லே கொடியேத்தம். கொடியேத்தற அன்னைக்குத் தனி பூஜைக்கு ஒரு ஆளைத் தேடிக் கண்டுபிடிச்சாகணும். இதுவரைக்கும் ஊரிலே யாரும் முன்னே வந்து நிக்கலை.”

“எந்த ஆளு பாட்டி?” நிசும்பனின் கேள்விக்கு நீண்ட பதிலளித்தாள் முதியவள்.

“அஞ்சு வருஷமாக் கிராமத்திலே துளிகூட மழை இல்லை. கொஞ்ச விவசாய நிலமும் காஞ்சு வரண்டு போச்சு. திருட்டு பயம் வேறே, அதிகமாயிடுச்சு. விடிஞ்சாக் கொலை, கொள்ளைன்னு நடக்கக் கொஞ்ச பேரு ஊரைக் காலி பண்ணிட்டுப் போயிட்டாங்க. இந்தப் பிரச்சினைக்கு எங்க ஊர் சாமியாடி ஒரு தீர்வு சொன்னாரு. யாராவது ஒரு ஆளு கொடியேத்தம் அன்னைக்கு மனமுவந்து ஏரிக்காத்தானை வேண்டிக் கழுத்துலே செம்பங்கி மாலை போட்டுக் குளத்துக்கு நடுவே இருக்கும் மண்டபத்திலே அன்னம் தண்ணி எதுவும் இல்லாம மழை வரும் வரை தனியா பூஜையில் இருக்கணும். அப்படி பூஜை செஞ்சா நிச்சயம் மழை வருமாம். எனக்கு இப்போ எழுவது வயசாகுது. எனக்கு விவரம் தெரிஞ்ச வயசிலே எங்கம்மா இது மாதிரி பூஜை ஊரிலே நடந்ததாச் சொல்லக் கேட்டிருக்கேன்”.

“அப்படியும் மழை வரலைன்னா என்ன பாட்டி செய்வாங்க? அப்போ மழை வேண்டிப் பூஜையிலே இருக்கிறவரோட நிலமை?'' இடைமறித்துக் கேட்டான் சும்பன்.

“மழைக்காகக் காப்பு கட்டிப் பூஜை செஞ்சவன் அப்பாலே சாமியாயிடுவான். அடுத்து மழைவரும் நாள் வரை காத்திருந்து அவனைப் பொதைச்ச இடத்திலே நடுகல் சாத்திச் சாமியாக்கிடுவாங்க. அவன் குடும்பச் செலவு முழுசையும் ஊரே

ஏத்துக்கிட்டு வேண்டிய படியும் அளப்பாங்க".

உடனே நிசும்பனிற்கு ஏரிக்காத்தான் கோயிலில் தான் பார்த்து வியந்த நடுகல் நினைவிற்கு வந்தது.

"சரி பாட்டி, அப்போ நாங்க கிளம்பறோம். இன்னைக்கு ராத்திரியே நாங்க ஊருக்குப் போயாகணும்" என்ற சும்பன் தன் நண்பனை இழுத்துக்கொண்டு வீட்டை விட்டு வேகமாக வெளியேறினான்.

விடியும் வரை அந்தக் கிராமத்தில் யாரும் தூங்கவேயில்லை. அடுத்த நாள் காலை சூரியஉதயத்திற்கு முன்பே கொடியேற்றத்திற்கான பூஜை முடிந்து கோயிலிற்கு வந்திருந்த அனைவரும் காப்பு கட்டிக்கொண்டார்கள். குளக்கரை பூஜைக்காக யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற குழப்பத்தில் இருந்த கோயில் பூசாரி மற்றும் ஊர்ப்பெரியவர்கள் இதற்கு மாற்று வழி ஏதாவது இருக்கிறதா என்று பேசிக்கொண்டே குளத்தை நோக்கி நடந்தார்கள்.

பெண்கள் அனைவரும் ஒன்று கூடிக் குளத்தின் நடுவில் இருக்கும் மண்டபத்தைக் கழுவி, நான்கு தூண்களிலும் மாவிலை கட்டி, சந்தனம் குங்குமம் வைத்து நடுவில் அமைந்திருந்த பீடத்தில் பன்னீர் விட்டுத் துடைத்துப் பூக்களால் அலங்கரித்து வைத்திருந்தார்கள். அந்தப் பீடத்தின் மேல்செம்பங்கி மாலையை வைத்து வணங்கிவிட்டு வந்தார்கள்.

குளத்தைச் சுற்றிலும் கிராம மக்கள் ஆவலுடன் கூடியிருந்தார்கள். அப்போது யாரும் துளியும் எதிர்பாராவண்ணம் கூட்டத்தில் இருந்து ஒருவன் வெறி கொண்டவனைப் போல மண்டபத்தை நோக்கி ஓடினான். மற்றொருவன் கத்திக்கொண்டே அந்த ஒருவனை நோக்கி ஓடி வந்து பிடிப்பதற்குள், அந்த ஒருவன் மண்டபத்தில் வைத்திருந்த செம்பங்கி மாலையை எடுத்துக் கழுத்தில் அணிந்து பீடத்தை மூன்று முறை சுற்றி வந்து பயபக்தியுடன் அமர்ந்துகொண்டுகண்களை மூடினான். குழுமியிருந்த மக்கள் அனைவரும் ஏரிக்காத்தான் கோயிலை நோக்கி இரண்டு கைகளையும் உயர்த்திக் குரலெழுப்பிப் பயபக்தியுடன் வணங்கினார்கள்.

"அண்ணே இப்படிப் பண்ணிட்டீங்களே! வீட்டிலே நான் என்ன பதில் சொல்லுவன்" என்று புலம்பிக்கொண்டே நிசும்பன் மழைக்காக வேண்டி அந்த குளத்தையே தினமும் சுற்றி வந்தான். யார் அழைத்தும் அந்த இடத்தை விட்டுப் போகாமல் ஒரு பைத்தியக்காரனைப் போல அடிக்கடி வானத்தைப் பார்த்து வேண்டிக்கொள்வதும், அடுத்து மண்டபத்தில் அமர்ந்திருக்கும் சும்பனைக் கவனிப்பதுமாகவே இருந்தான். கிராமத்தில் உள்ளவர்கள் எவ்வளவு வற்புறுத்தியும் எதுவும் உண்ணாமல் பட்டினியாகவே இருந்தான்.


கொடியேற்றம் முடிந்து இருபத்தி இரண்டாம் நாளின் விடியல் முதல் மழைத்துளியைக் கொண்டு வந்தது. மழையில் நனைந்துகொண்டே ஊர் மக்கள் குளத்தில் இருக்கும் மண்டபத்திற்கு விரைந்து வந்தார்கள். சுயநினைவில்லாமல் தூணில் சாய்ந்து இருந்த சும்பனைக் கைத்தாங்கலாகத் தூக்கி வந்தார்கள். அவனைச் சோதித்துப் பார்த்த ஊர் வைத்தியர் "அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை. கொஞ்ச நேரத்தில் சரியாகிவிடுவான்" என்று வாக்களித்தபிறகே அனைவரும் அங்கிருந்து கலைந்து போனார்கள். மெதுவாக சுய நினைவிற்கு வந்தவன் முதலில் "நிசும்பன், நிசும்பன்" என்று பிதற்றுவதைக் கேட்ட வைத்தியர் அவனைப்பற்றிப் பலரிடம் விசாரித்தார். இருவருக்கும் உணவு இடம் கொடுத்த அந்த முதியவள் முழுவிபரங்களையும் வைத்தியரிடம் கூறினாள். மக்கள் திரண்டு நிசும்பனைத் தேட ஆரம்பித்தார்கள். ஏரிக்கரையின் கிழக்குப் பகுதியில் நிசும்பன் இறந்து கிடந்தான். அவன் கண்கள் முழுவதுமாகத் திறந்து வானத்தையே வெறித்துப் பார்த்தவாறு இருந்தது.

ஊர் மக்கள் ஒன்று கூடி நிசும்பனுக்கு வீரக்கல் எடுக்கத் தீர்மானித்தார்கள். நடவேண்டிய கல்லை மலையிலிருந்து தேர்ந்தெடுத்துக்கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டுவந்த கல்லில் நிசும்பனின் உருவத்தைப் பொறித்துக் குளத்தில் நீராட்டினார்கள். அந்த வீரக்கல்லைக் குளத்தின் கிழக்குப் பக்கம் நட்டு அதற்கு மயிற்பீலிகளையும் மாலைகளையும் சாற்றிச் சிறப்புச் செய்தார்கள். மழை வேண்டிக் காத்திருந்த கிராம மக்களுக்காகவும், தன் நண்பனிற்காகவும் உயிர் துறந்த நிசும்பனின் தியாகத்தைக் கிராம மக்கள் பல தலைமுறைகளாகத் தாலாட்டுப் பாட்டாகவும், அறுவடைப் பாட்டாகவும் இட்டுக் கட்டி வாழ்த்திப் பாடிக்கொண்டே இருந்தார்கள். ■

• கவி : பழநிபாரதி
சித்திரம் : அழ.ரஜினிகாந்தன்





அபூர்வா
வாழை
செம்பருத்தி
துளசி
மஞ்சள்
கற்றாழை மண்ணின்
மரபியல் நீ..
பன்னாட்டு நிறுவனங்களின்
நிழல் விழாத கிராமத்தில்
பருத்திப் புடவை கட்டி
மருதாணி விரல்களால்
கொசுவம் அடுக்கி
தலை நிறைய பூ வைத்தவளே
உன் பூக்கள் உதிராதிருக்கட்டும். ■



• பிருந்தா சாரதி

# காட்சிப்பிழையில் கண்டெடுத்த கவிதைகள்



நூல் : இருளும் ஒளியும்

ஆசிரியர் : பிருந்தா சாரதி

வெளியீடு : படைப்பு பதிப்பகம்

இரண்டாண்டுகளுக்கு முன் மனம் வெறுமையாக இருந்த நாளொன்று. என்ன செய்வதென்று தெரியாமல் இணையத்தில் பொதுவாகப் படித்துக்கொண்டிருந்தேன். அது என்னை எம்.எஃப்.உசைன் ஓவியங்களை நோக்கி அழைத்துச் சென்றது. விதவிதமான குதிரை ஓவியங்கள் என் கண்ணில் பட்டன.

எத்தனைவிதமான உணர்ச்சிகள்... கற்பனைகள்... வண்ணங்கள்... என்னை வியப்பில் ஆழ்த்தியது அந்தக் குதிரை ஓவிய வரிசை.

அதுபோல் ஒரே கருப்பொருளைக் கொண்டு நாமும் கவிதை எழுதிப் பார்க்கலாம் என்ற எண்ணம் தோன்ற, எதைக் கருப்பொருளாக வைத்து எழுதலாம் என்று யோசிக்கத் தொடங்கினேன்.

அதன் விளைவாக முகநூலில் 'வண்ணத்துப் பூச்சி' என்ற தலைப்பில் தினம் ஒன்றாக எழுதினேன். பிறகு, 'கரப்பான்பூச்சிகள்'.

அவற்றைத் தொடர்ந்து சென்ற ஆண்டு எழுதியவையே விளக்கு, இருள் என்ற தொடர் கவிதைகள். ஒவ்வொன்றிலும் நூறு நூறு எழுதினேன். வண்ணத்துப் பூச்சியிலும், கரப்பான்பூச்சியிலும் வராத லாவகம் விளக்கிலும் இருளிலும் ஓரளவுக்கு வந்தது. அவற்றில் சிலவற்றை ஒதுக்கிவிட்டுத் தேர்ந்தெடுத்துத் தொகுத்தவையே 'இருளும் ஒளியும்' என்ற தலைப்பில் இப்போது நூலாக வெளிவந்துள்ளது.

காலம் ஒரு கரையில்லாத மாய சமுத்திரம். அதில் மாறி மாறி வீசும் அலைகள்தான் இரவும் பகலும். அந்த அலைகளின் துளிகளில் மிதந்தபடி இந்த மாபெரும் பிரபஞ்ச இயக்கத்தில் நாம் காணும் காட்சிப்பிழையே இருளும் ஒளியும். இதில் கை வைத்து ஒரு படைப்பை உருவாக்க எனக்கு அறிவும் இல்லை. அனுபவமும் இல்லை. ஆனால் ஆசை இருந்தது. அது கரையில் விழுந்து புரண்டது. அதன் மீது ஒட்டிய மணல் துகள்களே இந்தக் குறுங்கவிதைகள். ஆர்வக் கோளாறால் கரையில் கிடந்த கிளிஞ்சல்களையும் பொறுக்கி எடுத்து வந்துவிட்டேன். கடல் சிப்பிகள் சிலவும் கையில் கிடைத்தன.

என் மீது கருணை கொண்டு அலைகள் வீசி எறிந்த அன்புப் பரிசுகள் அவை. அவற்றில் ஒன்றிரண்டில் முத்துக்களும் மறைந்திருக்கலாம் என்பது என் நம்பிக்கை. ■

• மூ. சிவனேஸ்வரன்
முதுகலைத் தமிழ் இலக்கியம் இரண்டாமாண்டு,
அரசு கலைக் கல்லூரி, உடுமலை, திருப்பூர் (மா).

# கவிதை எனது காதலி



மூவேந்தர் முடி கொண்ட காலந்தொட்டு இன்று வரை யாருக்கும் முடி கொடாக் கொங்கு மண்டலத்தின் உடுமலையில் பிறந்தேன். கூலிக்கு மாரடிக்கும் சூழலுக்கு மத்தியில் வளர்த்தனர் பெற்றோர். ஆடம்பரம் ஆபத்தென்பதைக் கற்றுக் கொடுத்தனர். துவக்கக் கல்வி, தினைக்குளம் ஊராட்சிப் பள்ளி. சல்விபட்டி பஞ்சாயத்திற்கு உட்பட்ட மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு வரை முடித்தேன். மேல்நிலைக் கல்வி என்னைப் புறந்தள்ளியது. பற்றுக் கொண்ட காரணத்தால் இடறி விழவில்லை. எதிர்பார்த்த துறையில் இடமில்லை. கிடைக்கும் துறையை எதிர்பார்த்து உடுமலை அரசு கலைக் கல்லூரியில் இளங்கலைத் தமிழ் இலக்கியம் முடித்துத் தற்போது முதுகலையையும் முடிக்கவிருக்கிறேன்.

கவிதைகளின் மேல் மிகுந்த ஈடுபாடு. கவிதை எனது காதலி. எப்போதும் என்னைச் சிலாகித்துக் கொண்டிருப்பாள். அறிவுப் பசிக்கு எப்போதும் பற்றாக்குறைதான். மூன்றாம் வகுப்பு முதல் இப்போது வரை தமிழியற்புலத்தில் இயங்கி வருகிறேன். என்னை முதலாவதாக அறிமுகப் படுத்தியவர் துவக்கப்பள்ளித் தலைமையாசிரியர் திரு.ஆறுமுகம் அய்யா அவர்கள். எனக்கு இலக்கியக் கதவைத் திறந்து வழிகாட்டியவர் அவர். மூன்றாம் வகுப்புப் பயிலும்போது 53 மாணவர்களுக்கு மத்தியில் வள்ளுவப் பாட்டனின் முதல் முப்பது குறள்களை அவையேற்றினேன். கிடைத்த பரிசு ஐந்நூறு ரூபாய். தொடர்ந்தது இலக்கியமும் எமது இலக்கும். 2009 முதல் 2013ஆம் ஆண்டு வரை பள்ளிக்கல்வித் துறையின் மாவட்டக் கலை இலக்கியப் போட்டிகளின் பல்வேறு களங்களில் என்னை அறிமுகம் செய்துகொண்டேன். அவை அங்கீகாரம் தர மறுக்கவில்லை. மேல்நிலைக் கல்வியில் இலக்கியத்தோடு வழி நடத்திய இருவர் : தாவரவியல் ஆசிரியர் முருகானந்தம் அய்யா மற்றும் உடற்கல்வி ஆசிரியர் மனோகரன் அய்யா.

கல்லூரி வாழ்க்கை எனதிலக்கின் முனைப்பிற்கு இடுக்கண் இழைத்தது. முன்பு மொழிந்த கவிதைக் காதலி எப்போதாவது முத்தமிடுவாள். அவளது எச்சில் எனக்குள் கவிதையாக வெளிப்படும். இவள் மரபில் வந்தால் வரையறையோடு நிற்பாள், புதுமையென்றால் புத்தாக்கம் தருவாள்.

கல்லூரி வாழ்க்கையில் இரு பெரும் சாளரங்கள் எமக்கு வெளிச்சம் காட்டின. பேரா.குணசேகரன் அய்யா மார்க்சியத்தையும், மதிப்பெண் கல்வி மதிப்பிற்கு ஆகாதென்பதையும் விளம்பினார். பேரா. நா.வேலுமணி அய்யா நவீனத்துவத்தையும், மாற்றேற்றுச் சிந்தனையையும் தூண்டினார். எளியவனை இலக்கிய வலிமைக்கு ஆட்படுத்திய பெருமை அந்தப் பேராசான்களையே சாரும்.

கிட்டாதாயின் வெட்டென மற என்பதைப் போல் பாடத்திட்டம் எனக்கு வெகுளியூட்டியது. இருப்பினும் விளிம்பு நிலையிலாவது விழித்துக் கொள்ள முற்பட்டேன். பாடத்திட்டத்தின் 'கண்' தூசு நிரம்பிக் கிடந்தது. வெகுளித் தென்றல் வழிவிடுக்கத் தேர்ச்சி பெற்றேன்.

எனக்குள் ஒரு மாட்சியுண்டு, மேடையேறும் பழக்கம் வேண்டாமென்று துணிந்தேன். மாற்றாக மேடைதான் என்னை ஏற்(ற)க வேண்டுமென்று தணிந்தேன். இந்நிலையில் பல்வேறு வாய்ப்புகள் பற்றிக்கொள்ளப் பார்த்தன. பங்களிப்பே வேண்டாம் விருது தருகிறோம் என்பது போலப் பல. நான் வாங்குபவன் அல்ல பெறுபவன் என்ற வன்மை தடுத்தாட் கொண்டது.

மனமிணங்கிச் சென்ற போட்டிகளில் முதல் இரண்டிடத்தில் வெற்றிகளுண்டு. கவிதை, கட்டுரை, சிறுகதை, நாட்டுப்புறப் பாட்டிசை, தமிழ்த் தொண்டு, பொதுத்தொண்டெனப் பல்வேறு களங்களில் இயங்கி வருகிறேன். எனது முனைப்பின் முன்னுதாரணங்கள் இவை.

நீர்வற்றாக் கண்களோடு
நீரற்ற ஊர்களாய் நிரம்பி வழிகிறேன். ■

• கவி : கார்த்திகேயன் மாகா
சித்திரம் : அன்பழகன்

**நா**க்கு சில சொற்களை ஊதித் தள்ளுகிறபோது காற்று
அதைக் கடத்திக்கொண்டு திசை தேடுகிறது
பசிக்கு ஏங்கியவனின் வறட்சி சொல்விளிம்பில் தென்பட
அவை ஒரு தேன்கூட்டில் இளைப்பாறுகிறது
பருவத்தின் புடைத்த திமிர் ஒரு அலுமினியப்
பாத்திரமாய்ச் சகல பழக்கங்களின் சுவைகளை
ஊரெங்கும் தூற்றிப் போகையில் அடுத்த யுகத்
தொடக்கத்தின் வாய் கசப்பானது
பழங்களை ஊதி ஊதிப் பெரிதாக்கப் பார்த்தான்
அணுக் கழிவில் ஆல்கஹால் தயாரித்த விஞ்ஞானி ஒருவன்
அவர்கள் பனிப்பழத்தைக் கோடையிலும் சாப்பிடலாம்
என ஏக உரிமம் கொண்டு மெழுகு தடவச் சொன்னான்
ஆயுத வியாபாரி
இனி தனது கனிகளின் நிறத்தைத் தீர்மானிக்க இயலாக்
கையறு நிலையில் தனக்குத் தானே தீ மூட்டி எரிந்த எச்சம்
அமேசான் காட்டிற்கும் நீள்கிறது
எரியும் நெருப்பிற்குத் தனித்தனிப் பழங்களின் நிறம். ■



• ஜின்னா அஸ்மி

# காலத்தின் கல்வெட்டாய்க் கவிதைகள்..




**நூல் :** வான்காவின் சுவர்

**தொகுப்பாசிரியர் :** ஜின்னா அஸ்மி

**வெளியீடு :** படைப்பு பதிப்பகம்

வயதாகும்போது இன்னும் வலிமை அதிகரிக்கும் வாழ்வு மொழிக்கு மட்டும்தான் உண்டு. ஒரு மொழியை வைத்தே அந்தச் சமூகத்தின் வரலாற்றை வரையறுத்துச் சொல்லிவிட முடியும். அந்த வரலாற்றுச் சரித்திரத்தை ஆதியிலிருந்து இன்றும் தாங்கி நிற்பன கல்வெட்டுக்களே. அதனால்தான் இணைய வசதிகள் பெருகிவிட்ட இந்நாட்களில் கூட கவிதைகளைத் தாங்கிநிற்கும் மின்னிதழிற்குக் கல்வெட்டு என்று பெயர் சூட்டி அடிக்கல் நாட்டியது படைப்புக் குழுமம். படைப்பாளர்களால் குழுமத்தில் பதிவேற்றப்பட்ட சிறந்த கவிதைகளை மாதந்தோறும் மின்னிதழாக வெளியிட்டுப் படைப்பாளிகளின் அங்கீகாரத்தை இலக்கிய மேடையில் அரங்கேற்றம் செய்தது. அப்படி அங்கீகரிக்கப்பட்ட படைப்புகளை மொத்தத் தொகுப்பாக்கித் தருவதே வான்காவின் சுவர்.

எல்லா வசந்தங்களையும் கொடுக்கும் இயற்கையால்கூட எல்லாக் காலங்களிலும் வசந்தங்களைக் கொடுக்க முடியாது. ஆனால் எழுத்தால் கொண்டு வர முடியும் என்பதே இலக்கியத்தின் ஆகப்பெரும் சக்தி. அப்படிப்பட்ட இலக்கியத்தின் வாயிலாக உலகத்தையே ஒன்றிணைத்திருப்பது இந்நூலின் பலம்.

படைப்புக் குழுமத்தின் சொந்தப் பதிப்பாக வெளிவரும் நூல் இது. ■

படைப்பு

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்



**ஆதரவளித்துவரும் அனைத்து வாசிப்பாளர் அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்**